www.tamilarangam.net

# அதிர்வுகள் : அசைவுகள்

## நெஞ்சிலும் நிலத்திலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிர்வுகள் : அசைவுகள்

## நெஞ்சிலும் நிலத்திலும்

கட்டுரைகள், கவிதைகள்

- ★ தேசிய இனச்சிக்கல் - தமிழ் ஈழம்
- ★ தமிழ்க் கல்வி, வள்ளலார் அருள்நெறி
- ★ புதிய தமிழ் இலக்கியம் - நூல் மதிப்புரை
- ★ தமிழ்நேயம் - அகமும் புறமும்

SEELAN BOOKS ★ NORWAY ★ SIGNATURE

தமிழ்நேயம்
123, காளீசுவரர் நகர்
கோயமுத்தூர் - 641 009.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை
# மீண்டும் "தமிழ் நேயம்"

சில திங்கள்களாகப் பலமுறை சிந்தித்து, நண்பர்கள் சிலரோடு கலந்து கொண்டு மீண்டும் தமிழ் நேயத்தைக் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்தேன். நண்பர்களுக்கும் பெரியவர்களுக்கும் மடல் எழுதினேன். படைப்பென்ற அளவில் மட்டுமல்லாமல் செலவுத் தொகையிலும் பங்களிப்பு வேண்டும் என்று எழுதினேன். தமிழ் / தமிழர் நலம் பேசும் இதழ்களிலிருந்து தமிழ் நேயம் எப்படி தீவிரமாக வேறுபடுகிறது என்பதையும் நண்பர்கள் / பெரியவர்கள் அறிவார்கள். இதன் காரணமாகவும் தமிழ் நேயத்தோடு ஒத்துழைக்க சிலர் முன் வந்தார்கள். பலர் உடனடியாக ஆதரவு தருவார்கள் என்று இன்றைய தமிழ்ச் சூழலில் எதிர்பார்ப்பதற்கு இல்லை. எல்லாவற்றையும் புரிந்து கொண்டுதான் தமிழியக்கத்தில் நாம் பணிபுரிய வேண்டி இருக்கிறது. தமிழ் நேயம் வழியாகவும் தமிழியக்கம் முன் செல்ல வேண்டும்.

ஏனது மடலுக்கு உடனடியாக ஒத்துழைப்பது என தெரிவித்ததோடு, சில பெரியவர்கள் மனமுவந்து பொருள் உதவி செய்தார்கள். அறிஞர் ம.இலெ.தங்கப்பா, பேராசிரியர் க.ப. அறவாணன், சகோதரி குழந்தை தெரசா, டாக்டர் ஜீவானந்தம் முதலியவர்கள் இத்தகையவர்கள். ஆண்டுக்கு ரூபாய் 100 என்ற முறையில் இதுவரை ஒரு பத்துபேர் தொகை அனுப்பினார்கள்.

பெயர் குறிப்பிடுவதில் மனச் சங்கடம் உண்டென்றாலும் நண்பர்கள் / பெரியவர்கள் மன்னிக்க வேண்டும். பட்டியல் வெளியிடுவதன்மூலம் பணம் சேரும் என்றாலும் என்னால் இதைக் கடைப்பிடிக்க இயலாது. இதைப் போல விளம்பரம் சேகரிப்பதிலும் எனக்கு விருப்பம் இல்லை. இரண்டு மாதத்திற்கு ஒரு இதழ் என்று முன்பு நான் கருதினேன். பணம் குறைந்த நிலையில் இது சாத்தியமில்லை எனவே மூன்று / நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு சிறு வெளியீடு என்று இனிச் செயல்பட முடியும் என்று நம்புகிறேன்.

தமிழ், தமிழர், தமிழ் வரலாறு, தமிழ் இலக்கியம், தமிழ்க் கலைகள், தமிழ் வேளாண்மை, தமிழ்க் கல்வி, தமிழ் மருத்துவம் என்று எத்தனையோ களங்களில் நாம் செயல்பட வேண்டி உள்ளது. வரலாற்றில் தமிழன் தன்னைத் திரட்டிக் கொண்டு உறுதியோடு முன் செல்ல வேண்டும். இதற்கு ஆயிரம், பத்தாயிரம் என்ற கணத்தில் நாம் திரள வேண்டும். இத்தகைய திரட்சிக்குத் தமிழ் நேயம் அக்கறையோடு பணி புரியும். எல்லா வகைகளிலும் தமிழர்கள் / பெரியவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

தற்பொழுது வெளிவரும் இந்தச் சிறு வெளியீட்டில் உள்ள சில கட்டுரைகள் பற்றிச் சுருக்கமாக இங்கு சொல்ல வேண்டும். தமிழ் ஈழம் உருவாவது நமக்கு இலக்கு என்றாலும் தற்போதைக்கு சுயநிர்ணய உரிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றும் தாயக உரிமை என்ற கோரிக்கையோடு நிறுத்திக் கொள்கிறார்கள். இவையும் கூட எந்தளவுக்கு சாத்தியம் என்ற உறுதியில்லை. எனினும் இவை இல்லாமல் முடியாது.

தமிழ் ஈழச் சிக்கல் குறித்து நாம் இதுவரை கொண்டிருக்கும் பார்வையோடு முடங்கிவிடுவதும் இயலாது. சிலவற்றில் நம் சிந்தனை விரிவடையவில்லை. ஈழத் தமிழ் நண்பர் திரு. இராவணா அவர்களின் நீண்ட கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம். எனக்கு வியப்புத் தந்த கட்டுரை. மார்க்சியத்தோடு ஒத்துச் செல்லும் பார்வை இக் கட்டுரையில் இடம் பெறுகிறது. நண்பர்கள் கவனத்தோடு படிக்குமாறு வேண்டுகிறேன்.

தமிழ்ப் பயிற்று மொழி ஆக வேண்டும் என்பதில் ஆர்வம் என்பதைக் காட்டிலும் இப்பொழுதெல்லாம் நம்மை ஒரு வெறி வசப்படுத்தி உள்ளது. செயல்பட வேண்டியவர்கள் செயல்படாததன் விளைவே இந்த வேகம். நம் மரியாதைக்குரிய பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி, திருமதி. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் கட்டுரைகளும் இந்த வெளியீட்டில் இடம் பெறுகின்றன. வள்ளலார் குறித்துத் தனது ஒரு அறிய ஆய்வை இங்கு சுருக்கமாகத் தந்துள்ளார் அறிஞர் கி. சுப்ரமணியம்.

தமிழ்க் கல்வி குறித்து நமக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு. குழந்தைகளிடம் அன்போடு அக்கறை செலுத்தும் ஆசிரியர்களின் அனுபவங்கள் நம் மரியாதைக்குரியவை. ஆங்கிலப் பள்ளி ஒன்றில் பணிபுரியும் சகோதரி ஷீபா இப்படி ஒரு நல்ல கட்டுரையைத் தந்துள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்தின் மீது நமக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டைப் போலவே புதிய தமிழ் இலக்கியத்தையும் போற்றுவது நம் கடமை. இவ் வகையில் அண்மையில் வெளிவந்த சில நாவல்கள் குறித்த கட்டுரைகள் இந்த வெளியீட்டில் வெளிவருகின்றன. இவற்றோடு "தமிழ் நேயம் – அகமும் புறமும்". இன்னும் நிறைய எழுதத்தான் ஆசை. நண்பர்களின் அன்பையும் ஆதரவையும் பெரிதும் வேண்டுகிறேன்.

- ஞானி
மார்ச் 2001

**காற்றாய் ... புயலாய் ...**

பெண் எழுத்தாளர் சிறுகதைகள் 15

பக்கங்கள் 148 விலை ரூ. 30/–

நிகழ், 123, காளீசுவரர் நகர், கோவை – 641 009.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனச் சிக்கல் - தமிழ் ஈழம் - இன்னொரு பார்வை

- இராவணா

## I

இலங்கையின் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா 1994 –இல் முதற் தடவையாக ஆட்சிக்கு வந்தபோது யுத்தத்தை நிறுத்தி, பேச்சுவார்த்தைவாயிலாக இனப் பிரச்சனையைத் தீர்ப்பேன் என்றார். முன்னதாக ஆட்சியிலிருந்து அப்போது எதிர்க்கட்சியாக ஆகிவிட்ட ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அதனை எதிர்த்தது. இதன்மூலம் நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடப் போகிறார் ஜனாதிபதி என்று பிரச்சாரப்படுத்தினர் எதிரணியினர். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே நாடு பிரிந்து போய்த் தமிழீழம் ஒன்று தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது, அதனை மீண்டும் இணைத்து ஒரே நாடாக ஆக்குவதற்கே நான் முயல்கிறேன் என்று ஜனாதிபதி சொன்னார். ஒரே நாடாக்குவதைப் பேச்சுவார்த்தைமூலம் சாதிக்க முடியாமற் போனதும் சமாதானத்துக்கான யுத்தம் தொடுக்கப்பட்டு, மிகப் பெரும் விலை கொடுத்து யாழ்ப்பாணத்தை அரசு 'மீட்டுக்கொண்டது' 1995 இல். இன்றுவரை மிகப் பெரிய விலையை அரசு கொடுத்தபடிதான் யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இது இராணுவ ரீதியில் முட்டாள்தனமான செயலென இராணுவத் தளபதிகள் பகிரங்கமாகவே கூறி வருகின்றனர். முதலில் முழுமையாக வன்னியைக் கைப்பற்றித், தரைமார்க்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் ஊடாக யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதில் எந்தப் பயனுமில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டது. இராணுவ நோக்கில் அவர்களது கருத்துச் சரி என்பதைச் சென்ற ஆண்டில் அரசு ஆனையிறவு இராணுவ முகாமை இழந்தபோது உணர்ந்திருக்க முடியும். மிகப் பாதுகாப்பான இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருந்த கேந்திர முக்கியத்துவமிக்க ஆனையிறவை இராணுவத்தால் தக்க வைக்க முடியவில்லை; விடுதலை வேட்கை உந்த வீராவேசத்துடன் போராடித் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாமைக் கைப்பற்றியமை தமிழர் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய சாதனை என்றே சொல்ல வேண்டும்.

அதுவல்ல, அதைவிடத் தொடர்ந்து முன்னேறிய புலிகள்வசம் யாழ்ப்பாணம் வீழ்ந்துவிடும் தறுவாயில் இருந்தது என்பதுதான் மிக மிக முக்கியமான அம்சம். ஆயினும் கைப்பற்ற முடியவில்லை. முடியாமைக்குக் காரணம் புலிகளின் இராணுவப் பலவீனமல்ல; அன்றைய நிலையில்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்திலிருந்த இராணுவம் புலிகளின் பலம் கண்டு சரணடைந்துவிடும் நிலையில் இருந்தது. அப்படியிருந்தும் திடீரென யுத்தம் நிறுத்தப்பட்டது. இப்போது இராணுவம் இழந்த பகுதிகளை மீட்கும் நிலையில் முன்னேறிக் கொண்டிருக்கிறதாம். அதி நவீன ஆயுதங்கள் வந்து சேர்ந்து இராணுவத்தின் பலம் அதிகரித்துள்ளதால் மீண்டும் ஆனையிறவை மீட்பதற்காக முன்னேறப் போகிறார்களாம்; அது இயலாமல் இருக்கிறது என்பது வேறு விடயம்.

இராணுவ ரீதியாக மிகப் பலத்துடன் முன்னேறிய புலிகள் யாழ்ப்பாண முற்றுகையைத் திடீரெனக் கைவிட்டது ஏன் என்பதுதான் பிரதானமான கேள்வி. இது 2000–ஆம் ஆண்டு மே மாத நிலவரம்; ஆறு மாதங்களின் பின் மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் இதற்கான காரணத்தைக் கூறியிருந்தார். இந்தியா உட்படப் பல நாடுகள் இலங்கை அரசுக்கு உதவிக்கரம் நீட்டியதால் யாழ்ப்பாணத்தை மீட்பதைத் தற்காலிகமாகக் கைவிட நேர்ந்ததென்றார். இந்தியா உட்பட உலக நாடுகள் தொடர்ந்தும் இதுபோல இலங்கை அரசுக்கு உதவிய போதிலும் யாழ்ப்பாணத்தை மீட்போம் எனவும் அந்த மாவீரர் தின உரையில் வே. பிரபாகரன் குறிப்பிட்டார்.

விடுதலைப் போராட்டத்திற்கு உலக நாடுகள் ஆதரவு நல்கும் நிலையில்தான் ஆக்கிரமிப்பிலிருந்து சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என்பது பொது நியதி. குறைந்தபட்சம் சர்வதேச ரீதியில் உலக மக்களின் மானசீக ஆதரவு கிடைத்தாக வேண்டும். இவையிரண்டும் தமிழீழ மக்கள் சார்பில் இல்லாத போதிலும் போராடி வெல்வோம் என அந்தப் போராட்டத்தின் தலைவர் சூளுரைப்பது அவர்களது இராணுவ வல்லமையையும் மனோதிடத்தையும் வெளிப்படுத்துகிறது எனலாம். அவை மட்டுமே வெற்றியை ஈட்டித் தரப்போதுமானவையல்ல. அகநிலை ரீதியாக அவர்கள் பலம் வெற்றியீட்டப் போதுமானதாக அவர்களுக்குத் தெரிகிறது. ஏற்றதான புறநிலைச்சூழல் அமையாதபோது அகநிலை வாய்ப்பு மட்டும் போதுமானதல்ல. கல்லொன்று எந்தப் புறநிலைச் சாத்தியமிருந்தாலும் குஞ்சாக மாட்டாது என்பது போன்று, முட்டையைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்றாலும் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவருவதற்கு ஏற்ற வெப்பநிலையாகிய புறநிலையும் அவசியமானதாகும்.

இப்போதுள்ள சாதகமற்ற புறநிலை தொடரினும், வெல்வோம் என்ற கூற்றின் அவசரத் தன்மையை இனிமேல் புரிந்துகொண்டு, உலக அபிப்பிராயத்தை வென்றெடுக்க ஏற்ற அரசியல் தந்திரோபாயங்களைக் கையாள முடியுமா? ஒன்று, அதற்காக அவசியம் இன்னமும் புரிந்துகொள்ளப்படவில்லை; அவ்வாறு புரிந்துகொள்வதற்கு ஏற்ற அரசியல் நோக்கு புலிகள் தலைமையிடம் இதுவரை இருக்கவில்லை. இரண்டு, புரிந்துகொண்டு செயலில் இறங்கினாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெகு சீக்கிரத்தில் உலக அபிப்பிராயத்தை வென்றெடுக்கக் கூடிய வாய்ப்புகளில்லை. அதற்கு மிக நீண்டகாலம் மிகுந்த நிதானத்துடன் செயற்பட வேண்டும். ஓயாத அலைகளை எழுப்புவதிலேயே தமது இருப்பைப் பேணும் புலிகளின் இயல்புக்கு இது பொருத்தமில்லாதது. தவிர ஈழப்போர் இன்னமும் நீண்டு செல்ல அனுமதிக்க நேர்ந்து, இராணுவ பலச் சமநிலையில் பாரிய மாற்றமும் நிகழ்ந்துவிட இடமுண்டு. இந்த இராணுவப் பிரச்சனையைகளையே புலிகள் தலைமை கவனத்தில் எடுக்கும் என்பது அதன் விசேட குணாம்சம்.

சென்ற வருடம் யாழ்ப்பணத்தைக் கைவிட்டுச் சரணடையத் தயாராக இருந்த இராணுவம் இன்று முன்னேறித் தாக்கக்கூடிய வலுமையைப் பெற முடிந்தது எவ்வாறு? ஒரே காரணம், இந்தாருங்கள் வந்து யாழ்ப்பாணத்தை பிடியுங்கள் என்று சொன்னாலும் புலிகள் வரப்போவதில்லை என்ற உண்மையைப் புரிந்து கொண்டமைதான். ஏன் என்பது முக்கியமில்லை இப்போது, எவ்வளவு தான் இராணுவ பலம் இருந்தாலும் முடியாமல் இருக்கிறது என்பதுதான் உதைக்கிற விடயம்.

நீண்ட காலத்துக்கு இழுபட்டால் உதைக்கிற சமாச்சாரங்கள் இன்னும் அதிகமாகும். அதில் கடைசியாகப் புலிகள் பெரிதும் அக்கறை செலுத்தும் இராணுவ பலத்தை இழப்பது என்பதும் வந்து சேரும். இத்தகைய நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு ஏதுவாக யுத்த நிறுத்தத்தைப் புலிகள் அறிவித்துச் சர்வதேச ரீதியான கவன ஈர்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். (இது உலக அபிப்பிராயத்தை அரசியல் ரீதியாக வென்றெடுத்தல் எனும் நீண்டகால நோக்கிலானதல்ல. இராணுவ பலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உடனடி நலன் கருதித்தான் என்பதைக் கவனித்தல் அவசியம். இப்படிக் கூறுவது, அடுத்தவொரு பாரிய யுத்தத்துக்காகவே இந்த யுத்த நிறுத்தம் என்று கூறுகிறவர்களை ஒத்த குறுகிய அர்த்தத்தில் அல்ல). பேச்சுவார்த்தை வாயிலாகப் பிரச்சனையைத் தீர்க்க முன்வந்திருப்பதைப் புலிகள் அறிவித்திருப்பது நல்ல சகுனம். இனிமேல் தமிழீழ எல்லையைத் தீர்மானிக்கும் பேச்சுவார்த்தை ஒன்றிலேயே ஈடுபட முடியும் என்றவர்கள், 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' எனப் பிரகடனப்படுத்தி உறுதியாகப் போராடிக் கொண்டிருப்பவர்கள், தமிழீழத்துக்கு அடுத்துள்ள ஒரு தீர்வை ஏற்கத் தயார் எனச் சம்மதித்திருக்கிறார்கள்.

அவர்கள் ஒருபோதும் தமிழீழத்தைக் கைவிட்டு அடுத்த மட்டத்திலான ஒரு தீர்வுக்கு இறங்கி வரமாட்டார்கள்; அடுத்த ஒரு பலமான தாக்குதலுக்குத் தயாரிப்பதற்காகவே இந்த யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் எனச் சில அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்; அவர்கள் மட்டுமல்ல இலங்கை அரசும் அப்படித்தான் கூறுகின்றது. முன்னைய அனுபவங்கள் இதனையே

www.tamilarangam.net

உறுதிப்படுத்துகிறது எனவும் வலியுறுத்துகிறது அரசு; இன்றைய பாரிய மாற்ற நிலையைக் கவனத்திற்கொள்ளாமல் இவ்வாறு விதண்டாவாதம் செய்கின்றனர். புலிகளுக்குப் புரியக்கூடிய ஒரே மொழி யுத்தமே எனக்குகூறிச் சண்டையைத் கவனத்திகொள்ளாமல் இவ்வாறு விதண்டாவாதம் செய்கின்றனர். புலிகளுக்குப் புரியக்கூடிய ஒரே மொழி யுத்தமே எனக் கூறிச் சண்டையைத் தொடர்கிறது இலங்கை அரசு. உண்மையில் புலிகள் சமாதானத் தீர்வுக்குத் தயாரெனில் பேச்சுவார்த்தைக்கு முதலில் வரட்டும், பேச்சுவார்த்தை தொடங்கப்பட்ட பின்னர் யுத்த நிறுத்தம் பற்றி முடிவு செய்யலாம் என்றும் பிடிவாதத்தில் இருக்கிறது அரசு. உண்மை, நிலையைப் புரியாமல், அல்லது புரிந்து கொண்டாலும் அதை வெளிக் காட்டாமல், புலிகள் இடர்ப்படும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களை ஒடுக்கிவிட அரசு கபடத்தனமாய் முயல்கிறது. இது வெறும் புலி ஒடுக்குமுறை அல்ல, அப்பட்டமான தேசிய இன ஒடுக்குமுறை.

இத்தகைய சூழ்நிலையில் மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், பேச்சுவார்த்தைமூலமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்ற சுயாட்சி அமைப்பொன்று ஒற்றையாட்சி முறையற்ற இலங்கைக்குள் வென்றெடுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்; அதற்காக வீதிகளில் இறங்கி ஓங்கிக் குரல் கொடுக்கிறார்கள். (இதே போன்று யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் பேசும்படி வலியுறுத்தும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் சிங்கள மக்களாலும் முன்னெடுக்கப்படுவது நல்ல சகுனம்). "பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி" என்ற பாணியில் சண்டை ஓய்ந்தாலே போதும் என்பவர்களும் அடைந்தால் தமிழீழம்; இல்லையேல் வீரமரணம் எனக் கூறிச் சண்டையைத் தொடர வேண்டும் என்பவர்களும் மிக மிகச் சிறுபான்மையானவர்களாகவேயுள்ளனர். பெரும்பான்மையான தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைத் தட்டிக் கழிக்க முடியாத இக்கட்டும் புலிகளுக்கு உண்டு.

## II

இத்தகைய ஒரு காலப்பின்னணியில் ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையை மீள்பார்வைக்கு உட்படுத்துவது இக் கட்டுரையின் நோக்கமாகும். இந்த நெருக்கடி நிலையென்பது மாறக் கூடியது; எப்படி மாறிச் செல்லும் என்பதை ஊகித்து இந்த மீள் பார்வை அமையாது, இலங்கை அரசும் புலிகளும் செயலாற்றப் போகிற தன்மையிலும் இப் பிரச்சனையுடன் சம்பந்தப்பட்டுள்ள புறச்சக்திகளின் சமநிலை மாற்றத்திலும் சர்வதேச அரசியல் செல்நெறியின் திருப்பங்களாலும் ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனை மாறுபட்ட புதிய வடிவங்களை எடுக்கும். அத்தகைய மாற்றப் போக்கில் ஈழத் தமிழ் மக்கள் வகிக்கத்தக்க பங்கு யாது என்பதற்கு இந்த மீள் பார்வை அவசியமானதாகும்.

www.tamilarangam.net

ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனை கடந்த காலங்களில் இரு வழிமுறைகள் ஊடாக அணுகப்பட்டது. ஒன்று, இலங்கையின் பல பிரச்சனைகளுடன் மேலதிகமாக ஒரு இனப் பிரச்சனை எனக் கணித்தல்; பொதுவாக இலங்கையில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த மார்க்ஸியர்கள் அவ்வாறுதான் நோக்கியுள்ளார்கள்; இன்று தனித்துவமான தேசிய இனப் பிரச்சனையாக அணுகுகிறார்கள். இரண்டு, தமிழீழமே முடிந்த முடிவு என்ற கண்ணோட்டத்தில் அணுகுதல்; தமிழீழப் போராட்ட எழுச்சியூடாக அரசியல் அரங்குக்கு வந்தவர்களில் வலதுசாரி, இடதுசாரி அணுகுமுறையுடைய இரு தரப்பினர் இருந்துள்ளார்கள்; இருதரப்பினரும் தமிழ் மக்களுக்கான பிரச்சனைகளைத் தமிழீழப் பார்வையூடாகவே அணுகுகின்றனர். இடதுசாரி உணர்வுடையவர்கள் தமிழீழத்துக்கு மாக்ஸியம் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்ற தேடுதலை மேற்கொண்டனர்.

வலதுசாரி அமைப்பெனக் கணிக்கப்படும் புலிகள்கூடத் தமக்கு மாக்ஸியம் வழிகாட்ட முடியுமா என்ற தேடலில் ஈடுபடுகின்றனர். மாக்ஸியத்தை வரித்துக் கொண்ட ஈரோஸ் புலிகளுடன் சங்கமித்துள்ளது என்பதைக் கவனிக்கலாம். என்ன நிறம் என்பதைவிடத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே புலிகளின் அவா. போராட்டம் முக்கியம், அது மாக்ஸியத்தை நெருங்கியும் வரலாம், வரவில்லையென்றால் மாக்ஸியத்தைக் கை கழுவியும் விடலாம்; அது அவர்களளவில் தவிர்க்கவியலாதது.

தமிழீழத்துக்காகப் போராடி, புலிகளால் வெளியேற்றப்பட்டு, இன்னமும் மாக்ஸிய நோக்கில் தமிழீழம் எனப் பேசிக்கொண்டிருக்கும் சக்திகள் ஈழத்துக்கு வெளியே உள்ளனர். இவர்கள் மாறிச்செல்லும் சமூக அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் விடுதலைக்கான வடிவங்களையோ தீர்மானங்களையோ போராட்டங்களையோ கண்டறிந்து முன்னெடுப்பதற்குப் பதிலாக முதலில் தமிழீழம், பின்னர் புதிய ஜனநாயகமும் தொடர்ந்து சோஷலிஸமும் என்ற முடிவில் உள்ளார்கள். போராடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டதால் தமிழீழத்தைவிட்டு வெளியேறி வந்துள்ள அவர்கள், தீரத்துடன் போராடும் புலிகள் முதலில் தமிழீழத்தை வெல்லட்டும் பின்னர் அங்கே காணக்கூடியதாயுள்ள ரணங்களுக்கு மாக்ஸியத்தைக் கொண்டு சிகிச்சையும் செய்து புதிய ஜனநாயகச் சமூகத்தையும் அதனூடாக சோஷலிஸத்தையும் கட்டியெழுப்பி விடலாம் என்று திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். முன் அனுமானத்துடன் எடுத்த முடிவுக்கு மாக்ஸியத்தால் வழிகாட்ட முடியாது; புறநிலை யதார்த்தத்தையும் செல்நெறியையும் ஆராய்ந்து தெளிந்து மார்க்கத்தைக் கண்டறிய மாக்ஸிய நோக்காகிய வரலாற்றுப் பொருள்முதல்வாதம் உதவும். இதை அவர்கள் காணத் தவறுகிறார்கள். முன் அனுமானித்தபடி நடக்க வேண்டும், இல்லையெனில் அதற்கு ஆதரவாக ஏதாவது நிகழும் வரை ஒதுங்கியிருப்போம் என்பவர்களை

www.tamilarangam.net

உலகம் 'சிவனே' என்று இருக்கும்படி ஒதுக்கிவிட்டுத் தன் பாட்டில் போய்க்கொண்டிருக்கும். அநேகமாய் அந்தத் தன்பாடு இவர்களது முன் அனுமானத்துக்கு விரோதமாகவே அமையும்.

அடைந்தால் 'மக்கள் தமிழீழம்', இல்லையென்றால் 'புலிகளின் தமிழீழம்' என்றாலும் பரவாயில்லை என்ற இந்தப் போக்குடன் அண்மையில் 'உயிர்ப்பு–7' சஞ்சிகை "ஈழத் தமிழர்களின் தேசிய இயக்கம் – சமூக சக்திகள் பற்றிய விவாதத்திற்கான முன்னோடிக் குறிப்புகள்" எனும் தனிக் கட்டுரை இதழ் ஒன்றை வெளியிட்டுள்ளது. தமிழீழ நோக்கில் அணுகுதல் என்ற இரண்டாவது வடிவத்துக்கு இக் கட்டுரை ஒரு சிறந்த உதாரணம். தமிழீழம் அமைந்துவிட்ட சூழலில் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தல் என்ற பாணியில் அந்தக் கட்டுரை அமைந்துள்ளது. ஒருவகையில் இன்றைய ஜனாதிபதிகூட இதைத்தான் சொல்கிறார் – ஏற்கனவே தமிழீழம் புலிகள் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது, அதை இலங்கையுடன் இணைப்பதற்கு சமாதான யுத்தம் செய்கிறேன் என்று. ஏற்கனவே அவ்வாறு மலர்ந்தும் மலராததுமாயுள்ள இந்தத் தமிழீழம் எப்போது உலகத்தின் முன் பிரசன்னமாகும்? அது எப்போது ஒரு இயக்கத்தினுடைய சொத்து என்பதைக் கடந்து மக்களுக்கானதாய் ஆகும்? அதற்கான மார்க்கம் யாது? இந்தக் கேள்விகளுக்கு மேற்படி 'உயிர்ப்பு–7' –இன் கட்டுரை விளக்கந்தர முனையவில்லை. அவர்களைப் பொறுத்தவரை 'தமிழீழம்' என்ற நோக்கு நிலையிலிருந்து கடந்த காலத்தை அணுக வேண்டும் என்பதைப் பிரயோக நிலையில் காட்டவேண்டும், காட்டியிருக்கிறார்கள்.

தமிழீழம் சித்தித்துள்ளது போன்ற தோற்றமுள்ள இன்றைய பின்னணியில் அத்தகைய புனைவை வரலாறாக் கட்டமைத்திருப்பது ஒரு சஞ்சிகைக் குழுவின் தனிப்பட்ட பாணியல்ல. வெற்றி பெற்ற எல்லோருமே அவ்வாறுதான் வரலாற்றைப் புனைந்திருக்கிறார்கள். புலிகளின் இன்றைய வெற்றிகளைத் தமதாக (அல்லது தமிழ்த் தேசிய சக்திகளினதாய்ப்) பாவித்து அதனை அவர்கள் எழுதுகிறார்கள். சரி, சந்திரிகா அரசின் சமாதான யுத்தத்தால் தமிழீழம் ஒடுக்கப்பட முடிந்தால், அவ்வாறு ஒடுக்கப்பட்ட பின் அவரது துதிபாடிகள் கட்டமைக்கப்போகிற வரலாற்றுப் புனைவு எப்படியிருக்கும்? இவர்கள் 'அபச்சாரம், அபச்சாரம்' என்று ஐம்புலன்களையும் ஒடுக்குவது மனக்கண் முன் நிழலாடுகிறது ! (யார்? ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் படித்தான இரு தரப்பினருந்தான்).

மக்கள் விடுதலையென்ற நோக்கு நிலையிலிருநது அணுகும்போது இத்தகைய புனைவுகளுக்கு அவசியமிராது. ஏதாயினும் ஒரு வடிவம் எங்களுக்கு விருப்பமானதா விருப்பமற்றதா என்பதிலிருந்து அணுகப்பட மாட்டாது; மக்கள் விடுதலைக்கு எது அவசியமான மார்க்கம் – வடிவம் என்பதிலிருந்துதான் பிரச்சனைக்கான தீர்வு நாடப்படும். எமது விருப்பத்துக்கு ஏற்பக் கடந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தைப் புனைவுகளுடன் வடிவமைக்காமல், பன்முக அலசலுடன் இயக்கப் போக்கு எவ்வாறு அமைந்து வந்தது என்பதைக் கண்டறிய வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகுமுறை உதவுகின்றது. அதனையே மக்கள் விடுதலை நாடும் முன்னணிப்படை தனக்கான வழிகாட்டியாகப் பற்றிக் கொள்கிறது.

இன்று 'தமிழீழப் பார்வை மாக்ஸியர்' இறுக்கமான முன் அனுமானத்துடன் வரலாற்றைக் கற்பிதம் செய்வது போல, இலங்கை மாக்ஸியர்களும் முன்னர் தவறிழைத்திருக்கிறார்கள் என்பது மெய். தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட எழுபதுகளின் பிற்கூறில் தமிழினம் ஒரு தேசிய இனமல்ல, பிரிந்து போவது உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை அதற்குக் கிடையாது என்று இலங்கை மாக்ஸியர்கள் வாதிட்டார்கள். ஆயினும், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி ஐம்பதாம் ஆண்டுகளிலேயே தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு பிரதேசச் சுயாட்சி அமைப்பு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. அது வெறும் கோரிக்கை மட்டத்திலேயே இருந்தது, அதற்காகப் போராடவில்லை என்ற குற்றச்சாட்டு நியாயமானதுதான். சோஷலிசக் கட்டுமானத்துக்கான வழிமுறை புரட்சிகரப் பாதையா அல்லது பாராளுமன்றப் பாதையா என்ற விவாதத்தில் கட்சி இரண்டாகப் பிளவடைந்த பின், அவற்றில் பாராளுமன்றப் பாதையை வரித்துக்கொண்டு எழுபதுகளில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த, 'மொஸ்கோ சார்பு' கொம்யூனிஸ்ட்டுகள் மக்கள் விரோத நிலைப்பாட்டையும் எடுத்தார்கள் – அரசில் அங்கம் வகித்து ஒடுக்குமுறைக்குத் துணை போனார்கள் (அதே கட்சி இன்றைய அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறது). அவர்களை மட்டுமே அன்றிருந்த கொம்யூனிஸ்ட்டுகள் என்பதாகத் 'தமிழீழப் பார்வை மாக்ஸியர்கள்' சித்திரித்து, அத்தகைய அன்றைய 'மரபு மாக்ஸியர்கள்' எல்லோரும் தமிழினத்துக்கு எதிராக ஒடுக்குமுறையை ஆதரித்தார்கள் என்பதான கற்பிதம் ஒன்றைக் கட்டமைக்கிறார்கள். கொம்யூனிஸ்ட் கட்சியின் மற்றொரு அணி சண்முகதாசன் தலைமையில் புரட்சிகரச் செயற்பாடுகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது (இது 'சீன சார்பு' என அழைக்கப்பட்டது). இக் கட்சியின் தலைமையிலேயே யாழ்ப்பாணத்தின் இறுக்கமான சாதியக் கட்டமைப்புக்கு எதிராகத் தீரமிக்க – ஆயுதமேந்திய மக்கள் போராட்டமாக தீண்டாமையொழிப்புப் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இன்றுவரை இந்தக் கட்சி புதிய ஜனநாயகக் கட்சி என்ற பெயர் மாற்றத்துடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இருட்டடிப்புச் செய்யும் 'தமிழீழப் பார்வை மாக்ஸியர்' இக் கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சிகளில் பங்குகொண்டதோ ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்ததோ இல்லை என்ற உண்மையையும் மூடிமறைப்பர்.

அதல்ல, அத்தகைய புரட்சிகர சக்திகளும் தமிழ் மக்களின் சுயநிர்ணய

www.tamilarangam.net

உரிமையை ஏற்கவில்லை என்பதுதான் இப்போது பிரச்சனை. உண்மை, அந்த வரலாற்றுத் தவறை அவர்களும் இழைத்தார்கள். ஆயினும் தமிழ் மக்களுக்கு எதிராக எழுபதுகளின் பிற்கூறிலிருந்து அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட நிலையில், 1978 –இல் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் வலியுறுத்தி, ஒரு பிரிவினர்கள் தலைமையிலிருந்து பிரிந்தார்கள்; விரைவில் சண்முகதாசனும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தார்.

இவ்வாறு சுயநிர்ணய உரிமையை முன்னர் அங்கீகரிக்கவில்லை என்பதால் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்று அர்த்தமில்லை (சாதியத்துக்கு எதிராகப் போராடியதனூடாக உண்மையர்த்தத்தில் தமிழ்த்தேசிய ஜனநாயக இயக்கம் ஒன்றைத் தலைமை தாங்கி நடத்திய அந்தப் புரட்சிகர சக்தி, அத்தகைய போராட்டம் பின்னணியில் தமிழ்த் தேசிய வாதத்தையும் எதிர்க்க வேண்டியிருந்து, அவ்வாறு அதை எதிர்த்ததால் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்காமல் இருந்தது; அதன் நியாயப்பாடுகள் இக் கட்டுரைக்கு அவசியமற்றதென்பதால் தவிர்க்கிறோம். ஒரு தமிழரான சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகரப் பாதையை வரித்துக் கொண்ட இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியில்தான் ஏராளமான சிங்கள – தமிழ் – முஸ்லிம் – மலையக மக்கள் அணிதிரண்டிருந்தார்கள். வர்க்கப் போராட்டத்தினூடே சோஷலிஸ சமூகத்தை வென்றெடுத்து சுரண்டலை ஒழிப்பதன்வாயிலாக தமிழ் மக்களும் இனப் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியும் என்பதான ஒரு வறட்டுப் பார்வைத் தவறு ஒன்று இருந்தது. அப்போதும், முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே தமிழ் மக்களின் பிரச்சனைத் தீர்வுக்காகப் பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. தமிழீழக் கோரிக்கை பிறப்பெடுத்துக் கால்நூற்றாண்டு கடக்கவுள்ள இன்றைய நிலையில், இரத்தக் காட்டேரியாய்ப் பேரினவெறி பல்லாயிரம் உயிர்களைக் காவுகொண்டு சொந்தப் பூமியிலிருந்து லட்சக்கணக்கான மக்களை விரட்டியடித்துத் தமிழர்ச் சொத்துக்களை அழித்துக் கோரத்தாண்டவமாடும் சூழலிலிருந்து பின்னோக்கிப் பார்க்கையில், இன்றைய உணர்விலிருந்து விடுபட்டு அன்றைய புறநிலை யதார்த்தத்தைக் கவனத்திற் கொள்ளல் அவசியம்.

## III

'தமிழீழப் பார்வை மாக்ஸியர்கள்' காட்ட முயல்வது போன்று நூறாண்டுகளுக்கு மேற்பட்டுத் தமிழீழ அபிலாசை இலங்கைத் தமிழர் மத்தியில் நிலவவில்லை. எழுபதுகளின் தொடக்கத்தில் பங்களாதேஷ் உருவானவுடன் தமிழரசுக் கட்சித் தளபதி அமிர்தலிங்கம் அதனை வாழ்த்திப் பேசியபோது, அன்னை இந்திராகாந்தி இலங்கையிலும் தலையிட்டு ஒரு 'யாழ்தேஷ்' மலர

www.tamilarangam.net

உதவ வேண்டும் எனக் கூற வேண்டியிருந்தது; அப்போது தமிழீழம் பற்றிப் பரந்து நோக்கக்கூடிய அளவில் இன்னமும் சூழ்நிலை உருவாகவில்லை. உணர்வு நிலையில் அதுபற்றிய சிந்தனை இல்லாததால் எடுத்த எடுப்பில் யாழ்தேஷ் என்று குறுகிய வடிவில் வெளிப்படுமளவுக்குத்தான் தமிழர் பிரச்சனை அன்று இருந்தது; பரந்த அளவுக்கு முழுத் தமிழீழமும் உட்படுவதாகப் பிரச்சனை கொந்தளிப்பு நிலைக்கு வரவில்லை (இன முரண்பாடு அந்த அளவுக்கு இன்னமும் கூர்மையடையவில்லை); ஆதலால் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் அந்தத் தலைவரிடமிருந்து 'தமிழீழம்' என்ற பெயர் வெளிப்படவில்லை. யாழ்தேஷ் எனக் கூறியதற்குள் வடக்கு – கிழக்கு பிரதேசம் முழுவதையுமே அமிர்தலிங்கம் கருதியிருப்பார் என்பதில் ஐயம்கொள்ளத் தேவையில்லை. அப்படித் தமிழர்க்கான தனி அரசொன்றை அமைத்துவிட முடியுமென எண்ணக்கூடிய அளவுக்கு இனப் பிரச்சனை சூடு பிடிக்கவில்லை. பிரிய முடியும் என்ற சுருட்முணர்வே இந்தியத் தலையீட்டில் பங்களாதேஷ் பிரிந்தது எனக் கண்டதன் பேறுதான். பங்களாதேசின் அவசர மறுபதிப்புத்தான் யாழ்தேஷ். பின்னர் தமிழீழம் வடிவமைக்கப்பட்டு அரசியல் கோரிக்கையாகப் பிரசாரம் செய்தபோது பேச்சாளர்கள் இவ்வாறு பங்களாதேஷ் உருவாகிய பாணியை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள்; தமிழீழத்தை மக்கள் அங்கீகரித்தால் சரி, மரம் பழுத்தால் வெளவால் வரும், சோவியத் யூனியனும் இந்தியாவும் வந்து தமிழீழம் பிரித்துத் தருவார்கள் என்று பேசினார்கள்.

வெறும் பங்களாதேஷ் உதயம் மட்டுமே பிரியும் எண்ணத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டாது. தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சனைகள் இருந்தன. அவற்றை முன்னிறுத்தி அறுபதுகளின் ஆரம்பத்தில் கச்சேரிகளுக்கு முன் சத்தியாக் கிரகப் போராட்டம் நடத்தி ஆயுதப்படையின் தடியடிப் பிரயோகத்துக்கு உள்ளாகி, சில தலைவர்கள் சிறை சென்று மீண்டதுடன் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றத்துக்கு வெளியேயான போராட்டம் நிறைவெய்திவிட்டது. பின்னர் 'அன்று சிந்திய ரத்தம்' என்று மேடைகளில் முழங்கியே வடக்கு – கிழக்குப் பாராளுமன்றத் தொகுதிகளுக்கான பெரும்பான்மையான ஆசனங்களை வென்று வந்தார்கள். முன்னர் பண்டா செல்வா ஒப்பந்தம், பின்னர் டட்லி – செல்வா ஒப்பந்தம், அறுபதுகளில் சிறுமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தில் ஒரு ஒப்பந்தம் எனப் பேரப் பேச்சுகளுக்கு வாய்ப்பிருந்தது (இவற்றில் வர்க்க ஒற்றுமை காரணமாக டட்லி திசநாயக்க தலைமையிலான பெருமுதலாளி வர்க்க ஐ.தே.க. அரசாங்கத்தில் இணைந்திருந்தார்கள்). பிரச்சனை ஒரு பக்கத்தில் இருக்க, அதைப் பேசியே பாராளுமன்ற ஆசனங்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் போக்குக்கு எழுபதாம் ஆண்டுத் தேர்தல் முடிவு பேரிடியாக அமைந்துவிட்டது. கொழும்பில் வெற்றிபெறும் முந்திய பலமற்ற அரசாங்கங்களை

www.tamilarangam.net

மிரட்ட முடிந்தது போல் எழுபதாமாண்டுத் தேர்தல் முடிவு அமையவில்லை. சுதந்திரக்கட்சி – கொம்யூனிஸ்ட் கட்சி – சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் இணைவில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருந்தது. தமிழரசுக் கட்சியின் பெருமுதலாளி வர்க்க நலன்களுக்கு விரோதமான தேசிய முதலாளிவர்க்க அரசாங்கமொன்று அவ்வாறு பலம்மிக்கதாக அமைந்துவிட்டதால், பேரப் பேச்சுக்கு முன்வர மாட்டார்கள் என்பதை முன்னறிந்துகொண்ட தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் 'தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறினார். அதற்கு அடுத்த வருடங்களிலேயே பங்களாதேஷ் வடிவில் அருள்வாக்குக் கிடைத்து யாழ்தேஷ் கனவு உருவாகித் தமிழீழக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குத் தலையிடி கொடுக்கும் வகையில் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கும்போதே தமிழரசுக் கட்சியும் அகில இலங்கை தமிழ்க் கொங்கிரஸ் கட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்கள். (இக் கூட்டணியில் இணைந்து ஐக்கிய முன்னணி அரசுக்கு நெருக்கடி கொடுத்த மலையக மக்களின் தொழிற்சங்கக் கட்சியாகிய இலங்கை தொழிலாளர் கொங்கிரஸ், தமிழீழம் சூடுபிடிக்கத் தொடங்கியதும் அதன் எல்லைக்குள் மலையகம் உட்படாததால் பிரிந்துவிட்டது). தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் கொங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் பெருந்தலைவர்களான முறையே அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் எழுபதாம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியடைந்திருந்தமையும் அந்தக் கட்சிகள் தமிழ் மக்களிடம் செல்வாக்கிழந்து வந்த அபாய நிலைமையும் இந்த இணைப்புக்குப் பிரதான காரணிகள். மக்களால் நிராகரிக்கப்பட்டு வருகிறோம் என்ற அச்சம் தோன்றாமலிருந்திருந்தால் கைதேர்ந்த சட்டத்தரணிகளான தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்து பாராளுமன்றப் பாணியில் இருகட்சிகளாய் இருந்துகொண்டு மேடைகளில் விவாதித்து முழக்கமிட்டு வந்திருப்பார்கள். அதனை ரசிக்கும் மனநிலையில் இல்லாத விரக்தியுற்ற இளைய தலைமுறையினர் பழையமுறை அரசியலுக்கு எதிராகக் கிளர்ச்சி மனோபாவங் கொண்டிருந்தமையால் அவர்களைக் கவர்வதற்கும் இந்தக் கட்சிகளின் இணைப்பும் புதிய நாடொன்றுக்கான அறைகூவலும் தேவைப்பட்டது.

இதே காலகட்டத்தில் சிங்கள இளைஞர்கள் மாறி மாறி வரும் பாராளுமன்றத்தின் முதலாளித்துவ ஆட்சியாளர்களது போலித்தனங்களுக்கு எதிராகக் கொந்தளிப்பு நிலைக்கு ஆளாகியிருந்தார்கள். சண்முகதாசன் தலைமையிலான கொம்யூனிஸ்ட் கட்சி அவசரமாய்ப் புரட்சியில் குதிக்கவில்லையெனக் கருதிய பல சிங்கள இளைஞர்கள் பிரிந்துசென்று 1969– இல் ரோஹண விஜயவீர தலைமையில் ஜனதா விமுக்திப் பெரமுனவை

www.tamilarangam.net

(ஜே.வி.பி.) உருவாக்கியிருந்தனர். ஐக்கிய முன்னணி அரசு இளைஞர் பிரச்சனைகளுக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்காத நிலையில் 1971 ஏப்ரல் மாதம் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். (தயாரிப்பிலீடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் போலிசாரால் அவசரமாகக் களமிறக்கப்பட்டனர்). அந்தப் புகழ்பெற்ற 'ஏப்ரல் கிளர்ச்சி' ஆயுத முனையில் கொடூரமாக ஒடுக்கப்பட்டது. ஆயினும் இளைஞர் உணர்வுகளுக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்தியிருந்தமையினால் அது குறித்த ஆய்வினை அரசு மேற்கொண்டது. கிராம மட்டத்திலான இளைஞர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக் கிடைக்காமற் போனதும் படித்த அளவில் வேலை கிடைக்காமையும் அடிப்படைப் பிரச்சனைகள் எனக் கண்டறியப்பட்டன.

கொலனியல் கல்வி முறையை மாற்றி நாட்டுக்கு உகந்ததான கல்வி அமைப்பொன்று வடிவமைக்கப்பட்டது (பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் எந்தவொரு கல்வி மாற்றத்தையும்விட 'புதிய பாதை' எனப்பட்ட அந்தக் கல்வி அமைப்பு மிகச் சிறப்பானதாயிருந்த போதிலும் நடைமுறைப் பிரயோகத் தவறுகளினால் அவப்பெயரைப் பெற்றுக்கொண்டது). உயர்கல்வியை உடனடியாகப் பரவலாக்கும் நோக்கத்துடன் தரப்படுத்தல் நடைமுறைப் படுத்தப்பட்டது. இளைஞர்களது கிளர்ச்சி மனப்பாங்கை மாற்றுவதற்காகச் செய்யப்பட்ட இந்த இரு நடைமுறைகளும் எதிர் விளைவுகளையே தோற்றுவித்தன. 'புதிய பாதை' கல்விச் சீர்திருத்தத்தில் உருவாகிய கல்வி வடிவத்தில் பயின்று வந்தவர்களுக்கு முன் திட்டமிடப்பட்டவாறு உயர்கல்வி மாற்றங்கள் கிடைக்காமற் போனமையால் ஒரு தலைமுறை முழுமையாய் நட்டாற்றில் தவிக்கவிடப்பட்டு கிளர்ச்சியாளர்களாகப்பட்டார்கள். இதன் சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி. –இன் இரண்டாவது எழுச்சியான எண்பதுகளுக்குரிய போராட்ட சக்திகளாயினர்; தமிழீழப் போராட்டத்தின் இரண்டாந் தலைமுறைப் போராளிகளாக இதன் தமிழ் இளைஞர்கள் ஆகினர்.

தமிழீழப் போராட்டத்தின் முதற்தலைமுறைப் போராளிகளாகத் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் வந்தார்கள். பல்கலைக் கழகத்துக்கு ஒவ்வொரு துறையிலும் பிரவேசிக்கக்கூடிய மாணவர்களின் தொகையை மாவட்ட ரீதியாக எல்லை வரையறுத்துக் கொண்டது தரப்படுதல்; 1972 –இல் இது நடைமுறைக்கு வந்தது. யாழ்ப்பாணம் – கொழும்பு – கண்டி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே பல்கலைக் கழகங்களைப் பெருமளவில் நிறைத்தனர். இந்த மூன்று மாவட்டங்களிலேயே உயர்கல்விக்கு ஏற்புடைய நூலக, ஆய்வுகூட வசதிகளுள்ள கல்லூரிகள் நிறைந்திருந்தன. பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் தரத்தை உடனடியாக அதே மட்டத்துக்கு உயர்த்தமுடியாத காரணத்தால் குறித்த தொகையினரை மட்டும் மாவட்டங்களுக்குரிய கோட்டாவாக ஆக்கியபோது பின்தங்கிய மாவட்ட மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாணவர்கள் பல்கலைக் கழகத்திநுள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் கொழும்பு – கண்டி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் சிங்கள மாணவர்களும், யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்களின் தமிழ் மாணவர்களும் மிக நல்ல பயனைப் பெற்றார்கள். மூன்று மாவட்டங்களின் பாதிக்கப்பட்ட கூடிய புள்ளி பெற்ற மாணவர்களுக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை இணையாக முன்னெடுக்காதது மிகப்பெரும் தவறாக ஆகியது.

அதிலும் யாழ்ப்பாணமே மிக அதிகமாய்ப் பாதிக்கப்பட்டது. முன்னர் மருத்துவம், இயந்திரவியல், சட்டம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாணந்தான் அதிக இடங்களைப் பெற்று வந்தது. அந்தத் துறைகளுக்குள் நுழையும் கனவுடன் படித்துவந்த இளைய தலைமுறை பாரிய அதிர்வுக்குள்ளானது. யாழ்ப்பாணத்தவர்களில் பெரும்பான்மையினரின் பிரதான முதலீடு இத் துறைகளிலான கல்வியாகவே இருந்தது. இது தடைப்பட்டது; வேலைவாய்ப்பிலும் யாழ்ப்பாணம் புறக்கணிக்கப்பட்டது. தரப்படுத்தலால் ஏனைய தமிழ் மாவட்டங்கள் பயனடைந்தபோதிலும் அவை கல்வியை யாழ்ப்பாணம் அளவுக்குப் பெரும் முதலீடாகக் கருதவில்லை. அந்த மாவட்டங்களுக்கு ஏனைய தொழில் பிரச்சனைகளும் விவசாயப் பிரச்சனைகளும் நீர் வழங்கல் பிரச்சனைகளும் திட்டமிட்ட குடியேற்றம் – பாதுகாப்புப் பிரச்சனைகளும் இருந்தன. அவற்றுக்காக எந்தவொரு போராட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. யாழ்தேஷ் கனவுடைய யாழ்ப்பாணம் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டு கிளர்ச்சி மனோபாவங் கொண்டு அரசுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தபோது ஏனைய பிரதேசங்களுக்கு அது அவசியமற்றதாயிருந்தது. அனைத்து இயக்கங்களின் தலைவர்களும் மிகப் பெரும்பான்மையான முதற்தலைமுறைப் போராளிகளும் யாழ்ப்பாணத்தவராய் இருப்பதற்கு இதுவே காரணமாகும். ஆயினும் விரைவில் யாழ்தேஷ் தமிழீழமாக நீட்சியடைந்தபோது 'புதிய பாதை' கல்விமுறை வழங்கிய போராளிகள் யாழ்ப் பாணந்தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்தும் கிடைக்க வழிசெய்தது. ஏனைய மாவட்டங்களின் மக்களைக் கிளர்ச்சியூட்டுவதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972 –இல் முன்வைத்த குடியரசு அரசியலமைப்புப் பயன்படுத்தப்பட்டது. பிரித்தானிய அரசின் அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்கிய 29–வது சரத்தை இந்தப் புதிய குடியரசு அரசியலமைப்புக் கொண்டிருக்கவில்லையென்ற அடிப்படையில் இது தமிழின அழிப்புச் சதியெனப் பிரசாரப்படுத்தப்பட்டது. தமிழீழமெங்கும் தமிழுணர்வு தமிழ் வெறியாக மாற்றப்பட்டது. இறுதியாக இலங்கை அரசின் ஆயுதப் படையினர் அனைத்துத் தமிழ் மக்களையும் அரசுக்கு எதிராக அணிதிரள உதவினர். இராணுவம் களத்தில் இறங்கியதும் முழு வடிவில் சிங்கள – தமிழ் யுத்தமாகப் பரிணமித்துவிட்டது. இராணுவம் ஏறக்குறைய நூறுவீதம் சிங்கள மயப்பட்டதுதான். முன்னர் இராணுவத்தில் இருந்த தமிழர்கள் ஒய்வு பெற்ற பின்னர் புதிதாய்த் தமிழர்கள் இராணுவத்தில் சேர்வதும் சேர்க்கப்படுவதும்

www.tamilarangam.net

குறைந்தது. மிகக் குறைந்த அளவில் முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டபோதிலும் சிங்கள இராணுவம் என்ற தன்மையில் மாற்றமில்லை.

இவ்வாறு யுத்தம் அனைத்துத் தமிழீழப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்ட வரலாறும் நாடகப் பாங்கானதுதான். கூட்டணி ஊட்டிய தமிழுணர்வு கிழக்கில் சற்று ஐயப்பாட்டுடன்தான் ஏற்கப்பட்டது. எழுபத்தேழு தேர்தலில் இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பின் கூட்டணி வேட்பாளர்கள் காசி ஆனந்தனும் செ. இராசதுரையும் ஆவர். தந்தை செல்வா மறைவுக்குப் பின் கூட்டணியின் தலைவராயிருந்திருக்கக்கூடிய வாய்ப்பு செ. இராசதுரைக்கு இருந்தது. யாழ் மேட்டிமைப் பண்பால் ஒதுக்கப்பட்ட அவர் சொந்தத் தொகுதியிலேயே இளைய தலைமுறை வேட்பாளருக்கு இரண்டாம் நிலையாளர் எனவானார். இவ்வாறு பழம்பெருந் தலைவர் ஒதுக்கப்பட்டது குறித்து மட்டக்களப்பு மக்களிடமும் இளைஞர்களிடமும் கணிசமான வெறுப்புணர்வு இருந்தது. மட்டக்களப்பு இளைஞர்கள் முழுத் தீவிரத்துடன் களம் இறங்கி செ. இராசதுரைக்காக வேலை செய்தனர். யாழ்ப்பாணத்தின் இளைய தலைமுறையினரும் யாழ் தலைமையும் முழு அளவில் மட்டக்களப்பிலிருந்து தமிழீழத்துக்கெனச் சிறைசென்று மீண்ட தமிழீழப் பெருங்கவிஞர் காசி ஆனந்தனுக்கு ஆதரவாக வேலை செய்தனர். யாழ் ஆதரவில் எழுந்த சந்தேகத்தால் கவிஞர் காசி ஆனந்தன் தோல்வியடைந்து செ. இராசதுரை வெற்றி பெற்றார். யாழ்ப்பாணத்தவரின் புறக்கணிப்பால் விரக்தியுற்ற செ. இராசதுரை ஐ.தே.க. அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டார். கிழக்கு மக்களைப் பொறுத்தவரை அதுவொன்றும் துரோகமாய்ப்படவில்லை; யாழ்ப்பாணத்தவர்கள் அவருக்குச் செய்த துரோகத்தை விட இது மோசமானதில்லையென்றனர். அவர்களுக்கு யாழ்தேசின் நீடிப்பில் முழு அளவு ஈடுபாடு கொள்ளத் தடைகள் இருந்தன. தமிழீழத்துக்குள் கரந்துரையும் யாழ்தேஷ் தம்மை ஒடுக்கும் வடிவம் என்ற நியாயமான அச்சம் அவர்களுக்கு இருந்தது. தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு என அறிவிக்கப்பட்ட எழுபத்தேழு தேர்தலிலேயே மட்டக்களப்பின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினரைக் கூட்டணியிலிருந்து தெரியாதது போலவே வேறு தொகுதிகளிலும் கூட்டணியைத் தோற்கடித்து ஐ.தே.க. வேட்பாளர்களைக் கிழக்கு மக்கள் வெற்றி பெற வைத்திருக்கிறார்கள். கூட்டணியின் செயற்கையான தமிழுணர்வை அவர்கள் சந்தேகத்துடனேயே பார்த்தார்கள். யாழ் தமிழாராய்ச்சி மாநாடு 1974 –இல் ஆயுதப்படையால் இரத்தகளமாக்கப்பட்டது போன்ற நிகழ்வுகளும் மொழியுணர்வுமே ஓரளவுக்குத் தமிழுணர்வை ஊட்டிக் கூட்டணிக்கான ஆதரவுத் தளத்தைக் கிழக்கிலும் வழங்கியிருந்தது.

கூட்டணி 1977 தேர்தலில் பெற்ற 13 ஆசனங்களைக் கொண்டு, அதன் தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக வரமுடிந்தது. ஐக்கிய

www.tamilarangam.net

முன்னணி அரசாங்கத்தில் ஏற்பட்ட விரக்தியினால் எதிர்க் கட்சி அந்தஸ்துக்குக்கூட வரமுடியாத அளவுக்கு ஐக்கிய முன்னணிக் கட்சிகள் தோற்கடிக்கப்பட்டன. கூட்டணி 1977 தேர்தலைத் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாகப் பிரகடனப்படுத்திப் பிரசாரப்படுத்தி வடக்கு – கிழக்கில் கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருந்தது; அதன்படி எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆகிவிட்ட வாய்ப்பான நிலைமையைப் பயன்படுத்தி ஈழத்தைப் பிரகடனப்படுத்துமாறு இளைஞர்கள் வற்புறுத்தினர். எதிர்க்கட்சித் தலைவராயினும் அவர்களது வர்க்க சகபாடிகளான பெரு முதலாளி வர்க்க அரசாங்கம் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் உருவாகியிருந்தமையால் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவே அமிர்தலிங்கமும் கூட்டணியினரும் செயற்பட்டனர். இளைஞர்களைப் பணிய வைக்கும் நோக்கம் ஜே.ஆர். அரசாங்கத்துக்கு மட்டுமன்றி அமிர்தலிங்கத்துக்குமிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே தனிநபர் படுகொலை, வங்கிக் கொள்ளை என்கிற வடிவில் வன்முறைப் பிரயோகம் இருந்து வந்தது. யாழ் நகரில் களியாட்ட நிகழ்வொன்றில் போலிசாரின் அடாவடித்தனத்துக்கு எதிராக இளைஞர்கள் அடிதடியில் இறங்கிய ஒரு சம்பவத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளியாரின் தலையீட்டில் நடந்த தனிப்பட்ட பிரச்சனையில் சிங்கள மாணவர் கத்திக் குத்துக்கு இலக்கானதையும் (முந்திய சம்பவத்தில் சிங்களப் போலிசாரில் தவறிருந்தது, பிந்திய சம்பவத்தில் வெளியாரான தமிழ்க் காடையரில் தவறிருந்தது) சாட்டாகக் கொண்டு, பாராளுமன்றத்தில் ஜே.ஆர். "யுத்தமென்றால் யுத்தம், சமாதானமென்றால் சமாதானம்" எனப் பிரகடனப்படுத்தி முழு நாட்டிற்கும் இனக்கலவரத்தைப் பரப்பிவிட்டார் (1977 ஆகஸ்ட் கலவரம்). அவ்வாறே 1983 ஜூலையில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள திருநெல்வேலியில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளாகி மரணித்ததைக் காரணமாக்கி மிகப் பயங்கரமான நாடு தழுவிய இன வன்முறை அரசால் தூண்டிவிடப்பட்டது. (ஜூலைக் கலவரம் – முதலாவது சிறைப் படுகொலையால் புகழ்பெற்றது). தமிழரும் தமிழர் உடைமைகளும் எரியூட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது "சிங்கள மக்களின் தேசிய எழுச்சிக்குத் தலைவணங்குகிறேன்" எனக் கூறிய ஜே.ஆர். எல்லாம் முடிந்து சர்வதேச அரங்கில் இலங்கைக்கு காட்டுமிராண்டி நாடென்ற அடையாளம் கிடைத்திருப்பதைக் கண்டு "முழுச் சிங்கள மக்களும் முற்றாகவே மூடர்" (தன்னையும் உட்படுத்தியிருக்கிறார்) எனப் பிரகடனப்படுத்தினார். இந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தொடர்ந்தும் அமிர்தலிங்கம் விசுவாசியாக இருந்தார். அதேவேளை இந்த இனக்கலவரங்கள் கிழக்கிலிருந்தும் ஏராளமான போராளிகளை உருவாக்கிவிடப் புதிய எழுச்சி நிலை தமிழீழ அரசியலில் ஏற்படத் தொடங்கிவிட்டது. பின்னர் 1984 –இல் வடக்குக் கிழக்குக்குள் யுத்தத்தை முனைக்கும் வகையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சு உருவாக்கப்பட்டு தமிழர் தாயகத்துக்குள் இன அழிப்பு முடுக்கிவிடப்பட்டது. சிங்கள இராணுவம் சகல

www.tamilarangam.net

சந்தேகங்களுக்கும் அப்பால் வடக்கு – கிழக்கு மக்களை ஐக்கியப்படுத்தி வைத்தது.

இவ்வாறு ஈழத் தமிழ்த் தேசியம் முழுநிறைவடைந்தது ஜே.ஆரின் புண்ணியத்தால் என்றால் அதற்கு விதையூன்றிய பெருமை சிங்கள மக்களின் ஏகோபித்த மதிப்பைப்பெற்ற சிங்களத் தேசியத் தலைவரான எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கவுக்கு உரியதாகும். அவர் 1956 –இல் பிரகடனப்படுத்திய தனிச்சிங்களச் சட்டம் தமிழ் மக்களைச் சிங்களத் தலைவர்களுக்கு எதிராக விலகிச்செல்ல அடியெடுத்துக் கொடுத்திருந்தது. ஆயினும் வடக்கு – கிழக்கு மக்களை முழுதாய் ஐக்கியப்படுத்த அது போதவில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தனா அதையும் சாத்தியமாக்கிக் கொடுத்தார். இடதுசாரி ஆதரவுடைய பண்டார நாயக்க தனிச்சிங்களச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியபோது சமாஜக் கட்சியின் புகழ்பெற்ற ஒரு தலைவரான கொல்வின் ஆர்.டி. சில்வா, இதன் காரணமாகத் தமிழர் எதிர்ப்புணர்வு வளர்ந்து எதிர்காலத்தில் தனிநாடொன்று ஏற்படுமானால் அதன் பாராளுமன்றத்துக்கு முன்னே பண்டாரநாயக்கரின் சிலை எழுப்பப்படும் எனக் கூறியிருந்தார். பின்னர்த் தமிழ்த் தேசியவாதிகள் இதையே பெரிதாகப் பேசியதுண்டு. உண்மையில் அந்தச் சிலைக்கருகே அதைவிடப் பிரமாண்டமாய் ஜே.ஆரின் சிலை எழுப்பப்பட வேண்டும் என்பதை மறப்பது நன்றிகெட்ட தனமாகிவிடும். இதனை என்றென்றும் மறந்துவிடாதிருப்போம்.

## IV

முப்பதாம் ஆண்டுகளில் சிங்கள இடதுசாரிகள் தேசிய விழிப்புணர்வுக்காக 'சூரிய மல்' இயக்கத்தினூடாக வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். அது சிங்கள மக்களை ஓரளவுக்குத் தட்டி எழுப்பியிருந்தது. இருபதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாண வாலிபர்க் கொங்கிரஸ் சாதியொழிப்பு, பெண் விடுதலை போன்ற குறிக்கோள்களுடன் யாழ்ப்பாண மக்களைச் சுதந்திர உணர்வு கொள்ளத் தூண்டியது. அதன் தலைவர்கள் முப்பதாம் ஆண்டுகளில் சிங்கள மாக்ஸியர்களுடன் இணைந்து இயங்கினர். மாக்ஸியத்தை ஏற்காத யாழ்ப்பாணத்தின் சோமசுந்தரப் புலவர் முதல் மட்டக்களப்பின் புலவர் மணி, பெரிய தம்பிப்பிள்ளைவரை முற்போக்கான சுதந்திர இலங்கை பற்றிப் பாடல்கள் யாத்துள்ளனர். யாழ்ப்பாணத்தின் முற்போக்கு சக்திகள் காந்தியை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து வெகுஜன எழுச்சிக்குரிய பணிகளைச் செய்தனர். (இலங்கை வந்த காந்தி ஆரிய அடையாளந் தேடிய சிங்கள மக்களின் தேசிய விழிப்புணர்வைத் தூண்ட வாய்ப்புப்பெற்றிருக்கவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும்). தமிழர்களைப் பொறுத்தவரை பாரதத்தின் சுதந்திர உணர்வுடன் இணைந்ததாகவே தமது விடுதலையும் உணரப்பட்டதால் பரந்த நோக்கிலேயே இலங்கை விடுதலையைச் சிந்தித்தனர்.

www.tamilarangam.net

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு அனுசரணையாக இலங்கை இருக்கக்கூடாது என்பதில் பிரித்தானிய அரசு எச்சரிக்கையாய் இருந்தது. ஒருபுறம் யாழ்ப்பாணத்தில் கூடுதலான கல்லூரிகளை உருவாக்கி, படித்த யாழ்ப்பாணத்தவரை நாடு பூராவும் – கடல் கடந்தும் தம்முடன் எடுத்துச் சென்றார்கள். மறுபுறம் சிங்கள அரசியல் தலைவர்களுக்குக் கூடிய சலுகைகள் வழங்கி விடுதலை வேட்கை கொள்ளாமல் பார்த்துக் கொண்டனர். பெரும் போராட்டங்கள் இல்லாமலே சிங்கள மேட்டுக்குடியினர் உரிமைகளைப் பெற்றுவந்தனர். பெரும் கோரிக்கையின்றியே சர்வஜன வாக்குரிமை முப்பதுகளின் தொடக்கத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டது; இருபது வருடங்களின் பின், சுதந்திர இந்தியாவில்தான் (1952–இல்) சர்வஜன வாக்குரிமை சாத்தியப்பட்டது என்பதை அவதானிக்கலாம். அந்த வகையில் அரசியல் ஆய்வுக் கூடமாய் இலங்கையைப் பிரித்தானியா பயன்படுத்திக் கொண்டது.

இந்தியாவுக்கு எதிராக சிங்களத் தலைவர்களைப் பிரித்தானிய அரசு தூண்டி வந்தது. இலங்கையிலுள்ள இந்தியத் தமிழ் – மலையாளத் தொழிலாளர்கள் சிங்களவரின் வேலைவாய்ப்பைப் பறிப்பவர்களாகப் பிரசாரப்படுத்தப்பட்டது. அது முப்பதுகளில் இந்தியர்களுக்கு எதிரான (குறிப்பாக மலையாளிகளுக்கு எதிரான) கலவரமாக வெடித்தது. இந்தியர்களுக்கு எதிராக இருந்த இந்த வெறுப்புணர்வு அன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகத் திரும்பவில்லை. இந்தச் சூழ்நிலை காரணமாக மலையகத்தில் தேச விடுதலையுணர்வைத் தூண்டுவதற்கென இயங்கிய கோ. நடேசய்யரின் "தேசபக்தன்" பத்திரிகையில் இருந்தளவு சிங்களத்துக்கு எதிரான தமிழின உணர்வு, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "ஈழ கேசரி" யில் வெளிப்படவில்லை. ஈழ கேசரியில் சுதந்திர உணர்வு முனைப்புற்றிருந்தது. அக் காலகட்டத்தில் தமிழ் முற்போக்கு சக்திகள் சிங்கள முற்போக்கு சக்திகளுடன் ஐக்கியப்பட்டுச் செயற்பட்டதைப் போல தமிழ் – சிங்கள பிற்போக்கு சக்திகளுக்கிடையிலும் ஒன்றுபட்டு இயங்கும் தன்மை காணப்பட்டது. இலங்கையின் முதற்கலவரமான 1915 –இன் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரத்தில் சேர். பொன். இராமநாதன் தலைமையிலான தமிழ்த் தலைவர்கள் சிங்களப் பேரினவாதிகளுடன் இணைந்து சிறுபான்மை இனத்தை ஒடுக்கினார்கள்; இந்திய வம்சாவழியினர்களின் பிரசாவுரிமை 1948 –இல் பறிக்கப்பட்டபோது பேரினவாத ஐ.தே.க. அரசாங்கத்தில் இணைந்திருந்த அகில இலங்கை தமிழ்க் கொங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் தனது பூரண ஆசீர்வாதத்தை எதிரான அந்தச் செயற்பாட்டில் பேரினவாதிகளுக்கு வழங்கினார். மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்தத் துரோகத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிக் கொங்கிரசிலிருந்து வெளியேறித் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்த செல்வநாயகம் பின்னர் மலையக மக்கள் பற்றி அக்கறை கொள்ளாததுடன் அதே பேரினவாத ஐ.தே.க. உடன் இணைந்து அரசாங்கத்தில்

www.tamilarangam.net

தனது கட்சிக்கு ஒரு மந்திரிப் பதவியையும் பெற்றுக் கொண்டார் (1965–70 ஐ.தே.க. அரசாங்கம்).

சுதந்திரத்தின் பின்னர்தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய விழிப்புணர்வு சிங்கள – தமிழ் மக்களைப் பரந்த அளவில் தட்டியெழுப்பியது. ஏகாதிபத்திய தாசர்களான ஐ.தே.க. அரசாங்கம் தொடர்ந்தும் நீடிப்பதால் தேசத்தின் முன்னேற்றமும் உற்பத்திப் பெருக்கமும் தடைப்படுகின்றன என்பதை மக்கள் கண்டுகொண்டனர். தொழிலாளர் உரிமை மறுப்பு, வறுமை, உயர்கல்வி வாய்ப்பின்மை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுக்கு எதிராக நாடுபரந்த கண்டனக் கூட்டங்களையும் சிறிய சிறிய இயக்கங்களையும் இடதுசாரிகள் பல மாதங்களாகக் கட்டியெழுப்பி வந்தனர். ஆட்சியிலிருந்து பிரிந்து வந்த பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியும் (பிரிந்து வந்த புதிதில் தேசிய முதலாளித்துவத் தன்மையை வெளிப்படுத்தினர்) இந்தப் பிரசார இயக்கங்களில் இடதுசாரிகளுடன் கை கோத்துச் செயற்பட்டார்கள். முழு இலங்கையினதும் தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புரட்சிகர சக்திகள் எழுச்சி கொண்டு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நிலையடைந்தனர்; 1953 ஆகஸ்ட் மாபெரும் ஹர்த்தால் போராட்டம் வீறு கொண்டெழுந்து ஐ.தே.க. அரசாங்கத்தை நடுக்கடலுக்கு விரட்டிக் கப்பலொன்றில் மந்திரிசபையைக் கூடும்படி நிர்ப்பந்தித்தது.

இந்தப் போராட்டத்தில் எழுச்சியுற்ற மக்களை ஸ்தாபனப்படுத்தித் தொடர்ந்தும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு ஏற்ற வேலைத்திட்டம் இடதுசாரிகளிடம் இருக்கவில்லை. அவ்வாறு ஒரு வேலைத் திட்டத்தை வகுப்பதற்குத் தடையாகத் தொழிலாளி வர்க்கத்தினர் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வறட்டுத்தனமான கோட்பாடும் நடைமுறையும் காரணமாயின. அந்தப் போராட்டத்தை வெறும் வர்க்கப் போராட்டமாகப் பார்த்தனர்; அதனால் எழுச்சியுற்ற விவசாயிகளையும் சிறுபான்மையினர்களையும் பற்றிய தெளிவு அவர்களிடம் இருக்கவில்லை; அது ஒரு தேசிய இனப் பிரச்சனைகள் சார்ந்த எழுச்சி என்பதைப் புரிந்துகொண்டு அந்த அடிப்படையிலான ஆய்வையும் நடைமுறையையும் வகுக்கத் தவறிவிட்டனர். அதன் காரணமாகச் சிங்கள விவசாயிகளைச் சிறீலங்காச் சுதந்திரக்கட்சி தனது பலமான அடித்தளமாக ஆக்கிக் கொண்டது, தமிழ் மக்களைத் தமிழரசுக் கட்சி தனது அணியாக ஆக்கிக் கொண்டது. இவ்வாறு இதுவரை இருந்துவந்த இறுக்கமான உறவிலிருந்து சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் இந்த இரு கட்சிகளும் பிரித்து வைத்தன. அந்தப் பலமிக்க ஐக்கியப்பட்ட போராட்டத்தின் பலாபலனாயே இப்படி நேர்ந்துவிட்டது என்பதுதான் வரலாற்று முரண்நகை. சரியான கோட்பாட்டுத் தெளிவின்மையும் சந்தர்ப்பவாதமும் மக்கள் விரோதத்

www.tamilarangam.net

துரோகத்தனங்களும் இணைந்து இலங்கைத் தேசிய விழிப்புணர்வாகத் தொடங்கிய பேரெழுச்சியைச் சிங்கள தேசியவாதமாயும் தமிழ்த்தேசியவாதமாயும் திசைதிருப்பிவிட்டன.

அடுத்துவந்த 1956 –இன் பாராளுமன்றத் தேர்தலில் இந்தத் தேசிய உணர்வை இரு தரப்பினரும் வெறும் மொழியுணர்வாகக் குறுக்கினர் (செல்வநாயகம் இறுதிவரை இந்தக் குறுகிய நோக்கிலிருந்து விடுபடவில்லை என்பதுடன் விரைவில் பெருமுதலாளிவர்க்க சார்புக்கு மாறினார்; பண்டார நாயக்க ஓரளவுக்குத் தனது குறுகிய பார்வையிலிருந்து விடுபட்டுத் தேசிய நலன் சார்ந்த பல முற்போக்கு நடைமுறைகளுக்கு முன்னோடியாக இருந்தார் என்பது வலியுறுத்தப்படுதல் அவசியம்). தேசிய முதலாளி வர்க்கத் தலைவரான பண்டார நாயக்க தான் ஆட்சிக்கு வந்தவுடன் ஆங்கிலத்தை அகற்றி இருபத்து நாலு மணிநேரத்துக்குள் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவருவேன் என்று பிரசாரம் செய்தார். ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதும் அவ்வாறே சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தினார். தமிழுக்கு சம உரிமை வழங்கப்படவில்லை என்பதைவிடவும் ஆங்கிலம் இல்லாமல் போவதால் நாடு முழுவதும் அதிகாரத்துவத் தொழில்களை நிறைத்திருந்த வாய்ப்பு அற்றுப் போவதைத் தாங்கமுடியாமல் பாராளுமன்றத்திற்கு எதிரே காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டார்கள். அரசு சிங்களத் தேசிய உணர்வைப் பயன்படுத்திச் சத்தியாக்கிரகிகளைத் தாக்கியது. தொடர்ந்து, வாகனங்களுக்கு சிங்கள 'சிறீ' எழுத்தைக் கொண்டுவந்த போது தமிழரசுக் கட்சியினர் அதனை அழித்தனர்; அதற்கெதிராக 1958 –இல் கே.எம்.பி. ராஜரத்னாவால் தூண்டப்பட்ட இனக்கலவரம் தமிழருக்கு எதிரான முதல் வன்முறைத் தாக்குதலானது. தாக்கியவர்கள் தமிழர்களைத் தம்மைச் சுரண்டிய வணிகர்கள், தம் மீது அதிகாரம் செலுத்திய ஆங்கிலம் பேசும் துரைத்தன – அதிகார மமதையுடைய – ஏகாதிபத்திய தாசர்கள் எனக் கருதி 'அந்நியர்களே, வெளியேறுங்கள்' எனக் கோஷித்தனர். ஜே.ஆர். ஜெயவர்த்தனா தூண்டிவிட்ட 77, 83 இனக்கலவரங்களிலிருந்து சாராம்சத்தில் 58 இனக்கலவரம் இந்த அம்சத்தில் வேறுபட்டதாகும்; 58 –இல் இனக்கலவரம் தொடங்கியவுடன் செயலில் இறங்கி அடக்க முனையாமல் மெத்தனப் போக்கை அரசு கடைப்பிடித்ததாயினும் தான் தூண்டவுமில்லை, காலங்கடப்பதற்குள் அடக்கத் தவறவுமில்லை. ஜே.ஆர். போல இன ஒடுக்குமுறை உணர்வு 58–இல் இல்லாததுடன் தமிழர்கள் சுரண்டற் சக்திகளாயும் ஏகாதிபத்திய தாசர்களாயும் அப்போது இனங்காணப்பட்டனர்.

ஐம்பதுகளின் பிற்கூறில் சிங்களத் தேசிய விழிப்புணர்வில் இத்தகைய தன்மைக்கு எதிர்விளைவாய் இலங்கைத் தமிழ்த் தேசிய இன விழிப்புணர்வு முனைப்புப் பெறலாயிற்று. அதன் இனவாதப் பிரிவினர் 'சிங்கள அரசை' நம்புவதைவிடப் பிரித்தானிய அரசை அதிக விசுவாசத்துடன் இறைஞ்சினார்கள்.

www.tamilarangam.net

வெள்ளையர் மூலதனங்கள் தேசவுடைமையாக்கப்பட்டு, திருகோணமலைக் கடற்படைத் தளமும் இலங்கை அரசால் கையேற்கப்படவிருந்தபோது தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் பிரித்தானிய மகாராணிக்குத் தந்தி கொடுத்தார், எதைவிட்டுப் போனாலும் திருகோணமலைத் தளத்தை விட்டுப்போக வேண்டாம் என்று. சிங்கள முற்போக்கு சக்திகள் இத்தகைய ஏகாதிபத்திய சார்பு நடவடிக்கைகளால் தமிழரசுக் கட்சி மீது சந்தேகங் கொண்டிருந்தனர். பெயரிலுங்கூட இரட்டை வேடம் பூண்டது தமிழ்த் தலைமை. ஆங்கிலத்தில் சமஷ்ட்டிக் கட்சி என்ற பொருளில் Federal Party என்றும் தமிழில் வாக்கு வேட்டைக்காகத் தமிழரசுக் கட்சி என்றும் வைத்திருந்தார்கள். அவர்கள் கோரும் சமஷ்ட்டி என்பது எதிர்காலத்தில் தமிழரசு ஒன்றை ஸ்தாபிக்கத்தான் என சிங்கள மக்கள் சிங்கள இனவாதிகளால் குழப்பப்படுவதற்கும் இது உதவிகரமாய் இருந்தது. தமிழரசு என்பது தமிழீழத்தின் விதையல்ல. சிங்கள அரசியல்வாதிகள் கருதியதுபோல தமிழரசு பற்றிய எந்தக் கனவும் அவர்களுக்கு இல்லை. பின்னால் தமிழரசு என்றில்லாமல் தமிழீழம் கோரப்பட்டதுங்கூட, அதிகமாகக் கேட்டுப் பெறக்கூடியதைப் பெறும் வியாபாரத் தந்திரமாகவே. தவிர, பல பிரச்சனைகளால் விரக்தியுற்று தெற்கின் ஜே.வி.பி. போலக் கிளர்ச்சி நோக்குடன் வீதிகளில் இறங்கிய தமிழ் இளைஞர் சக்தியை அணிதிரட்டவும் தமிழீழக் கோஷத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழ் இளைஞர்கள் இத்தகைய அரசியல் கபடத்தனங்கள் இல்லாமல் விசுவாசமாகத் தமிழீழத்தை வரித்துக் கொண்டார்கள் என்பது வேறு விடயம்.

தமிழ் இளைஞர்களின் போர்க்குணத்தைத் தமது அரசியல் எதிரிகளை அழித்தொழிப்பதற்கான கருவியாகவே தமிழ்த் தலைவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். அத்தகைய தனிநபர் படுகொலைகள் காரணமாகத் தேடப்பட்டவர்கள் தலைமறைவாக நேரிட்டது. அப்போதைக்கான பணத் தேவைக்காக வங்கிக் கொள்ளையிடலும் இரகசிய இயக்கக் கட்டமைப்புத் தேவையும் பின்னிப்பிணைந்து ஆயுதப் போராட்டக் குழுக்கள் உதயமாயின. அவ்வாறு உருவான குழுக்களுள் ஒன்றான விடுதலைப் புலிகள் அமைப்பில் தலைவர் அமிர்தலிங்கத்தின் விசுவாசமிக்க, அவரால் 'தம்பி' என அழைக்கப்பட்டு அதனை நிரந்தர அடைமொழியாகப் பெற்றிருந்த பிரபாகரன் முன் முயற்சியெடுத்து இயங்கியபோதிலும், தமது அரசியலைத் தலைமையாக உறுதிப்படுத்தும் நோக்குடன் இன்னொரு மிக மிக விசுவாசியான உமா மகேஷ்வரன் புலிகள் அமைப்புக்குள் சேர்க்கப்பட்டார்.

எதிர்பார்த்ததற்கு மாறாக உமா மகேஷ்வரன்தான் அமிர்தலிங்கத்துக்கு எதிராக முதலில் போர்க்குரல் எழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்துகொண்டு ஜே.ஆருடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து தமிழீழப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டித் தீவிர

www.tamilarangam.net

போராட்டத்துக்கும் தமிழீழப் பிரகடனத்துக்கும் வேண்டுகோள் விடுத்தார் உமா மகேஷ்வரன். அன்றைய நிலையில் அமிர்தலிங்கத்தின் செயற்பாடுகளைத் தந்திரோபாயமாகக் கருதிய 'தம்பி' பிரபாகரன் தலைமைக்கு விசுவாசமாக இருந்தார். உமா மகேஷ்வரன் கூட்டணியிலிருந்தும் புலிகள் அமைப்பிலிருந்தும் வெளியேறினார். பின்னர் புளொட் அமைப்புக்குத் தலைவராகிப் பரந்துபட்ட மக்கள் போராட்டமாக ஆயுதப் போராட்டத்தை வளர்க்க வேண்டுமென வலியுறுத்தினார். அப்போதும் தம்பி பிரபாகரன் அரசியல் போராட்டத்தைத் தலைவர்கள் முன்னெடுப்பார்கள், நாங்கள் இராணுவப் போராட்டத்தை மட்டுமே செயலாக்க வேண்டும் எனப் பகிரங்கமாய்ப் பேட்டியளித்தார். திம்புப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்த அரசியல் நடவடிக்கைகளின் பின்னரே தலைவர்கள் வெறும் பாராளுமன்றச் சுகபோகிகள் எனக் கண்டு தனிவழியை வகுத்துக்கொண்டார் பிரபாகரன். ஆயினும் தமிழீழப் போராட்டத்தை முழுதாகத் தலைமையேற்ற இன்றைய நிலையிலுங்கூட இராணுவப் போராட்டத்துடன் அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கவும் அரசியல் நோக்கில் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கவும் தலைவர் பிரபாகரனுக்கு இயலாமல் இருப்பதை அவதானிக்க முடியும்.

பல நூற்றுக்கணக்கான விறல்மிகு போராளிகள் கையில்தான் தமிழீழப் போராட்டம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. தனியொரு தலைவரின் வழிகாட்டலில் கட்டுக்கோப்புடன் முன்னேறித் தாக்கவும் இராணுவத் தந்திரோபாயத்துடன் அணிகுலையாமல் பின்வாங்கவும் மீண்டும் பலத்தைத் திரட்டித் தாக்கவும் வல்லமையுடையதாகப் புலிகள் அமைப்புக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அரசியல் ரீதியாகக் கையறுநிலை தொடர்கிறது. விடுதலைப் போராட்டத்திலிருந்து தமிழ் மக்கள் தூரப்படுத்தப்பட்டது மட்டுமன்றி, தலைமையானது அரசியலிலிருந்து விலகி நின்று வெறும் இராணுவவாத முடக்கத்துக்கு உள்ளான்தும் இன்றைய நெருக்கடி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலைமைக்குத் தனியொரு அமைப்போ அதன் தலைவரோ முழுப் பொறுப்புதாரிகளாக மாட்டார்கள். இது யாழ்தேஷ் வேண்டி நின்ற வடிவந்தான் (இதற்கு முழுத் தமிழீழ மக்களையும் பொறுப்பாக்க இக் கட்டுரை விரும்பாததால், இன்றைய இந்த அரசியல் செல்நெறியின் உண்மைச்சாரமான 'யாழ்தேஷ்' என்பதைப் பயன்படுத்துகின்றது. தமிழீழ மக்கள் பன்முகத் தன்மையை வரவேற்று, வெவ்வேறு சமூக – வர்க்க – பாலின பிரிவினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இயக்கங்கள் அனைத்தும் தமக்குள் பொது வேலைத்திட்ட அடிப்படையில் ஐக்கியப்பட்டுத் தமிழர் விடுதலைக்காகப் போராட வேண்டும் என விரும்பினார்கள். அத்தகைய ஒரு ஜனநாயகப் பண்பு அதிகார வர்க்கப் பிரிவினர் நீங்கிய தமிழ் மக்களிடம் காணப்பட்டது. இதற்கு மாறானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்தேஷ் அதிகாரக் கும்பலுடையது). யாழ்தேசானது அமிர்தலிங்கம் காலந்தொட்டே ஒரேயொரு தனிப்பெருந் தலைவரைத்தான் நம்பியிருந்தது, வேண்டிநின்றது, தமக்கு விருப்பமற்ற உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இயக்கங்களுக்கெல்லாம் படியளக்க யாழ்தேஷ் புரவலர்கள் விரும்பவில்லை. அவர்கள் கண்களுக்குக் கட்டுக்கோப்புமிக்க, சிறியதாயினும் இராணுவ ரகசியப் பாங்குள்ள புலிகள் உகந்ததாய்த் தெரிந்தது; மற்றைய இயக்கங்கள் வகை தொகையில்லாமல் ஊதிப்பெருத்து மக்களோடு 'தேவையற்ற ஊடாட்டங்களைக் கொண்டிருந்தன. அக் காரணத்தால் புலிகளிடம் யாழ்தேஷ் புரவலர்கள் வெளிப்படையாகவே 'கண்ட நிண்டதுகள்' எல்லாம் வருகுது, அவற்றை வராமலாக்கி நீங்கள் மட்டும் வாருங்கள்' எனக் கோரினார்கள். ஏதோ ஒரு அமைப்புத்தான் நிலைக்க முடியும் என்ற யாழ்தேஷ் பண்பில், தம்மை அழித்துவிட ஒரு இயக்கம் முஸ்த்தீபு செய்வதை முன்னுணர்ந்த புலிகளும் 'மக்கள் தமிழீழத்துக்கு' எதிராக உள்ள யாழ்தேஷ் புரவலர்கள் விருப்பப்படி தனியொரு அமைப்பாக ஆகிக்கொண்டார்கள்; அதற்காக விடுதலைப் போராட்ட சக்திகளை நாடிவந்த சகோதர இயக்கப் போராளிகளின் இரத்தத்தால் தமது கரங்களைக் கறைப்படுத்திக் கொண்டனர். இதற்கு மாறாக, யாழ்தேஷ் எதேச்சாதிகாரப் பண்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மை உழைக்கும் மக்களை அணி திரட்டித் தமிழீழப் போராட்டத்திற்கான ஜனநாயகப் பண்பாடொன்றைத் தோற்றுவித்திருக்க முடியும்; அதனைப் புலிகள் மட்டுமன்றி வேறெந்த இயக்கமும் செய்யத் தயாராக இருக்கவில்லை. போராட்டத்திலிருந்து துரத்தப்பட்ட ஏனைய விடுதலை இயக்கங்களின் எழுச்சிகளும் வீழ்ச்சியும் வெற்றிபெற்ற புலிகளின் கண்ணோட்டத்தில் இன்று அணுகப்படுகின்றது; அது தவறு, அதற்கான ஒரு மறுபார்வை அவசியம். அதுபற்றி ஆராய்வது இக் கட்டுரைக்குப் புறம்பானது என்பதால் அதனை இங்கு தவிர்ப்போம்.

இவ்வாறு வெற்றி பெற்றுத் தமிழீழப் போராட்டத்தின் ஒரே தலைமையாகப் புலிகள் ஆனதற்கு அதன் செல்நெறியைத் தீர்மானிக்கும் அதிகாரவர்க்க நலன் காரணம் என்ற அடிப்படைதான் இங்கு முக்கியமானது. புலிகளிடம் காணப்படும் ஜனநாயக மறுப்பும் மக்களுக்கு மேலாகத் தம்மை நிலைநிறுத்துவது அந்த அதிகார வர்க்கத்துக்கு உகப்பானதுதான். இத்தகைய அதிகாரத்துவ சர்வாதிகார வடிவம் யாழ்தேஷ் உயர்சாதி – உயர்வர்க்க – ஆணாதிக்க சக்திகளுக்கு அவசியப்படுகின்ற அரசியல் மார்க்கம். அன்று கூட்டணியும் இன்று புலிகளும் வெவ்வேறு தளங்களில் (முறையே பாராளுமன்றத் தளத்திலும் இராணுவத் தளத்திலும்) இந்த அதிகார வர்க்க நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

அதேவேளை, புலிகள் இந்த அதிகாரவர்க்க சக்தியை மட்டுமே இன்று பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அதன் தனித்துவ வெற்றியை அந்த

www.tamilarangam.net

அதிகாரத்துவ சக்தி தீர்மானித்திருக்கிறதாயினும் இன்று முழுத் தமிழீழ மக்களின் தலைமைச் சக்தியாக அவர்களே விளங்குகின்றனர். அதனைத் தடுத்து அனைத்து இயக்கங்களின் இருப்புக்குமான ஜனநாயகச் சூழலை வழங்கியிருக்கக்கூடிய அளவுக்குத் தமிழீழ மக்களின் எழுச்சி அமைந்திருக்கவில்லை. ஏற்கனவே யாழ்தேஷ் எதேச்சதிகாரப்பிடி வலுமையுள்ளதாயிருந்த சூழலில் ஏனைய இடங்களில் அடித்துப் பழுக்கவைக்கப்பட்டதால் தலைமையின் வாலாக மக்கள் இழுபட நேர்ந்துவிட்டது. எவ்வாறாயினும் மக்கள் விரும்பினும் விரும்பாவிடினும் தமிழீழத்தின் தலைமைக்கேந்திரம் இன்று புலிகளே. விடுதலைப் புலிகளின் அரசியல் மார்க்கம் என்ற உள்ளடக்கம் இன்னமும் அதிகார வர்க்கத்தால் தீர்மானிக்கப்பட்டபடியே இருந்தபோதிலும் புலிகள் அமைப்பின் வடிவம் இன்று பாரிய மாற்றத்தைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சக்திகளின் இளைஞர்களும் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளின் இளைஞர்களும் புலிகளின் இன்றைய போராளிகளாவர். இந்த வடிவ மாற்றம் இன்னமும் அதன் அரசியல் உள்ளடக்க மாற்றத்தை ஏற்படுத்தவில்லையாயினும், இது கவனிக்கப்பட வேண்டியது.

## V

இன்று தமிழ் மக்கள் சார்பாகப் புலிகள் மட்டுமே பேசத்தகுதியானவர்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. மற்றொரு பிரிவினர் இதற்கு நேர்மாறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்; ஜனநாயக விரோத சக்தியான புலிகள் அமைப்பை அழித்துவிட்டு, ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ் இயக்கங்களுடன் பேசி ஒரு தீர்வை எட்ட வேண்டும் என்பது இந்த இரண்டாம் பிரிவினர் கருத்து. தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினரது அபிப்பிராயம் முதலாவதற்கும் அரசினதும் அரசு சார்பாளர்களினதும் கருத்து இரண்டாவதற்கும் சார்புடையதாயுள்ளது. புலிகள் அழிக்கப்பட்டால் பின்னர் தமிழ் மக்களின் நலன் முழுதாகக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும் என்பது தமிழ் மக்களது நியாயமான அச்சம். கண்டிப்பாக அவ்வாறு ஆகும் என்று கூறமுடியாதாயினும் மக்களின் உணர்வைப் புறந்தள்ள முடியாது. புலிகள் எந்தத் தீர்வுக்கும் முன்வரமாட்டார்கள் ஆதலால் அவர்களை அழித்து, அல்லது பெருமளவில் அவர்களது பலத்தைச் சிதைத்துவிட்ட பின்னரே தீர்வை எட்ட முடியும் என்பது அரசினரதும் அரச சார்பினரதும் நியாயமற்ற நிலைப்பாடு. தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய ஏற்புடைய தீர்வை அரசு முன்வைத்தால் விடுதலைப் புலிகள் அதனை ஏற்கும் நிலையில்தான் இன்று உள்ளார்கள்.

சந்தேகமற்ற வகையில் அரசிடம் பேரினவாத அகங்காரம் காணப்படுகிறது. அனைத்து சிறுபான்மையினர்க்கும் எதிராகக் கட்டற்ற இன ஒடுக்குமுறையும் தமிழர்த் தாயகத்தில் இனப்படுகொலைகளும் தொடர்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொம்யூனிஸ்ட் கட்சியும் சமாஜக் கட்சியும் அங்கம்பெறும் 'முற்போக்கான' அரசாங்கம் இன்று ஆட்சியிலுள்ளதால் பேரினவாதக் குணாம்சம் அரசாங்கத்திடம் இல்லையெனச் சிலர் சொல்ல முயல்கிறார்கள். வேறு சிலர் ஐ.தே.க. அரசாங்கத்துக்கும் இன்றைய அரசாங்கத்துக்கும் எந்த வேறுபாடும் இல்லையெனக் கருதுகின்றனர். இரண்டு அரசாங்கங்களுக்குமிடையே தெளிவான வேறுபாடு உண்டு; அவை பட்டியலிப்படுவது இங்கு அவசியமற்றது. அவ்வாறுள்ள வேறுபாடுகளில் ஒன்றாகப் பேரினவாத அகங்காரத்திலிருந்து விடுபட்ட தன்மை அமையவில்லை. மிக மோசமாகத் தமிழர்களை அவமானப்படுத்தும் நடவடிக்கைகள், வகை தொகையற்ற கைதுகள், சிறைப் படுகொலைகள் இன்றும் தொடர்கின்றன. தமிழர் தம்மை வெறும் புகைப்படங்களாகக் குறுக்கி அடையாளங்காண வைக்கப்பட்டுள்ளனர்; தேசிய அடையாள அட்டை (என்.ஐ.சி.), வாழும் பகுதியை உறுதிப்படுத்தும் வதிவிடப்பத்திரம் (பாஸ்), வேலைப்பத்திரம் (யொப் கார்ட்), புதிதாக வேறிடத்தில் தற்காலிக்மாகத் தங்க நேர்ந்தால் அந்தப் பகுதிப் போலீஸில் பதிந்த பாஸ் ஆகியவற்றுடன் (இவையொவ்வொன்றிலும் புகைப்படங்களுடன்) நடமாடித் திரிகின்ற தமிழர்களுக்குத்தான் தெரியும் இந்த அரசாங்கத்தின் பேரினவாத அகங்காரம்.

அத்தகைய பேரினவாத அரசுத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதைத் தீர்மானிக்க முடியாது. அவ்வாறு தமிழ் மக்களின் பிரதிநிதியாக உள்ள ஒரு அமைப்பை அழிக்கவோ ஒடுக்கவோ முயலுதல் பேரினவாதக் கொலைவெறியாகவே அமையும். புலிகளுடன் பேசிப் பயனில்லை எனக் கூறும் சக்திகள் அது ஒரு பாசிச அமைப்பென மதிப்பிட்டுக் கூறுவர். அரச பயங்கரவாதத்தின் பாசிச நடவடிக்கை அளவுக்குப் புலிகளின் செயற்பாடுகள் இல்லை. புலிகள் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை அமைப்பு. தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சி, ஜனநாயகக் குரலாக வெளிப்பட்ட தொடக்கம் முதல் ஆயுதப் போராட்டமாகிவிட்ட இன்றுவரை அதிகார வர்க்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. அது பேரினவாத இன ஒழிப்பு வன்முறைக்கு எதிரான ஒரு வன்முறைப் போராட்டமாக இன்று உள்ளமை ஒரு தவிர்க்கவியலாத வரலாற்றுக் கட்டம். அந்த வரலாற்றுக் கடமையைக் கையேற்றுள்ள புலிகளிடம் தேசிய சக்திகளின் ஒரு வடிவமாக வெளிப்படும் சாத்தியமுள்ள பாசிசம் அவ்வப்போது வெளிப்பட்டுள்ளதாயினும் அதனை ஒரு பாசிச அமைப்பெனக் கணிப்பது தவறாகும். அதுவும், இனப் படுகொலையைத் தொடரும் அரசோ அரச சார்புச் சக்திகளோ இவ்வாறு கூறத் தகுதியற்றவர்கள். இவ்வாறு கூறிப் புலிகளுக்கு எதிரான யுத்தமெனத் தமிழ் மக்களுக்கு எதிரான இன்றைய இன ஒடுக்குறை யுத்தத்தை நியாயப்படுத்த முயல்வது கலப்பற்ற கபடத்தனமாகும்.

www.tamilarangam.net

இந்த அம்சத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்களிடம் ஐயத்துக்கு இடமில்லாமல் புலிகளுடன் பேச வேண்டும் என்ற கருத்துத்தான் நிலவுகிறது. அவர்கள், அரசு நியாயமாக நடந்துகொள்ளாது என்றுதான் சந்தேகம் கொள்கிறார்கள். புலிகள் ஏதாவது ஒரு விடயத்தில் தவறு செய்திருக்கிறார்கள் எனக் கண்டால், அதைத் தாமே செய்ததாகப் புலிகள் வெளிப்படுத்தினாலுங்கூட, ஒரேயடியாகப் புலிகள் செய்யவில்லை எனக்கூறி மணலுக்குள் தலையைப் புதைக்கும் அளவுக்குத் தமிழ் மக்களிடம் ஒரு தவறான அணுகுமுறை உண்டு. இது ஒரு வகையில் இன ஒடுக்குமுறை அரசின் கொடூரத்துக்கு எதிராகத் தமது தலைமையின் புனிதத்தை வலியுறுத்த மேற்கொள்ளும் நடைமுறைதான். பல இயக்கங்கள் போராடிய ஆரம்பகாலத்தில்கூட, ஏதாவது ஒரு இயக்கம் வங்கிக் கொள்கை அடித்த செய்தியைக் கேள்வியுற்றதும் 'எங்கடை பொடியன் கொள்ளையடிக்கேல்லை, பொலிஸ் செய்து போட்டுப் பொடியனைச் சாட்டுது' எனத் தீர்ப்புச் சொன்னதை நினைவுபடுத்தலாம். அடிமனதில் இயக்கமொன்றே செய்தது தெரியும்; ஆயினும் தமக்குத் தவறெனப்படுவதைத் தாம் விரும்புகின்ற இயக்கங்கள் செய்யாது, செய்திருக்கமாட்டார்கள் எனத் தற்திருப்திகொள்ளும் மனப்போக்கு இது.

விமர்சனப் பாங்கில்லாத குருட்டுத்தனமான பின்பற்றும் போக்கு இவ்வாறு மக்களிடம் வளர்வதை ஆரம்பத்திலிருந்தே அனைத்துத் தமிழ்த் தேசிய சக்திகளும் ஏற்று வந்திருக்கிறார்கள். இதன் ஆபத்து எப்படி வெளிப்பட்டது எனில் அந்த அமைப்புகள் போராட்டத்திலிருநது வெளியேற்றப்பட்டு, அவை சமூக விரோத சக்திகள் என முத்திரை குத்தப்பட்டவுடன், முன்னர் புனிதமாய்த் தெரிந்தவை அப்படியே அசுர கணங்களாய்த் தெரியத் தொடங்கிவிட்டன.

இது தமிழர் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தும் இந்துப் பண்பாட்டின் தாக்கம் சார்ந்த ஒன்று; ஒன்றில் தேவர், இல்லையேல் அசுரர், புனிதம் X தீட்டு, பத்தினி X விபச்சாரி, உயர்ந்தோர் X தாழ்ந்தோர் போன்ற இருமைக் கருத்தியல் நிலைப்பட்டது இது. "அண்ணன், தளபதி அமிர்தலிங்கம் காலத்தில் தமிழீழம் காணப்படாவிட்டால் என்றுமே காணமாட்டோம்" என்று அமிர்தலிங்கத்தை எழுபதுகளின் முடிவில் உச்சத்தில் வைத்துக் கொண்டாடியவர்கள் ஒரேயடியாக அவரைத் துரோகி என இனங்கண்டார்கள். அவருக்குப்பின் பெரிய அளவில் செல்வாக்குப் பெற்ற உமா மகேஸ்வரன் 'பெரியவர்' எனப்பட்டார், பின்னர் சிறியவராகக்கூடக் கருத்தில் கொள்ளாமல் புறமொதுக்கப்பட்டார். இன்று 'பெரிசு' எனச் சொல்லப்படும் புலிகள் மீதும் விமர்சனமற்ற வழிபாடு தொடர்கிறது; தோற்றுப் போனால் அவர்கள் செயற்படுத்திய சாதனைகள் – தவறுகள் மதிப்பிடப்படாமல் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசுதல் தமிழ் மரபின் ஒரு வருந்தத்தக்க அடையாளம். ஒவ்வொரு விடயத்திலும் இரு அம்சங்களும் காணப்படும் என்பதும் குறித்த சூழலில் ஒன்று மற்றொன்றாக மாறும் என்பதும் புரிதல் நிலையில் இல்லை.

www.tamilarangam.net

(இங்கு இடைச் சொருகலாக இத்தகைய இருமைப் பண்பு சிங்கள மக்களிடம் இல்லையென்பதையும் இரு அம்சங்களையும் கவனத்திற் கொள்கிறார்களென்பதையும் கூறி வைக்க வேண்டும். அவர்கள் மிகவும் மதிக்கும் தேசியத் தலைவரான பண்டாரநாயக்க அளவுக்கு இல்லையெனிலும், அவர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பிரேமதாசவுக்கும் வரலாற்றில் நிரந்தர ஒரு இடத்தை வழங்கியுள்ளார்கள். இலங்கையின் கல்வி மறுமலர்ச்சிக்கு முப்பதாம் – நாற்பதாம் ஆண்டுகளில் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா ஆற்றிய பிரமிக்கத்தக்க பங்களிப்பைப் பார்த்த இந்திய அறிஞர் ஒருவர், 'அவர் மட்டும் இந்தியாவில் பிறந்திருந்தால் கடவுளாகக் கருதப்பட்டிருப்பார்' எனக் கூறியிருந்தார். பௌத்தப் பண்பாடுடைய சிங்கள மக்களிடம் கடவுளாகப் போற்றுவதோ கழிசடையென ஒரேயடியாகப் புறந்தள்ளுவதோ கிடையாது. இந்தப் பண்பை ஒரே நாட்டில் வாழும் தமிழர்கள் கிரகிக்க முடிந்தால் எங்களுடைய அவலங்களில் பெரும்பகுதியைக் குறைக்க அது உதவியாயிருக்கும்).

தலைமைதாங்கும் வேளையிலேயே குருட்டுத்தனமாய் வழிபடுவதை விடுத்து விமர்சனப் பூர்வமாய்த் தவறெனத் தெரிவதை மனந்திறந்து வெளிப்படுத்தினால் தலைமைக்குத் திருந்திக் கொள்ளச் சந்தர்ப்பங் கிடைக்கும். அந்த வாய்ப்பில்லாமல் போட்டுடைத்துக் குப்பைத் தொட்டிக்குள் போவதைவிட இந்த விமர்சனங்கள் மேலானவை. தந்தை காலம், அண்ணர் காலம், தம்பி காலத்தில் முடியவில்லை என்றால் பிள்ளை காலத்துக்குப் போராட்டம் கைமாறும். அப்போதும் வரலாற்றனுபவத்தை மனங்கொள்ளாமல், விமர்சனப்பூர்வமாய் சரி தவறை அலசாமல், செம்மறியாட்டுக் கூட்டமாய் இழுபட்டால் இதுவரையடைந்த இழப்புகளுக்கு உரிய பலாபலன் எட்டப்படாததைப்போலவே தொடர்ந்தும் பாரிய இழப்புகளைச் சந்திக்க நேரும்.

இந்த வரலாற்றனுபவத்திலிருந்து பெறக்கூடிய மிகப் பிரதான முடிவு, ஒரேயொரு அப்பழுக்கற்ற புனிதமான தலைமை என்ற தவறைத் தமிழ் மக்கள் கைவிட முன்வர வேண்டும். விமர்சன விழிப்புணர்வுடன் அரசியல் மார்க்கத்தை அணுக வேண்டும். தமக்கு விருப்பமற்ற பிரிவினரது பிரதிநிதிகள் சிறுபான்மையினராய் உள்ளபோதும் அவர்களது ஜனநாயக உரிமையை மதிக்கும் அரசியல் நாகரிகத்தை வரித்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் உரிமை போர்க்களத்துக்கு வெளியே ஜனநாயகத்தளத்தில் இயங்கும் தமிழ் அமைப்புகளுக்கும் உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செயற்படுவதைப் புறங்கையால் தட்டிக் கண் மூடுவது அரசியல் அசிங்கம். ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஜனநாயக சக்திகளிடம் பல தவறுகள் இருக்கலாம், புலிகளிடம் இருக்கும் தவறுகளை இப்போதே விமர்சிக்க வேண்டும் என்பதுபோல, இவற்றையும்

www.tamilarangam.net

விமர்சன நோக்கில் அலச வேண்டும். மக்கள் விழிப்புணர்வு கொண்டால் இந்த அமைப்புகள் அனைத்தும் தமது தவறுகளைக் கூடியவரை திருத்திக் கொண்டு, தமக்குள் உள்ள குரோதங்களை மறந்து ஐக்கியப்பட்டு ஒரு குரலில் தமிழர் விடுதலையை ஒலிப்பர். இல்லையெனில் இன்றைய அரசியல் அவலம் தொடரும்.

அனைத்துத் தமிழ்த் தேசிய அமைப்புகளும் மக்களைப் பார்வையாளர்களாக ஒதுக்கிவைத்ததற்குப் பொறுப்புடையனதாம். இதை அவை சுயவிமர்சன ரீதியாக ஏற்றாக வேண்டும். மக்கள் போராட்டம் என்றவர்களும் 'பார்வையாளர் வேண்டாம், பங்காளிகள் வேண்டும்' என்றவர்களும் உண்மையிலேயே அத் திசையில் மக்களை அணிதிரட்டி ஸ்தாபனப் படுத்தியிருந்தால் புலிகள் தாக்க வருவதற்கு முன் விட்டோடியிருக்க மாட்டார்கள். அந்த மக்களில் தங்கிநின்று புலிகளின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்துப் போராடியிருந்தால் இத்தனை அவலங்கள் ஏற்பட்டிருக்க மாட்டாது.

இனியும் மக்களைப் பார்வையாளர்களாகக் கருதாமல் மக்கள் போராட்டமாக ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையை வளர்த்தெடுக்க வேண்டும். மக்களின் விழிப்புணர்வை மழுங்கடிக்கச் செய்து ஒதுங்கிப் போக வைத்ததில் அனைத்து அமைப்புகளுக்கும் பொறுப்புண்டு என்பதை உணர்வு பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டும். தவிர, அரசியல் பலாபலன்களை அலசிச் செயற்படுத்த வேண்டிய அமைப்புகள்தாம் கடந்தகாலத் தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு முன்கையெடுத்து மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கு முன்வர வேண்டும். மக்களின் எழுச்சி நிலைதான் சரியான அரசியல் தலைமையை வழங்கும், சரியான அரசியல் இயக்கமே மக்களை எழுச்சியுறுத்தவும் எழுச்சியடையும் மக்களுக்குத் தவறற்ற வழிகாட்டலை நல்கவும் முடியும் என்பவை ஒன்றையொன்று சார்ந்தவை.

அந்தவகையில் புலிகளின் தலைமை என்பது ஈழத் தமிழ்த் தேசிய இயக்கத்தின் இன்றைய நிதர்சனம். தேசிய இனப் பிரச்சனையின் தீர்வுக்கு அவர்களுக்குரிய பங்கினை ஏற்று அவர்கள் பேச்சுவார்த்தையில் பங்கெடுக்கும் சூழலை அரசு ஏற்படுத்தியாக வேண்டும். அதேவேளை, விடுதலைப்புலிகள் தமிழர் சார்பான அனைத்து சக்திகளுக்குமான ஜனநாயக உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும். இதன் பொருள் அவர்களது தளப் பிரதேசத்துக்குள் வரைமுறையற்று உடனே ஜனநாயக சுதந்திரத்தை வழங்கிவிட வேண்டும் என்பதல்ல; போராட்ட சக்திகளின் ஆயுதத்தைக் களைதல், பலவீனப்படுத்தல் போன்ற ஆதிக்க சக்திகளின் சதிக்குப் பலியாவதாக அது ஆகிவிடும். தமக்கான இடங்களில் இயங்கும் அமைப்புகளுக்குரிய மதிப்பை வழங்கவேண்டும் என்பதே இதன் பொருள். இதய சுத்தியுடன் இயங்குவோருக்குக் காற்றுப்புகாத இடத்திலும் பலமான தளம் இருக்கும்.

www.tamilarangam.net

தொகுத்து நோக்குவோமாயின் மொழிப்பிரச்சனை, உயர்கல்வி, வேலைவாய்ப்பு, நீர் விநியோகம், திட்டமிட்ட குடியேற்றம், பாதுகாப்பு ஆகியவை வடக்கு – கிழக்கு ஆகிய தமிழர்த் தாயகம் எதிர்நோக்கும் தேசியப் பிரச்சனைகளாகும். இத் தமிழர் தாயகப் பிரச்சனைகளைச் சுயநிர்ணய உரிமையுடன் தமிழ் மக்களே அணுக வேண்டும் – தீர்வு காண வேண்டும். இத்தகைய அனைத்துப் பிரச்சனைகளையும் முன்வைத்துத் தேசிய இனப் போராட்டம் ஆரம்பம் முதல் இன்று வரை முன்னெடுக்கப்படவில்லை. ஐம்பதுகளின் பிற்கூறில் மொழிப் போராட்டமாய்த் தொடங்கி, எழுபதுகளில் உயர் கல்விப் போராட்டமாய் வளர்ந்து, எழுபதுகளின் பிற்கூறில் பிரிவினைக் கோரிக்கையாகியது. இந்த வளர்ச்சிப் போக்கு முழுமையிலும் யாழ்ப்பாணத்தின் நலனும் யாழ் அதிகாரவர்க்க மனோபாவமுமே அரசியல் செல்நெறியைத் தீர்மானித்தது. அரச பயங்கரவாதம் தமிழர்த் தாயகம் முழுவதற்கும் உரிய பாதுகாப்புப் பிரச்னையை முன்னிறுத்தித் தமிழர்ப் போராட்டத்தைத் தேசியப் போராட்டமாக வளர்த்தெடுத்துக் கொடுத்தது. அவ்வாறு பரிணமித்தபோதிலும் தேசியப் போராட்டமானது யாழ் அதிகாரத்துவ மேட்டிமைப் பண்பிலிருந்து அனைத்துத் தமிழ் மக்கள் சார்பான அனைத்துப் பிரச்சனைகளையும் உள்ளடக்கிய வடிவத்தை நோக்கி இன்னமும் வந்தடையவில்லை.

ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு இந்த யாழ் அதிகாரத்துவ மேட்டிமைப் பண்பிலிருந்து விடுபடுவது அவசியம். தமிழர்த் தாயகம் முழுவதற்குமான பிரச்சனைகளை அலசி, அவற்றுக்கான தீர்வுத் திட்டங்கள் இனங் காணப்பட வேண்டும். தமிழர் தாயகத்துக்குள் வருகின்ற முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமான ஏற்ற அரசியல் வடிவம் வரையறுக்கப்பட வேண்டும். தமிழர்த் தாயகத்துக்கான அரசியல் வடிவம் இந்தச் சிறுபான்மை இனங்களது அரசியல் வடிவங்களுடன் கொள்ளும் உறவு பன்மைப் பண்புள்ள சுயநிர்ணயப் பிரயோக அடிப்படையில் அமைய வேண்டும் (சுயநிர்ணய உரிமை சமன் பிரிந்து செல்லல் என வாய்ப்பாடாக ஆக்கிக் கொள்பவர்களுக்கு இதனைப் புரிந்து கொள்ளத் தடைகள் பல இருக்கும்; திறந்த மனமும் பரந்த மனப்பாங்கும் மட்டுமே இங்கு புரிதலுக்கு அவசியமானது). தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு பகுதியினரதும் நலன்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு, அவற்றுக்கான தீர்வு வடிவங்களை வரையறுத்தல் அவசியம். இவை குறித்து இலங்கை மாக்ஸியர்கள் கவனஞ்செலுத்திய அளவுக்குத் 'தமிழீழ மாக்ஸியர்' கவனஞ்செலுத்தவில்லை. தமிழினத் தேசியவாதிகள் பெரும்பாலோரது பார்வை எங்கெங்கு பறந்தடித்தாலும் இறுதியில் யாழ்ப்பாணத்துக்குள் சென்று முடங்கிவிடுகிறது. ஈழத் தமிழ்த்தேசிய இனப் பிரச்சனையைப் பன்மைத் தன்மையில் அணுகி, அனைத்து அம்சங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான சிந்தனை வெகுஜனத் தளத்தைப் பொறுத்தவரை இன்னமும் கனவாகவே தொடர்கிறது.

www.tamilarangam.net

# சொந்த நாட்டு அன்னியர்கள்

– ம.ரா.போ. குருசாமி

தமிழ்நாட்டில் தமிழ்வாயிலாகவே பாடங்களைக் கற்பிக்க வேண்டும். இதற்கு இங்கே தனிப்படத் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள்; இயக்கங்கள் நடத்த வேண்டியிருக்கிறது ! ஒரு நிகழ்ச்சி நினைவில் எழுகிறது !

சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அமெரிக்காவுக்குப் போயிருந்தார். அவரைப் பார்க்கச் சீன நாட்டுச் சிந்தனையாளர் லின் யு டாங் போனார். அவர் போனபோது ஆர்.கே. சண்முகம் செட்டியார் உள்ளே வேறு அலுவலில் இருந்தார். 'அவர் வரட்டும்' என்று காத்திருந்த லின் யு டாங், அங்கிருந்த 'இந்து' செய்தித்தாளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். அது தமிழ்நாட்டில் தமிழிசை இயக்கம் சற்று மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலம். தமிழிசை இயக்கத்துக்கு எதிரான செய்திகள் 'இந்து'வில் இருந்தன. (அப்படித்தானே இருக்கும் !) செட்டியார் வந்தவுடனே லின் யு டாங் அவரைக் கேட்டார் ; "அது ஏன் இந்தியாவில் தமிழில் பாடவேண்டுமென்று கேட்கிறார்கள் ! உங்கள் நாட்டுப் போக்கே வேடிக்கையாக இருக்கிறதே ! இது ஏன்?" செட்டியார் சொன்னார் : "இந்தியாவில் பல மொழிகள் உண்டு. தமிழ்நாடு என்பது ஒரு பகுதி. அங்கேதான் தமிழில் பாடவேண்டும் என்று கேட்கிறோம். நானும் தமிழில் பாடவேண்டுமென்று கேட்பவன்தான்".

லின் யு டாங்கிற்கு மீண்டும் வியப்பு "அது தமிழ்நாடு என்றால், தமிழில் பாடவேண்டுமென்று ஏன் கிளர்ச்சி செய்யவேண்டும்? உங்கள் நாட்டுப்போக்கே வேடிக்கையாக இருக்கிறதே!"

செட்டியாரவர்களே செயின்ட் மேரி மண்டபத்திலே நடந்த தமிழிசை விழாவின்போது இந்தச் செய்தியைச் சொன்னார். கேட்டுக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன்.

தமிழிலே பாடு ! தமிழிலே ஆட்சி நடத்து ! தமிழிலே பாடங்களைச் சொல்லிக் கொடு ! தமிழிலே அருச்சனை செய் ! – இந்த முழக்கங்களெல்லாம் தமிழ்நாட்டில் தான் ! மற்ற நாட்டவர்களுக்கு நம்முடைய தனிநிலை விளங்காது; வேடிக்கையாகத்தான் இருக்கும். "தமிழன் என்றோர் இனம் உண்டு; தனியே அவற்கோர் குணமுண்டு" – நன்றாகத்தான் சொன்னார் நாமக்கல் கவிஞர் !

ம.பொ.சி. வாழ்ந்தவரையில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று முழங்கிக் கொண்டிருந்தார். தமிழகச் சட்ட மன்றத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலும் திராவிட இயக்கங்களின் ஆட்சிக்

www.tamilarangam.net

காலத்திலும் தமிழுக்குச் செல்வாக்குத்தரும் செய்திகள் பேசப்பட்டன; சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஆனால், தமிழைத்தான் எங்குமே காணோம் ! தமிழிசை இயக்கம் பல தமிழிசைச் சங்கங்கள் உருவாக உதவியது; அவ்வளவுதான். இன்னமும் தெலுங்குதான் இசையரங்குகளில். 'தமிழனுக்கு இரும்புக் காது' என்று சொன்ன பாரதியின் வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தமிழர்கள் இன்னமும் தெலுங்குப் பாட்டைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ! பாரதி பக்தி வாழ்க !

தமிழிசையின் கதிதான் தமிழ் ஆட்சி மொழிக்கு; அதே(ா) கதிதான் தமிழ்ப் பயிற்றுமொழிக்கு.

'தமிழ்ச் சான்றோர்கள்' என்ற முத்திரையில் ஒரு பெருங்கூட்டம் உயிரைப் பணயமாக வைத்துப் 'பட்டினி'ப் போரில் இறங்கியது. தமிழக அரசின் மனமும் இரங்கியது. பட்டினியால் இறங்கிய சான்றோர் மனங்குளிர ஒரு குழு அமைக்கப்பட்டது. ஜூன் மாத இறுதிக்குள் அறிக்கை தரப் பணிக்கப்பட்டது.

வழக்கம்போல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. தமிழகத்து நீதிமன்றத்தில் தமிழுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். நீதி வேறு, தமிழ் வேறு என்பது சட்டமோ என்னவோ தெரியவில்லை. கல்விக்கூடங்களெல்லாம் கோடை விடுமுறைக்குப் பின் திறக்கப்பட்டுவிட்டன. விடுமுறைக்கு முந்தைய நிலையில்தான் தமிழ். கன்னித் தமிழ் என்றும் ஒன்று போல், இருக்க வேண்டுமென்றுதான் பழைய நிலையிலேயே வைத்திருக்கிறோம்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது – ம.பொ.சி. தமிழுக்காக ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது – 'ஐந்தாண்டுகளில் எங்கும் எதிலும் தமிழே இருக்கும்' என்று அரசின் தலைமைப் பீடத்திலிருந்து முதலமைச்சராக அறிஞர் அண்ணா அறிவித்தார். பல ஐந்தாண்டுகள் கடந்து போய்விட்டன. நடைமுறை வேகத்தில் நத்தையையே நாம் தொடர்ந்து தோற்கடிப்பதில் வெற்றி வாகை சூடிக் கொண்டிருக்கிறோம். 'பதறாத காரியம் சிதறாது' – இப்படி நமக்காகவே நாமே ஒரு பழமொழியைப் படைத்திருக்கிறோம். 'தூங்குக தூங்கிச் செயற்பால' என்ற வள்ளுவர் வாக்குக்கு இந்தக் கண்ணோட்டத்தில் ஒரு புரட்சியுரை காண ஒரு புதுப் பரிமேலழகர் தோன்றுவாராக !

கோடை விடுமுறையின்போது கல்வித் துறை பற்றிச் சிறு சலசலப்புத் தோன்றும். கல்வி நிலையங்கள் திறக்கும். பழையபடி பழைய வழியிலேயே பாடங்கள் நடக்கும். தமிழ் பற்றிய 'சத்த'மும் அப்படியேதான்.

www.tamilarangam.net

தமிழ் மொழியின் ஓர் எழுத்துக்கூடத் தெரியாமல் இங்கே மழலையர் வகுப்பு முதல் முனைவர் பட்டம்வரை வெற்றிகரமாகக் கல்வியரங்கிலே நடமாட / நடனமாட முடியும். இதில் யாருக்கும் வெட்கமில்லை.

சிறுபான்மையினர் பூச்சாண்டி இங்கேயும் உண்டு. இந்தப் பூச்சாண்டியைக் காட்டிப் பேயாட்டம் போட இங்கே மிகப் பலர் உண்டு. திரை மறைவிலே 'சூத்திரதாரி'களாகவும் திரைக்கு வெளியே கல்விச் சிந்தனையாளராகவும் சிறுபான்மையினரின் காவல் தெய்வங்களாகவும் நாடகம் போட இங்கே செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்கள் ஏராளம்.

அண்டை மாநிலங்களிலே இந்தப் பூச்சாண்டிக்கும் பேயாட்டத்துக்கும் இடம் இல்லை. இது இங்கே உள்ள எல்லாருக்குமே தெரியும். பேருந்துக் கட்டணமா, மின்சாரக் கட்டணமா அண்டை மாநிலங்களின் நிலவரத்தை உடனே எடுத்துக்காட்டி மலர்முடி சூடிக்கொள்ளும் பொதுவாழ்வுத் தலைவர்கள். மொழியுரிமை என்றால் அரைகுறை நினைவு நோய்க்கு ஆளாகிவிடுகிறார்கள். இந்த நோய்க்குக் கட்சி வேறுபாடு கிடையாது; சமரச / ஐக்கிய முன்னணிதான்!

அரசியலில் வாத்துக்குத் தேவைப்பட்டால், 'பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர் 'அனுசரி'த்து நடந்து கொள்ளவேண்டும் என்று தலைவர்கள் இராச தந்திரம்' பேசுவார்கள். தமிழுக்கு முதலிடம் / முதன்மையிடம் என்றால், 'ஐயோ தெலுங்கு பேசும் உடன்பிறவா உடன்பிறப்புக்கள் என்னாவார்கள்? கன்னடம் பேசுவோரிடம் கனிவு காட்ட வேண்டாமா? மலையாளத்துக்காரர்களை மறந்துவிடலாமா? – என்றெல்லாம் ஒருமைப்பாட்டுணர்வு வயப்பட்டு விடுவார்கள். பிற மொழியினிடத்து இரக்கம் – தேவையல்லாத – அந்த மொழிக்காரரும் தேடாத – இரக்கம் காட்டித் தமிழுக்கு இரக்கம் தேடுவார்கள். எல்லாம் வா(க்)கீசுவரியிடம் காட்டும் பக்திதான். 'பக்தியினாலே தெய்வ பக்தியினாலே மேன்மைகள் எய்திடும்' என்று பாரதியார் பாடியிருக்கிறாரே – என்ன செய்வது!

ஆங்கிலம் படிக்காவிட்டால் அயல் மாநிலங்களில் வேலை பார்க்க முடியாதே ! அயல் நாடுகளில் பணி புரிய முடியாதே! – இப்படி ஒரு வாதம். ஒரு நூறாயிரம் பேரில் மிகச் சிலர் வேறு மாநிலம் போக நேரிடலாம்; ஒருவர் இருவர் அயல்நாடு போக நேரிடலாம். இந்த அரைக்கால் / மாகாணி வீசம் பேருக்காக இங்கே எல்லாரும் ஆங்கிலேயர்களாக ஆக வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க நம் பெருமக்களுக்கு நேரம் இராது. அதுமட்டுமல்லாமல், வேற்று மாநிலத்தவர்களை இருகரம் நீட்டி எப்போதும் வரவேற்றுக் கொள்வதில்லை என்பதும் நம் பெரியவர்களுக்குத் தெரியும்.

அப்படியே பார்த்தாலும் ஆங்கிலம் படிக்க வேண்டாம் என்று இங்கே – தமிழ்நாட்டில் – யாருமே சொல்வதில்லை. 'மூணாம் கிளாசிலேயே' ஆங்கிலம்

www.tamilarangam.net

நுழைந்துவிடுகிறது. பொதுக் கல்வி முடித்தபின் தொழிற்கல்விக்குப் போனாலும் ஆங்கிலப் பாடம் விடாது. தமிழ்ப் பற்றாளர் சொல்வது : ஆங்கிலத்தைப் படியுங்கள், ஆங்கிலத்தில் படிக்க வேண்டாம்; அதை ஒரு மொழியாகப் படியுங்கள், பயிற்றுமொழியாக ஆக்காதீர்கள்.

நம் 'பெரியவர்களுக்கு இது தெரியாமலில்லை; நன்றாகவே தெரியும். தெரிந்தும் மறைப்பதற்கும் மறுப்பதற்கும் வா(க்)கீசுவரியின் பசிதான்.

எனக்கு ஒரு நண்பர்; நல்ல சிந்தனையாளர். அவர் சொல்கிறார்: "தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் பெரும்பாலானவை கிறித்தவர்கள், பிராமணர்கள், இருமொழியாளர்கள் வசத்தில் உள்ளன. ஆகையால் தமிழுக்குச் சிறப்பு வருவதை அவர்கள் விரும்புவதில்லை. அவர்களின் ஆதரவை – குறிப்பாகத் தேர்தல் காலங்களில் அவர்களின் ஆதரவை – நாடித் திருவோடு ஏந்துகின்ற அரசியல்வாதிகள் தமிழன்னைபால் காட்டும் பக்தியைவிட வாக்கீசுவரியால் செலுத்தும் பக்தியே பதவிப் பயன் தரும் என்றுணர்ந்த மெய்ஞ்ஞானிகளாகின்றனர்". நண்பரின் சிந்தனை அவ்வளவு சரியானது என்று நாம் நம்பவேண்டியதில்லை. சிறுபான்மைச் சமுதாயத்தினரை நாம் ஐயக் கண் கொண்டு பார்க்க வேண்டாம்.

அப்படியே அந்தச் சிந்தனையில் உண்மை இருந்தாலும், அவர்களுக்கு அடிபணிய வேண்டுமென்பதில்லை. பார்க்க வேண்டியவர்களைப் பார்க்க வேண்டிய முறையிலே பார்த்து – பேச வேண்டியதைப் பேசவேண்டிய முறையிலே பேசித் தமிழ்மொழியின் தலைமைத் தகைமை குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஐந்தாண்டுப் பதவியைவிடத் தமிழ்மொழிக் காவற்பணி முதன்மையானது என்பதை மறந்துவிடப் பார்ப்பவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டும். கல்விச் சிந்தனையாளர்கள் சத்தியம் பேணுவோராக – நீதி மன்றத்தவர் போல நீதிச் சார்பு ஒன்றை மட்டுமே பேணிட வேண்டும். மேலே குறித்த சிறுபான்மையினரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்து வாழும் இடத்து மொழிக்குரிய தொண்டர்களாக அவர்களை ஆக்கவேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் உரிய விழிப்பைப் பெறாவிட்டால் சொந்த நாட்டிலேயே அன்னியர்களாவார்கள். இது ஆபத்துமிக்க அவலம்.

# மனிதனும் மொழியும்

– இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

லண்டன் மாநகரில் கிட்டத்தட்ட 300 மொழிகள் பேசும் மக்கள் உள்ளனர் என்று அண்மையில் வெளிவந்த அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஏழு இலட்சம் மக்கள் தொகை கொண்ட இத் தலைநகரில் உலகிலிருந்து படிப்பதற்கு, பணம் சேர்ப்பதற்கு, அகதியாய் வாழ்வதற்கு, அரசியல் வேளைகள் செய்வதற்கு என்று ஆயிரக்கணக்கான மக்கள் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள்.

நிரந்தரமாகத் தங்கி வாழும் பிற நாட்டார் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியில் கல்வியைக் கொடுத்து, அவர்களின் அறிவு வளர்ச்சியை விரிவுபடுத்த இங்கிலாந்து அரசாங்கம் தன்னால் ஆன முயற்சிகளை எடுக்கிறது.

இங்கிலாந்தில் சிறுபான்மையினராய் வாழும் மக்களில் எண்ணிக்கை கூடியவர்கள் இந்திய உபகண்டத்தைச் சேர்ந்தவர்கள். சீக்கியர்கள், குஜராத்தியர் என்போர் இந்தியர்களில் பெரும்பான்மையானவர்களாகும். அவர்களை விடப் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து வந்தோர்களின் தொகையும் நியாயமான அளவில் உள்ளது. குஜராத் மக்கள் தங்கள் மொழியையும் சமயத்தையும் பாதுகாக்கத் தங்கள் குழந்தைகளைச் 'சுவாமி நாராயணன்' பாடசாலையில் சேர்க்கிறார்கள்.

மொழி உணர்வும் மத உணர்வும் கொண்ட முஸ்லீம்களும் இப்படியே தங்கள் தாய்மொழியைப் பேண தங்களால் முடிந்த முயற்சிகள், அதாவது மசூதிகளில் அரபு மொழியைக் கற்பிப்பது போன்ற செயல்களைச் செய்கிறார்கள்.

லண்டனில் கிட்டத்தட்ட 1,20,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள். 1956–ஆம் ஆண்டிலிருந்து சிங்களப் பேரினவாதம் இலங்கையில் தமிழ்மொழிக்கெதிராக அவிழ்த்து விட்ட கொடிய இன அழிப்பு செயல்பாடுகளிலிருந்து உயிர்தப்பி வந்தோர், மேற்படிப்புக்காக வந்தோர் என்று பலதரப்பட்டோர் இதில் அடங்குவர்.

இந்த இலங்கைத் தமிழர் இதுவரை 27 பாடசாலைகளையும் (தமிழ்), 9 சைவக் கோயில்களையும் உள்ளாக்கி உள்ளனர். கேம்பிரிட்ஜ் லெவலில் தமிழ் பரீட்சை எடுக்கிறார்கள். இந்தியாவில் தமிழுக்கு ஏற்பட்ட நிலை குறித்து வேதனை தருகிறது. தமிழர்களுக்காக, தமிழர்களாகப் பிறந்த திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியிலிருந்தும், தமிழ்நாட்டில் தாய் மொழிக்கல்வி அவசியமா? என்ற சர்ச்சை தமிழராய்ப் பிறந்தவர்களை தலைகுனியப் பண்ணும் கேள்வியாய்த் தானிருக்கிறது.

www.tamilarangam.net

பிரெஞ்சு நாட்டான் இப்படிக் கேட்பான்? இல்லை இனி இல்லை என்ற பஞ்சத்திலும், அரசியல் குழப்பத்திலும், அடிக்கடி கஷ்டப்படும் ரஷ்ய மக்கள்தான் உத்தியோக வசதிக்காக ஆங்கிலம் படிப்போம் என்று சொல்வார்களா?

ஒருத்தரின் அறிவை அளவிட அவனின் ஆங்கிலக் கல்வி உதவி செய்கிறது என்று பிரபல எழுத்தாளர் ஒருவர் அண்மையில் ஒரு தமிழ்நாட்டுப் பத்திரிகையில் எழுதியிருந்தார். இதைக் கேட்க வெட்கமாக இருக்கிறது. இன்று பொருளாதாரத்தில் முன்னணியில் நிற்கும் ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகள் ஆங்கிலத்தில் கல்வி புகட்டவில்லை. தங்கள் தாய்மொழியில் தான் கல்வி கற்கிறார்கள்.

பிரித்தானிய கல்வி நிபுணர்கள் குழந்தைகளின் தாய்மொழிக்கல்வி, அந்தக் குழந்தைகளின் COGNITIVE DEVELOPMENT –ஐ அதாவது அறிவுபூர்வமான வளர்ச்சியை மேம்படுத்துகிறது. அதற்காகக் கோடிக் கணக்கான பவுண்டுகளை செலுவழித்து இந்தியக் குழந்தைகளுக்கு, பாகிஸ்தான், பங்களாதேசக் குழந்தைகளுக்கு தாய்மொழிக் கல்வி கொடுக்க ஆவன செய்கிறார்கள்.

ஆங்கிலம்தான் ஒரு மனிதனின் கல்வி அறிவுக்கு ஒரு அளவுகோல் என்று சொல்லும் எழுத்தாளர், உலகத்தில் சமய ரீதியாக, விஞ்ஞான ரீதியாக, அரசியல் ரீதியாகப் பல மாற்றங்களைச் செய்த மேதைகள் பலர் ஆங்கிலத்தில் புலமைபெற்றவர்கள் அல்லர் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை போலும். இந்த ஆங்கில அறிவு ஒரு மனிதனின் ஞான வளர்ச்சியின் அளவுகோல் என்று இந்திய துணைக் கண்டத்தை மனதில் வைத்துக் கொண்டு சொன்னாலும் அந்தக் கூற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

இந்தியத் துணைக் கட்டத்தில் மாபெரும் சிந்தனைவாதியான ஈ.வெ.ரா. என்ன இங்கிலிஸ் பண்டிதனா? இல்லை தமிழினத்தைத் தட்டி எழுப்பிக் கவி பாடிய பாரதிதான் என்ன ஆங்கில மேதையா? ஒரு மனிதனின் இரு கண்கள் அவன் பிறந்த, பெற்ற பொன்னாடும் அவன் பேசும் தாய்மொழியும்தான். தன் மொழியின் மகிமை தெரியாதவன் தன் சுயமையின் வலிமை தெரியாதவன்.

குழந்தையின் அறிவு வளர்ச்சியில் பெரும் பகுதி ஐந்தாம் வயதிற்கு முன் நடக்கிறது. மிகுதிதான் அந்தக் குழந்தை வாழும் பிற்காலத்தில் நடக்கிறது. இத்தகு சக்தியின் கூர்மை இளம் வயதில் பரிமாணம் எடுக்கிறது. தான் பேசும் மொழியின் தொடர்பு இயற்கையான இந்த வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. அன்னிய மொழி மோகம் சமுதாயச் சிந்தனையை வளர்ப்பதற்கு உதவி செய்யலாம். ஆனால் அதற்காகத் தன் தாய்மொழியை உதாசீனம் செய்வது அபத்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று லண்டனில் வாழும் பிற தேசத்துக் குழந்தைகளில் கல்வித் துறையில் மேம்பாடாக இருப்பவர்கள் இலங்கை, இந்தியக் குழந்தைகளாகும். இவர்களில் பெரும்பாலோர் தங்கள் தாய்மொழியைப் படிக்காதவர்களாகத்தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இன்று நடைபெறும் இந்தச் சர்ச்சைக்கு கல்லூரிகளிலும் சர்வகலா சாலைகளிலும் தேவையான பாடப் புத்தகங்கள் தமிழில் இல்லை என்ற நொண்டிச் சாட்டும் ஒன்றாகும்.

தேவையான புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவோ எழுதவோ தகுந்த மேதைகள் இந்தியாவில் இல்லையா? உலகத்தில் எந்தக் கோளத்தை எடுத்தாலும் சொந்த மொழிக்காகவும் நாட்டுக்காகவும் மதத்திற்காகவும் விடுதலைப் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதே காலகட்டத்தில் சொந்த மொழிக்கல்வி தேவையா? என்பது நம்பமுடியாத சர்ச்சையாக இருக்கிறது.

இந்தியாவில் இன்று பெருகிவரும் அன்னிய மோகம் (மொழியாக இருக்கட்டும், வாழ்க்கைமுறையாக இருக்கட்டும், நடுத்தர வகுப்பினரின் சுயநலத்தைக் காட்டுகிறது. ஆங்கில மொழிவெறி தமிழ்த் துரோகத்தின் ஒரு கேடயம். கல்வியை வியாபாரமாக்கும் "படித்தவர்களின் பண்பற்ற செயல்" தாய்மொழியைக் கேவலப்படுத்துவது தன்னைப் பெற்ற தாயைக் கேவலப்படுத்துவதற்குச் சமம். அரசியல் புரட்சிக்கு வழிவகுத்த கார்ல் மார்க்ஸ் ஆங்கில மேதையல்ல. மனோ தத்துவத்தின் மகிமை பற்றி எழுதிய பிராய்டு ஆங்கிலத்தில் எழுதவில்லை. பிரான்ஸ், ஜெர்மன் தத்துவ ஞானிகள் ஆங்கிலத்தில் ஒன்றும் எழுதவில்லை.

இந்தியாவின் சுயநலவாதிகள் ஒரு மொழியை அழிக்கத் துணிந்துவிட்டார்கள். சில வெகுஜன பத்திரிகைகளும் தமிழ்ப் பெயரில் ஆங்கிலத்தை புகுத்தி எழுதித் தமிழின் வளர்ச்சியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழன் இன்று 76 நாடுகளில் பரந்து வாழுகிறான். எங்கிருந்தாலும் தென்னாடுடைய சிவனே போற்றி எந் நாட்டவருக்கும் இறைவா போற்றி என்று அகமகிழ்கிறான். தென்னாட்டவரோ எங்கள் நாட்டில் தமிழ் வேண்டாம், ஆங்கிலம்தான் எதிர்காலத்தைத் தரப்போகிறது என்று முழங்குகிறார்கள்.

**தொழிலுக்காகத் தன் தாய்மொழியை மறப்பவர்கள், பணத்திற்காகத் தன் தாரத்தையும் தாயையும் விலை கூறத் தயங்காதவர்கள். ஆங்கிலம் படித்தவர்களாகவும் அயல்நாடு செல்பவர்களுமாய் இருப்பவர் பலர் "தமிழ் உணர்வு கொண்ட தமிழர்கள் அல்லர்". இவர்கள் தமிழ்நாட்டையும் அரசியலையும் மொழியையும் தங்கள் சுயநலத்திற்காக விற்றுப் பிழைக்கத் தயங்காதவர்கள்.**

www.tamilarangam.net

இங்கிலாந்து இன்று ஐரோப்பிய அணி சேர்ந்த ஒரு சிறு நாடு. பெரிய நாடான ஜெர்மனி அல்லது பிரான்சில் தொழில் வசதி உள்ளது என்பதற்காக ஒரு ஆங்கிலேயன் தன் சுயமொழியை விடுவது கனவிலும் நடக்கமுடியாத காரியம். கடந்த ஆயிரமாண்டுகளாய் ஒருத்தரும் அடிமை கொள்ளாத நாடு இங்கிலாந்து. அதற்குக் காரணம் இவர்கள் தங்கள் மொழியை பக்தியுடன், வீரத்துடன், காதலுடன் நேசிப்பவர்கள். ஒரு விதத்தில் சொல்லப் போனால், பிரெஞ்சுக்காரர் சொல்வது போல் ஆங்கிலேயர் தங்கள் மொழி பற்றி மிகப்பெருமை கொண்டவர்கள். அந்தப் பெருமை தமிழனுக்கில்லையா? சுயமைக்கு கவுரவம் கொடுக்க ஏன் தயக்கம்.

***

## *வரப்பெற்றோம் நன்றி*

- இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்
  நிகழ் கட்டுரைகள், தொகுப்பு – ஞானி
  காவ்யா, பக்கங்கள் 192 ரூ. 65.00

- மார்க்சிய நோக்கில் தமிழ் இலக்கியம்
  முனைவர் சு. துரை, காவ்யா ரூ. 80.00

- சுந்தர ராமசாமி – ஒரு கதைகாரர்
  முனைவர் இராம. திருநாவுக்கரசு
  காவ்யா, ரூ. 100.00

- மார்க்சியம் – தேடலும் திறனாய்வும்
  நிகழ் கட்டுரைகள், தொகுப்பு – ஞானி
  புதுமலர் படைப்பகம், கோவை 45. ரூ. 80.00

- நாவல் வளர்ச்சி – கிறிஸ்துவ இலக்கியம்
  தொகுப்பு – டேவிட் சித்தையா
  மணிவாசகர் பதிப்பகம், ரூ. 100.00

- உண்மை ஒளிர்கவென்று பாடவோ (நாவல்)
  பா. விசாலம், விஜயா பதிப்பகம், கோவை – 1 ரூ. 100.00

- மைக்கேல் காலின்ஸ்
  ப. இராமசாமி, விஜயா பதிப்பகம், ரூ. 75.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வள்ளலாரின் சன்மார்க்க இயக்கம்

- முனைவர் கி. சுப்பிரமணியம்

19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது சன்மார்க்க இயக்கம். அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்பட்ட சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளால் இது தோற்றுவிக்கப்பட்டது. வள்ளலார் என்றாலே 'முக்காடு போட்ட வெள்ளை வேட்டிச் சாமி' என்றுதான் தமிழகம் நினைக்கிறது. சைவச் சிறையில் அவரை அடைக்கப் பார்க்கும் அடியார்களும் இருக்கிறார்கள். 'அவர் உண்டாக்கியது புதுச்சமயம்' என்று சொல்லி அவரைப் பெருமைப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு அவரைத் தனிமைப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். இவையெல்லாம் அவருக்குப் புகழ் சேர்க்கவில்லை. மாறாக அவர் பெறவேண்டிய இடத்தையும் பெறாமல் செய்துவிட்டன.

வள்ளலார் காலச் சூழலைச் சற்று நினைவுபடுத்திக் கொள்வது பயன் தரும். 'பஞ்ச நூற்றாண்டு' என்று அரசால் குறிக்கப்பட்ட அந்தக் காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் உயிரிழந்தனர். இன்னும் பல்லாயிரம் பேர் நோயால் நலிவுற்றுச் சிதைந்தனர். பாதுகாப்பு தேடிக் கொள்ளக்கூடிய மக்கள் நிலை இவ்வாறு என்றால் விலங்குகளின் நிலை எவ்வாறிருந்திருக்கும் என்று எண்ணுதற்குமில்லை.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தேன்
வீடு தோதிருந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக் கண்குளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றார் என் நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மணிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தம்மைக்
கண்டே இளைத்தேன்"

என்ற அருட்பா அந்தக் காலத்தில் ஏழையரின் வறுமைத் துன்பத்தைக் காட்டும் வரலாற்றுக் குறிப்பே ஆகும்.

இந்தச் சூழலில் இந்த ஏழையரைக் காப்பாற்றச் செல்வர்கள் முன்வரவில்லை; சமயத்தையும் பக்தியையும் வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்ட மடாதிபதிகள் முன்வரவில்லை: கஞ்சித்தொட்டிகள் வைத்து ஒரு வாய் ஊற்றிய அரசும் – வெள்ளைய அரசும் – ஏதும் பெரிதாகச் செய்யவில்லை. ஆனால் அரசு விழாக்களோ மடாதிபதிகளின் ஆடம்பர ஊர்வலங்களோ செல்வர்களின் களிப்பாட்டங்களோ சிறிதும் குறையவில்லை. வள்ளலார் பாடினார்; மனமுருகிப் பாடினார். ஏழைகள் உண்ண உணவின்றிப் பசியால் துன்புறும்போது இப்படிப் பட்டோடும் பணியோடும் திரிகின்ற மேல்தட்டு மக்களைப் பார்த்து வெகுண்டு பாடினார் :



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்ததனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேநீர்
கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடு இரண்டு சேர்த்தெண்ணவும் அறியீர்
எத்தனை கொள்கின்றீர் பித்துலகீரே !'

செல்வருக்கு எதிராக எழுந்த ஏழையின் முதற்குரல் இது. மேலை நாடுகளில் மார்க்சீயச் சிந்தனை மலர்ந்த போது தமிழகத்தில் ஒரு துறவி இந்த எண்ணத்தைத் தோற்றுவித்தது வியப்பூட்டுகிறது.

இந்த வியப்பு வள்ளலாரைப் பற்றிய மறு ஆய்வுக்கும் வழி வகுக்கிறது. ஏழைகளுக்காக ஒருவர் இப்படிக் கசிந்துருகியது பலரையும் மருளவைத்தது.

"ஏழைமக்களின் நடுவே இந்த காட்டில் ஓர்
அருளாளர் பிறப்பார். அவரே சமயக் காவல
னாகவும் இருப்பார். நாகரிகத்தின் தெய்வச்
செய்தியை அவர் கொணர்வார்!" என்று

பின்னாளில் ஒருவரை எதிர்பார்த்துத் தாகூர் வாழ்ந்திருந்தார். (India's Evolution, It's meaning. p. 126)

ஒருவன் பசித்து இருக்கும்போது இன்னொருவன் செல்வத் திளைப்பில் திகழ்வது மானிட நாகரிகமாகாது. பிறர் துன்பம் கண்டு இரங்குவதே நாகரிகம் என்று வாழ்ந்து காட்டிய வள்ளலாரைப் பற்றித் தாகூர் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் வடலூர் வந்து வழிபட்டுப் போயிருப்பார்.

வெறும் கண்ணீர் சிந்தும் வண்ணம் மனம் உருகப் பாடுவதால் மட்டும் ஏழைகளுக்குச் சோறு வந்துவிடாது. மானிடர்க்குப் பயன்படும் வண்ணம் பணி அமைய வேண்டும். அந்த நோக்கில்தான் எந்தச் சமயமும் மதமும் அமைய வேண்டும். வள்ளலார் எண்ணிப் பார்த்தார். அன்றிருந்த தமிழகத்தில் இருந்த சமய நிறுவனங்கள் உயர் சாதி மடங்களாகவே இருந்தன. மடங்களின் வாசலைக்கூட ஏழையர் மிதிக்க முடியாத சாதிவெறி. வள்ளலாரைப் போல சாதி எதிர்ப்புக் கொள்கையில் தீவிரம் காட்டியவர்கள் அந் நாளில் வேறு யாருமில்லை. இந்த மடாதிபதிகளை நம்பினால் சோறு கிடைக்காது. செல்வர்களோ தங்கள் வயிற்றுக்குள் வாழ்வைச் சுருக்கிக் கொண்டார்கள். வெள்ளைய அரசுக்கு இதில் நாட்டமில்லை. இப்படி மக்கள் துன்புற்றால் எளிதாக அவர்களை மதமாற்றம் செய்யலாமே என்று காத்திருந்த கிறித்தவர்க்கு அரசு துணை போயிற்று. ஏழைகளை யார் காப்பாற்றுவது?

www.tamilarangam.net

இது ஒரு புறம். வேறு புறமாகப் புத்தறிவாளர்கள் எழுந்தனர். ஆங்கிலக் கல்வியும் வெள்ளையர் உறவும் அறிவுக் கோவிலின் புதிய வாசல்களைத் திறந்தன என்பது மெய்யே. அதற்குள் நுழைந்து ஆங்கில அறிவு பெற வாய்ப்பு அடைந்தவர்கள் எல்லாவற்றையும் ஆங்கில மயம் ஆக்கத் தீவிரம் காட்டினார்கள். உணவு, உடை, வழிபாடு என்று எல்லா நிலைகளிலும் அளவுகடந்த வேகம் காட்டினார்கள். பழைமையான தமிழகப் பண்பாடு தகர்க்கப்படும் சூழல் உருவாயிற்று. அதற்கும் இடம் கொடுக்கக் கூடாது.

இப்படிப் பன்முக எதிர்ப்புச் சூழல்களுக்கிடையே வள்ளலார் சன்மார்க்க இயக்கத்தை உருவாக்கினார். 'சன்மார்க்கம்' என்பது அவர் உருவாக்கிய புதிய சொல்லன்று: திருமந்திரம் காலம் தொட்டுத் தாயுமானவர் காலம் வரை வழக்கில் இருந்து வந்த சொல்லே. பாடல்களில் இருந்த ஒன்றை மக்கள் வாழ்வில் கொண்டுவந்த பெருமை வள்ளலாருக்கு உரியது. சிவபெருமான் புகழ்பாடும் அதை ஏழை சிந்தும் கண்ணீருக்கும் அடைமொழியாக்கியது வள்ளலார்தான்.

சன்மார்க்கம் என்பது சத் + மார்க்கம் என்ற வடமொழிச் சொற்கள் இரண்டின் கூட்டு. 'உண்மை வழி' என்று பொருள்படும். பலரும் இதற்குப் பலவிதமாகப் பொருள் கூறுவர். இறைவன் அடைய உதவும் நான்கு நெறிகளுள் நான்காவதான ஞான மார்க்கமே இது என்று திருமந்திரம் கூறுகிறது : வள்ளலாரும் எழுதியுள்ளார். இங்கு ஞானம் பற்றி மட்டும்தான் பேச்சு; சமயக் குறிப்பில்லை. அமுத சாகரம் என்ற நூல் 'சமய எல்லை தாண்டிய பொது நிலை' என்று கூறுகிறது. இங்கு ஞானம் பற்றிக் குறிப்பில்லை; சமயப் பொதுமையே குறிக்கோள். இன்றைய 'secularism' என்ற சொல்லுக்கு ஈடான நிலை இது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் கீழ்க்கண்டவாறு கூறுவதும் எண்ணற்குரியது.

"கடவுள், மதம், சாதி, பணம், தொழில் முதலிய எல்லாமே சமரச சன்மார்க்கத்திற்குப் பகையானவை; மனிதனை வேறுபடுத்துபவை. இவை தொடர்பான எல்லாக் கட்டுப்பாடுகளையும் அழிப்பதே சமரச சன்மார்க்கம்." (பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள். ப. 1407)

இந்தச் சொற்களுள் 'கடவுள்' என்ற ஒரு சொல் தவிர எஞ்சியவை வள்ளலார் கூறிய வரையறைக்குப் பொருந்தும். சாதிகளால், சமய மதங்களின் பெயரால் ஏற்படும் போலிச் சடங்குகள், அவற்றைச் செய்தே ஆக வேண்டும் என்ற கண்மூடித்தனமான வழக்கங்கள் இவை எல்லாமே வள்ளலாருடைய சமய நோக்குக்கு எதிரானவை.

'கிழக்கு வெளுத்தது கருணை அருட்சோதி உதயம்
கிடைத்தது எனதுளக்கமலம் கிளர்ந்தது
சழக்கு வெளுத்தது சாதி ஆச்சிர மாசாரம்
சமய மதாசாரம், எனச் சண்டையிட்ட கலக வழக்கு வெளுத்தது'

www.tamilarangam.net

என்பது அவர் பாட்டு. சடங்குகள், போலியான உண்மைக்கு மாறான பழக்க வழக்கங்களை வள்ளலார் எதிர்த்தது போலப் பின்னாளில்கூட ஈ.வே.ரா. ஒருவரைத் தவிர யாரும் எதிர்க்கவில்லை.

சன்மார்க்கம் மேலான வாழ்வுநெறி காட்டுவது என்று வள்ளலார் நம்பினார். சமயநெறி ஒன்றைச் சமூக இயக்கமாக, சன்மார்க்க இயக்கமாக மாற்ற முடியும் என்று கருதினார். அந்த நோக்குடன் அவர் பிற அன்பர்களுடன் சேர்ந்து அமைத்தனவே மூன்று அமைப்புக்கள். சன்மார்க்க சங்கம், சத்திய தருமச் சாலை, சன்மார்க்க சபை என்பன அவை.

1. சன்மார்க்க சங்கம் :

வள்ளலாரால் சங்கம் 1865–இல் நிறுவப்பட்டது. அவர் தம்முடன் இருந்த பல அன்பர்கள் துணையுடன் இதை ஏற்படுத்தினார். அவர்கள் பல சாதிகளைச் சேர்ந்தவர்கள். அந்தணர் இருந்தார்; செட்டியார் இருந்தார்; படையாச்சி இருந்தார்; தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் இருந்தனர்; முஸ்லீம் அன்பரும் இருந்தார். இப்படிப் பலரை ஒன்று சேர்த்ததே அந் நாளில் அவர் செய்த பெரும் புரட்சி. மடங்களும் செல்வரும் பழைமைவாதிகளும் வள்ளலாரை வெறுக்க இதுபோன்ற பணிகளே காரணமாயிற்று.

சங்கம் அன்று கூடிப் பேசிக் கலைந்து செல்வதற்காக மட்டுமில்லை; சமுதாயப் பணிகள் புரியவும் வேண்டும் என்ற மையப்பொருள் கொண்டு வள்ளலார் சில திட்டங்கள் வகுத்தார். அவற்றுள் முதன்மையானவை (1) எல்லார்க்கும் (இளையர் – முதியர்) திருக்குறள் வகுப்புகள் நடத்துதல். (2) இலவச மும்மொழிப் பள்ளி நிறுவுதல். (தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் கற்பித்தல்) (3) இவற்றுக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்கப் பொருளுதவி செய்து பயிற்சிப்பள்ளி நடத்துதல். (4) ஏழை மக்களுக்கு இலவச மருத்துவப் பணி புரிதல்.

தொலைநோக்குடன் எவ்வளவு மேம்பட்ட குறிக்கோள்களை அவர் கொண்டிருந்தார் என்பது இவற்றின்மூலம் தெளிவாகும். ஆனால் இவை நடைபெற்றனவா என்று குறிக்கத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் ஏழை, எளியோரை மனதில் கொண்டு அவர்கள் உயர்வடைய அவர் வகுத்த வழிகள் இவை என்பதில் ஐயமில்லை.

2. சத்திய தருமச்சாலை :

1867 –இல் நிறுவப்பட்ட இவ் அமைப்பு இன்றுவரை இயங்கிவருகிறது. ஏழைகளுக்குச் சோறிடுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது. இந்தச் சாலைக்கான கட்டிடம் நிறுவத் தேவைப்பட்ட இடத்தைப் பல ஏழைகளே பணம்

www.tamilarangam.net

திரட்டி வழங்கினர். பசி நீக்கும் பேரறம் அன்றைய காலத்தின் தேவை. இது முன்னரும் கூறப்பட்டது. பசியால் ஆயிரக்கணக்கானோர் மாண்டு கொண்டு இருந்தபோது, செல்வரும் மடாதிபதிகளும் கவலையின்றிக் களித்தபோது, வடலூரார் இந்தப் பணியைத் துணிந்து பல எதிர்ப்புகளுக்கிடையே செய்தார்.

இன்னொன்று பசிக்கொடுமையைக் குறளுக்குப் பின்னால் மணிமேகலை விரிவாகக் கூறியது : அதற்குப் பின் உடலியல் வகையில், அறிவியல் வகையில், பசியால் ஏற்படும் விளைவுகளை முழுதும் விளக்கமாக எழுதியவர் வள்ளலார் தவிர யாருமில்லை. கிறித்தவப் பாதிரிமார்கள் சோறும் ஆடையும் தந்து ஏழைகளை மதமாற்றம் செய்ய முற்பட்டபோது ஒரு தடையாக வள்ளலார் இருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. ஆயிரக்கணக்கான மக்கள் ஒருங்கு கூடித் திறப்புவிழாவில் கலந்து கொண்டனர். தாமாகவே முன்வந்து அரிசி, பருப்பு, காய்கறி முதலியவற்றை வழங்கினர். இன்றும் அப் பணி தொடர்கிறது. அவர் ஏற்றிய அடுப்புத் தீ இன்னும் எரிவது சன்மார்க்க அன்பர்களுக்குப் பெருமை தரலாம். ஆனால் சோறின்றி இன்னும் ஏழைகள் இருப்பது நாகரிகத்தின் அடையாளமா?

### 3. சன்மார்க்க சபை :

1872 –இல் நிறுவப்பெற்ற இவ் அமைப்பு, கோயில் அல்ல. எல்லாரும்கூட ஏற்படுத்தப்பட்ட நீண்ட அரங்கமே. அங்கு ஒளி வழிபாடு மட்டுமே நடத்தப்படும். சபை வழிபாட்டில் அடிகள் செய்த சீர்திருத்தம் குறிக்கத்தக்க புரட்சியாகும். சாதி முதலிய வேறுபாடில்லை. எல்லோரும் உள் வரலாம். மத்தளம் முதலிய இசைக்கருவிகள் முழங்கக் கூடாது. நைவேத்தியம் இல்லை. தேங்காய், பழம் இல்லை. தீபதூபங்கள் ஆகா. திருநீறும் கூடாது. இந்தக் குறிப்புகள் வைதிக சமயத்தாரை வெறுப்புக் கொள்ளச் செய்தன. ஆனால் கண்மூடி வழக்கங்களைத் தாண்டி வ்ள்ளலார் ஆற்றிய பணிகள் இன்றும் பொருந்துவனவே.

இருபதாம் நூற்றாண்டில் சன்மார்க்க இயக்கம் தொடர்ந்து நடைபெற்றதா என எல்லாரும் வினவுகின்றனர். மேலை நாட்டுப் பெண்மணி (Anita Diehl) பெரியார் ஈ.வே.ரா. பற்றி ஒரு ஆய்வு செய்துள்ளார். அதில் அவர் பெரியாரின் சமூகச் சீர்திருத்த இயக்கத்துக்கு முன்னோடியாக இருந்தவர்களில் இராமலிங்க சுவாமிகளும் ஒருவர் எனக் குறிப்பிட்டுள்ளார். மூன்று இடங்களில் பெரியாரும் வள்ளலாரை மனம்விட்டுப் பாராட்டியுள்ளார்.

The Wonder that was India என்ற ஆங்கில நூலில் 19–ஆம் நூற்றாண்டில் இந்தியச் சமூகச் சீர்திருத்த இயக்கங்களைப் பற்றி எழுதிய ஜோர்டன்ஸ் என்பவர், சீர்திருத்தவாதிகளில் மிகவும் குறிக்கத்தக்கவர் இராமலிங்க சுவாமிகள் என்று கூறியிருக்கிறார். பாரதியார் 'தமிழ்நாட்டின் புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விழிப்புக்கு ஆதிகர்த்தர் இராமலிங்க சுவாமிகள் போன்றோர்' என்று எழுதியுள்ளார். கோவைப் பேராசிரியரான இந்தக் கட்டுரை ஆசிரியர் வள்ளலாரின் பணிகளை முன்வைத்து 'வள்ளல்ா ஒரு மறுமலர்ச்சியாளர்' என்று பிஎச்.டி. ஆய்வு செய்துள்ளார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியர் திரு. பரமார்த்திலிங்கம் Social Reformation Movements in 19th Century, Tamilnadu, with special Reference to St. Ramalingam என்று ஒரு பிஎச்.டி ஆய்வு செய்துள்ளார். இது போலச் சமயஞ்சாராத அவர் பணிகள் பற்றி ஆய்வுகள் வந்துள்ளன.

ஆயினும் அவர் தொடங்கிய நோக்கில் சன்மார்க்க இயக்கம் முழுமையாக வரவில்லை. அவர் காலத்திலேயே ஏற்பளிப்புப் பெற்ற பின்பும் கொண்டு செலுத்த ஆளில்லை. மறைமலையடிகள் வள்ளலாரைப் பின்பற்றிப் 'பொது நிலைக் கழகம்' என்னும் பெயரில் ஒரு சன்மார்க்க சங்கத்தைப் பல்லாவரத்தில் ஏற்படுத்தினார். அருட்பா, மருட்பா போரில் அருட்பா பக்கம் நின்றார். அவருக்குச் செல்வாக்கும் வசதியும் இருந்தன. ஆயினும் தீவிர சைவரான அவர் ஏனோ சன்மார்க்க இயக்கத்தை வளர்க்கவில்லை. அவரை அடியொற்றி வந்த திரு.வி.க. முதலில் மருட்பா பக்கம் நின்று, பின்பு 'இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்', 'சன்மார்க்கப் போதத்திரவு' ஆகிய நூல்களை எழுதித் தம்மாலானதைச் செய்தார். இவர்கள் இருவரும் சீர்திருத்த சைவர்கள் என்று குறிப்போருண்டு. திரு.வி.க.வை ஏற்கலாம். மறைமலையாரை அப்படி ஏற்பதற்கில்லை.

பொதுவுடைமைக் கட்சியில் மறைந்த தோழர் பெருந்தலைவர் 'ஜீவா' அவர்கள் வள்ளலாரின் சீர்திருத்தப் பணிகளையும் ஏழைகளுக்காக அவர் காட்டிய பரிசையும் செல்வர்களின் கொடுமையை எதிர்த்து அவர் எழுப்பிய குரலையும் முதன்முதலில் மேடையில் வெளிப்படுத்தினார். அவரை ஒட்டித் திருமதி சிவகாமசுந்தரி அதே இயக்கத்தில் இருந்தபோது வள்ளலாரின் சமுதாயப் பணிகளை மக்களுக்கு விளக்கிச் சொன்னதுண்டு. பிறகு அந்த வரிசையில் யாரும் இல்லை. பின் வந்தவர்கள் எல்லாம் அவர் சமயஞ்சார்ந்தவர், புதிய சமயம் ஒன்றைத் தோற்றுவித்தவர் என்றெல்லாம் முன்நிறுத்த முயன்றனர்; இன்னும் முயன்று வருகின்றனர். எப்பொழுதாவது ஒருநாள் விழா எடுத்து, வழிபாடு செய்து (அந்த வழிபாட்டில்கூட எது எது வேண்டாம் என்று அடிகள் சொன்னாரோ அவற்றைச் செய்து) 'பிரசாதம்' உண்பதோடு இயக்கம் வெற்றி பெற்றது என்போர் இருக்கிறார்கள்.

ஆனால் ஒரு இயக்கம் வெற்றி பெறுவது இடையில்வரும் சில 'தலைவர்'கள் முயற்சியால் தடைபட்டுப் போகிறது. ஆணிவேராக இருக்கின்ற தொண்டர்கள் என்றும் ஆழ்ந்த பற்றுடன்தான் இருக்கின்றார்கள். இன்றுகூடச் சிற்றூர்களில் பல இடங்களில் சன்மார்க்க சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஏழை மக்கள் அந்தச் சிந்தனையுடன் இருக்கின்றனர். சொல்லும் வகையில்

www.tamilarangam.net

அன்னதானம் முதலியவற்றைச் செய்தும் வருகிறார்கள். அவர்களையும் அவர்களுடைய சங்கங்களையும் ஒன்றாக இணைத்து நெறிப்படுத்தி முறையான இயக்கத்தை நிறுவினால் 'இராமகிருஷ்ணர் பணிமன்றம்' போல இதுவும் பெரும் பங்கு ஆற்றும் என்பதில் ஐயமில்லை. கீழ்க்கண்ட தாயுமானவர் பாடல் சன்மார்க்கத்தின் உயர்நிலையைக் காட்டுவதாகும்.

அந்தோ ஈததிசயம் இச்சமயம்போல் இன்
றறிஞர் எலாம் நடுவறிய அனிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம் வேறில்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியேதான் சன்மார்க்கம்".

❋❋❋

## *வரப்பெற்றோம் நன்றி*

- அலெக்சாண்டரும் ஒரு கோப்பை தேனீரும் (நாவல்) எம்.ஜி.சுரேஷ்
  புதுப்புனல், சென்னை 23 ரூ. 115.00
- கனவில் செய்த மழையைப் பற்றி இசைக்குறிப்புக்கள்
  ரமேஷ் – பிரேம், புதுப்புனல், சென்னை – 23 ரூ. 70.00
- காவிரி – தமிழகம் இழந்து வரும் வரலாறு முதல் கட்டம்
  எஸ். கிருஷ்ணசாமி, காவிரி காப்புக் குழு,
  கரூர் – 639 001 ரூ. 15.00
- பெருமூச்சுக்களின் பள்ளத்தாக்கு
  கவிஞர் சிற்பி
  கவிதா வெளியீடு, சென்னை 17 ரூ. 40.00
- ஒரு சங்கீதம் போல
  பெரும்படலம் ஸ்ரீதரன்
  தமிழில் கவிஞர் சிற்பி, கவிதா பதிப்பகம், சென்னை – 17. ரூ. 60.00
- உஜ்ஜயினி
  காவ்யம் ஒ.என்.வி. குருப்
  தமிழில் கவிஞர் சிற்பி, கவிதா வெளியீடு, சென்னை – 17. ரூ. 70.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடிமை வாழ்வு

ஏடா முண்டம், தமிழப் பயலே
ஏனோ உலகில் வாழ்கின்றாய் நீ?
நாடும் மொழியும் போன பின்னே
நாய்போல் அடிமை வாழ்வும் வாழ்வா?

உண்மை விளங்கிக் கொண்டாயில்லை
உரிமை கேட்கத் தெரிந்தாய் இல்லை
மண்ணாய் மரமாய்ப் போனாயே, டா
மானம் கெட்டுத் திரிகின்றாயே.

சொந்த மண்ணில் அடிமை ஆனாய்
சுரண்டு வார்க்குப் பகடை ஆனாய்
வந்த நாய்கள் ஏற விட்டாய்
வரலா றெல்லாம் தாழ்ந்தே கெட்டாய்.

கலைகள் எல்லாம் பறித்துக் கொண்டார்,
கடவுள் களுக்கும் தரகர் ஆனார்.
தலையில் மிளகாய் அரைக்க அரைக்கத்
தடவிப் பார்த்து மகிழ்கின்றாயே.

பண்டைத் தமிழர் ஆடற் கலையைப்
பரதம் என்றார் "ஈ, ஈ" என்றாய்
அண்டைத் தெலுங்கை முகத்தில் துப்ப
அதையும் வழித்து நக்குகின்றாய்.

வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும்
வடம் போல் பூணூல் போட்டு விட்டார்.
ஏன் உனக்கோர் எழுச்சி இல்லை?
இழிவைத் தாங்கி இளிப்பாய் பல்லை

இசைப் பாட்டென்றால் அது தெலுங்கா?
ஏன், டா உன் வாய்க்கும் விலங்கா?
பசித்தால் நாயும் உறுமுமே, டா
பாழும் நாய்க்கும் நீ கீழ் தானா?

"ஏனோ தமிழில் கல்வி இல்லை?"
என்று கேட்கச் சுரணை அற்றாய்
ஆண்ட தமிழை மூலை இட்டாய்
ஆங்கிலத் துக்கே நொட்டை இட்டாய்.

- ம.இலெ. தங்கப்பா

www.tamilarangam.net

# சிறுவனின் புலம்பல்

எழுந்து சிரிக்க வழியில்லாமல்
இந்தக் கல்வி எனக்கெதற்கு
விழுந்து விழுந்து படி என்கின்றார்
வீணில் என்ன பேச்சென்றகிறார்.

அழுந்தி மூளை கெடுவதற்கோ
ஆங்கிலப் பள்ளியில் என்னைச் சேர்த்தார்?
புழுங்கி வெந்து சாவதற்கோ
புதை செருப்புக் காலில் போட்டார்?

நாட்டுப் புறத்துப் பள்ளி இருக்க
நகரப் பள்ளி எனக்கெதற்கு?
பாட்டுப் பாடி மகிழ்ந்து கொண்டே
பாடம் படித்தேன் கெடுத்தார் என்னை.

கழனி, தோப்புச் சுற்றி வந்தேன்
காடை, புறாக்கள் கண்டு மகிழ்ந்தேன்
அழு நீ என்றா என்னைப் பெற்றோர்
ஆங்கிலப் பள்ளியில் சேர்த்துத் தொலைத்தார்.

மூச்சு விடவும் நேரம் இல்லை
முழுதும் படிப்புப் படிப்புப் படிப்பு.
சேச்சே, எதுவும் புரிய வில்லை
சிங்லி பீசு தெரிய தொல்லை.

கூடச் சேர்ந்த பிள்ளைகள் ஊரில்
குதித்துப பாடி ஆடுகின்றாரே
ஓடைக்குள்ளே நீந்துகின்றாரே
ஓய்வாய்க் கதைகள் பேசுகின்றாரே.

உந்து வண்டி நெருக்கி நசுங்கி
ஒன்பது கற்கள் மூச்சுத் திணறி
வந்து வந்து நாளும் படிப்பேன்,
மலையைக் கவ்வி எலியைப் பிடிப்பேன்.

தாய்மொழி நல்ல தமிழ் இருக்கத்
தாட் பூட் வேற்று மொழி எதற்கு?
பேய்பிடித் தாரோ பெற்றோர்? சொந்தப்
பிள்ளையைக் கடித்துக் குதறுகின்றார்.

உள்ளூர்ப் பள்ளியில் தமிழில் கல்வி
உண்ணுகின்றார் அள்ளி, அள்ளி
நள்ளிருட்டில் குருட்டுக் கல்வி
நகரப் பள்ளி எரியும் கொள்ளி.

– ம.இலெ. தங்கப்பா

www.tamilarangam.net

# தொலைந்து போன குழந்தைகள் உலகம்

– ஷீபா

பொதுவாகவே குழந்தைகள் உலகம் வியப்பும் ஆர்வமும் நிறைந்தது. எதையும் தெரிந்து கொள்வதில் அவர்களுக்கிருக்கிற ஆர்வம், வேகம் நினைவாற்றல் எதுவும் நமக்கு இல்லை என்பதை மறுப்பதற்கில்லை.

ஒரு விஷயத்தை நாம் விளக்க முற்படும்போது, உதாரணமாக சூரியன் பற்றிச் சொல்கிறோம் என வைத்துக் கொள்வோம். அவ்வளவுதான் நாம் இதுவரை யோசித்திராத கோணங்களிலெல்லாம் யோசித்துக் கேள்வி கேட்பார்கள். மரம், செடி, கொடி என்று எதைச் சொன்னாலும் அவர்கள் கேள்விகளோடு நம்மை எதிர்கொள்ளத் தயாராய் இருப்பார்கள்.

ஆனால் பல நேரங்களில் நாம்தான் teacher என்கிற தோரணையோடும் அதிகாரத்தோடும் அவர்களை அடக்கிவிடுகிறோம்.

பொதுவாக ஐந்தாம் வகுப்பு வரை புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் அவர்களுக்கு இருக்கிற ஆர்வம் அளவிட முடியாது. அவர்களின் எல்லாக் கேள்விகளுக்கும் நாம் சரியான பதில் அளித்தால் ஒழிய எதையும் ஏற்றுக் கொள்வதில்லை.

பெரும்பாலும் குழந்தைகள் புத்தகம் படிப்பதையோ எழுதுவதையோ விரும்புவதில்லை. அறிவாளிகள் என்று சொல்லப்படுகிற I Rank, II Rank குழந்தைகள் படிக்கிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால், அவைகூட இயல்பாக அவர்கள் படிக்கவோ எழுதவோ செய்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது.

பெற்றோர்கள்தான் மதிப்பெண், முதல் இடம் என்று அடித்துக் கொள்கிறார்கள். முதல் மூன்று வகுப்பு படிக்கும் குழந்தைகள் மதிப்பெண், முதல் இடம் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்வதேயில்லை. அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்கிறார்கள்.

வலுக்கட்டாயமாக நாம் சொல்லிக் கொடுப்பதை 15% கூட அவர்கள் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார்கள். அதே நேரம் அவர்களாக விரும்பிக் கேட்கிற கதைகள், பாடல்கள் மற்றும் பொது விஷயங்களைக் கவனமாய்க் கேட்பார்கள்.

கதை என்று சொல்லும்போது பெரும்பாலும் குழந்தைகள் திகில் மற்றும் பேய்க் கதைகளையே விரும்பிக் கேட்கிறார்கள். தொலைக்காட்சி பெட்டி வேறு அவர்களை மழுங்கடித்ததின் விளைவு இது போன்ற கதைகளில் அதிகம் கவனம் செலுத்துகிறார்கள்.

www.tamilarangam.net

என் வகுப்புகளில் இது போன்ற கதைகளை நான் தவிர்த்து விடுவேன். இவையெல்லாம் பொய்யான கதைகள் என்பதை அவர்கள் மனதில் பதியவைக்க நான் எடுக்கும் முயற்சிகள் பல சமயங்களில் தோற்றுவிடுவதுண்டு.

இவ் விஷயத்தில் குழந்தைகள் நினைவாற்றல் பற்றி குறிப்பாக ஒன்று சொல்ல வேண்டும். நாம் பாடம் நடத்தி, அதை எழுதிப்போட்டு, படிக்க வைத்து, தேர்வு நடத்தினால் பாதிக்கு மேல் குழந்தைகள் மறந்து விடுகின்றன. ஆனால் ஒரு குளிர்கால விடுமுறையின் முன் தினம் ஒரு திகில் கதையை பாதியில் முடித்துவிட்டேன்.

விடுமுறை முடிந்து இரண்டு மாதங்கள் பாடத்திட்டம் முடிந்து ஒருநாள் அந்தத் திகில் கதையின் மீதத்தை சொல்லுங்கள் என்று குழந்தைகள் கேட்டபோது எனக்கே மறந்துவிட்டது. ஆனால் நான் எப்படி அந்தக் கதையைச் சொன்னேன் – எங்கு நிறுத்தினேன் என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

வகுப்பில் எப்போதும் கடைசி இடத்தில் (படிப்பில்) இருக்கும் குழந்தைகள் உட்பட மறக்காமல் சொன்னார்கள்.

ஆக, குழந்தைகள் நினைவாற்றலில் குறையேதும் இல்லை. நமது பாடத் திட்டங்களிலும், சொல்லிக் கொடுப்பதிலிலும்தான் ஏதோ குறையிருக்கிறது.

மூன்றாம் வகுப்புக்கு மேல் குழந்தைகளிடம் மதிப்பெண், முதல் இடம் (சுயமே) பற்றி ஒரு தெளிவிற்கு அவர்களாகவே வந்துவிடுகிறார்கள். குறைந்த மதிப்பெண் வாங்குகிற குழந்தைகள் முகம் வெட்கத்திலும் அவமானத்திலும் சுருங்கி விடுகிறது.

33 மதிப்பெண் வாங்குகிற குழந்தைகள் 2 மதிப்பெண் வாங்கிவிட்டால் Pass என்பதால் ஒவ்வொரு ஆசிரியர் பின்னேயும் பரிதாபமாய் அலைவார்கள். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் குழந்தைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

உண்மையில் எல்லாக் குழந்தைகளுமே அறிவுள்ளவர்கள்தான். அவர்களின் துறைசார்ந்த, விருப்பம்சார்ந்தவைகளை வளர்த்தெடுப்பதை விட்டு நாம் மதிப்பெண், முதல் இடம் என்கிற வட்டத்துக்குள் மழுங்கடித்து விடுகிறோம்.

குழந்தைகள் தங்கள் விருப்பங்களை மதிப்பெண் அடிப்படையிலும் பெற்றோர் விருப்பங்களின் அடிப்படையிலுமே தேர்ந்தெடுக்க முடிகிறது. கடனே என்று படிக்கிற குழந்தைகள் தங்களது சுய ஆர்வங்களை இழந்துவிட நேரிடுகிறது.

மதிப்பெண்களை அடிப்படையாக நமது கல்வித்திட்டம் கொண்டிருப்பதால் தேர்வு என்றாலே குழந்தைகள் அதிகம் விரும்புவதில்லை. இரண்டு மணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரத்தில், அவர்களின் அறிவைப் பரிசோதிக்கிறோம் என்று, அறைக்குள் அடைத்து வைத்து நேரமாகிவிட்டது; நேரமாகிவிட்டது என்று சொல்லிச் சொல்லி அவர்களின் கொஞ்ச நஞ்ச மூளையையும் மழுங்கடித்து விடுகிறோம்.

பதினோராம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடம் அவர்கள் பாடத் திட்டத்தில் அல்லாத பல்வேறு தலைப்புகளில் பேசச் செய்தோம். நம்மை விடவும் அழகாகப் பேசினார்கள் என்பதுதான் உண்மை. யாரும் அவர்களை உட்காரவைத்து சொல்லிக் கொடுக்கவில்லை. தலைப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களை நூலகங்களில் அலசினார்கள்; குறிப்பெடுத்தார்கள்; அருமையாய்ப் பேசிவிட்டுப் போனார்கள். ஆசிரியர்களின் துணையின்றி.

ஆக நாம் சொல்லிக் கொடுப்பதைக் காட்டிலும், அவர்களாகவே விஷயங்களைத் தெரிந்து கொண்டு, அது குறித்து ஆலோசிப்பதை விரும்புகிறார்கள். முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள குழந்தைக்ள் கூட ஒரே மாதிரியான பாடத் திட்டத்தை அவ்வளவாக விரும்புவதில்லை.

மேலும் முதல் ஐந்துவரை உள்ள குழந்தைகள் தாய்மை அன்பினையே ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். பகல் பொழுதின் பெரும்பான்மையான நேரங்கள் நம்மிடையே இருப்பதால் வீட்டுச் சூழலையே இங்கும் விரும்புகிறார்கள்.

திட்டுவதையோ அடிப்பதையோ அவர்கள் விரும்புவதில்லை. உடனே முகம் வாடிவிடும். நாம் மறுமுறை அவர்களைக் கூப்பிட்டுக் கொஞ்சினால் ஒழிய அந்த முகவாட்டத்தைப் போக்குவது இயலாத காரியம்.

அதிலும் ஐந்தாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள், பெரும்பாலான குழந்தைகள் என்னை 'அம்மா' (Mummy) என்றே அழைக்கிறார்கள். நான் அவர்களை Dear Children என்று அழைப்பதுதான் வழக்கம். ஆக இந்தத் தாய்மை நிலையில் இருந்து நான் சிறிது கோபப்பட்டாலும் அவர்கள் வாடிப்போய் விடுகிறார்கள்.

ஐந்தாம் வகுப்பிற்கு மேல் உள்ள குழந்தைகள் அதாவது பனிரெண்டாம் வகுப்புவரை உள்ள குழந்தைகள் ஒரு நட்புணர்ச்சியோடு நாமிருப்பதையே விரும்புகிறார்கள். தங்கள் வீட்டுப் பிரச்சனைகளிலிருந்து Boy Friends, Girl Friends என்று அனைத்தையும் அவர்கள் ஒளிவுமறைவில்லாமல் கூறுவார்கள். அதிலும் விடுதியில் தங்கிப் படிக்கும் குழந்தைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சோகக் கதையினை உள்ளடக்கிக் கொண்டிருப்பார்கள்.

அப்பா, அம்மா பிரச்சனை போல் LKG படிக்கும் குழந்தைகள்கூட விடுதியில் தங்கும் அவலம் நேரிடுகிறது அல்லது பணம் சம்பாதிக்கும் பொருட்டு அப்பா அம்மா இருவரும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு குழந்தைகளை விடுதியில் சேர்த்துவிட்டுப் போவார்கள்.

www.tamilarangam.net

எந் நேரமும் ஆறுதலுக்கும் அன்புக்கும் ஏங்குகிற அக் குழந்தைகளை நாம் தாயுணர்வோடு தாலாட்ட வேண்டியிருக்கிறது. எல்லா நாட்டிற்கும் குழந்தைகள் விதி என்பது பொதுவாய்த்தான் இருக்கிறது.

கடந்த வருடம் அமெரிக்காவிலிருந்து ஒரு சிறுவன் இங்கு படிக்க வந்திருந்தான். (இரண்டாம் வகுப்பில்) நான் எங்கு போனாலும் கூடவே வருவான்.

I miss my mum – என்று கைகளைப் பிடித்துக் கொண்டு அழுவான். Hai Sheeba என்றுதான் கூப்பிடுவான். அவனுடைய நிலைக்கு இறங்கிவந்து அவனோடு பழக வேண்டும் என்று எதிர்பார்ப்பான். அப்படித்தான் பழகினேன்.

குழந்தைகள் அவர்களின் நிலைக்கு இறங்கிவந்து பழகுவதையே அதிகம் விரும்புகிறார்கள். எந்த இடத்தில் குழந்தைகள் இருக்க நேரிடுகிறதோ அந்த இடத்தின் பழக்கங்களை நம்மை விடவும் கூர்மையாகவும் வேகமாகவும் கவனித்துப், பின்பற்றிக் கொள்கிறார்கள்.

அந்த அமெரிக்கச் சிறுவன்கூட அப்படித்தான். வந்து சேர்ந்த புதிதில் I hate Indian Food என்று பட்டினியாய்க் கிடப்பான். அநேக முறை நான் அவனை வெளியில் அழைத்துச் சென்று அவனுக்குப் பிடித்த உணவை வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.

இரண்டு, மூன்று மாதங்கள்தான். அதன்பிறகு அவன் இந்தப் பழக்க வழக்கங்களோடும் உணவு வகைகளோடும் ஒத்துப் போனான்.

இரவு தூங்கப் போவதற்கு முன் அவனுடைய bed–இல் உட்கார்ந்துதான் கதை சொல்ல வேண்டும். வேறு குழந்தைகள் bed–இல் உட்கார்ந்து விட்டால் அவ்வளவுதான் உடனே முகம் வாடிவிடும்.

இப்போதெல்லாம், கதை சொன்னால் குழந்தைகள் ஒரு காலத்தில் நாம் கேட்டதைப் போல அமைதியாய்க் கேட்பதில்லை. கதைகளில் உண்மை, பொய் பற்றியெல்லாம் அலசுகிறார்கள். கேள்வி எழுப்புகிறார்கள்.

இன்னொன்று, குழந்தைகளுக்குப் பயம் பற்றிய உணர்வு இல்லை. மேலும் நம்மைவிடப் பெரியவர்கள். அவர்களிடம் எதுவும் கேட்கக்கூடாது; இப்படித்தான் பேச வேண்டும், கேட்க வேண்டும் என்றெல்லாம் வரையறைகள் வைத்துக் கொள்வதில்லை. Office Peon –இலிருந்து Collector வரை குழந்தைகளுக்கு ஒன்றுதான். யாரையும் நிமிர்ந்து பார்த்துக் கேள்வி கேட்பார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருமுறை வகுப்பில் தண்ணீர் நிறைய குடித்தால், பச்சைக் காய்கறிகள் சாப்பிட்டால் உயரமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பீர்கள் என்றேன். (இரண்டாம் வகுப்பில்) உடனே ஒருவன் Miss நீங்கள் ஏன் குட்டையாகவும், மெலிவாகவும் இருக்கிறீர்கள் – நீங்கள் தண்ணீர் குடிக்கவில்லையா? காய்கறிகள் சாப்பிடுவது இல்லையா? என்று கேட்டான். ஆசிரியர் ஆயிற்றே. இப்படிக் கேட்கலாமா என்றெல்லாம் குழந்தைகள் யோசிப்பதில்லை. பயமற்றுக் கேள்வி கேட்கிறார்கள்.

அவர்கள் கேள்விகளுக்கான பதிலை ஒரு புன்னகையோடு நாம் எதிர்கொண்டு சொல்ல வேண்டும். அதைத்தான் விரும்புகிறார்கள். Shut up and sit down என்பது போன்ற அடக்குமுறைகளை அவர்கள் விரும்புவதில்லை.

ஆசிரியர் என்பதாலேயே குழந்தைகளுக்கு ஒன்றும் தெரியாது என்று அவர்களை அதட்டி, உருட்டுவதை அவர்கள் வெறுக்கிறார்கள். தோழமை உணர்வோடு அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிரம்பைக் கையில் எடுக்கும் ஆசிரியர்களை அவர்கள் ஒருபோதும் விரும்புவது இல்லை.

ஆனாலும், குழந்தைகளில்கூட எல்லோரும் இப்படித்தான் இருக்கிறார்கள், இதைத்தான் விரும்புகிறார்கள் என்று கணித்துவிட முடியாது.

மேல் மட்டத்துக் குழந்தைகளின் பழக்கமும் எதிர்பார்ப்புகளும் விருப்பங்களும் நடுத்தர வர்க்கத்துக் குழந்தைகளினின்றும் முற்றிலுமாய் வேறுபடுகிறது. அதேபோன்றுதான் நடுத்தர வர்க்கத்துக் குழந்தைகளினின்றும் கீழ் மட்டத்துக் குழந்தைகள் முற்றிலுமாய் வேறுபடுகிறார்கள்.

பெரும்பாலும் கீழ்வர்க்கத்துக் குழந்தைகள் ஒரு மெல்லிய பய உணர்வோடுதான் பழகுகிறார்கள். மரியாதை, பயபக்தி என்பதை அவர்கள் எங்கிருந்து கற்றுக் கொள்கிறார்களோ அங்கே பயமற்றும் நம்மிடம் பயந்தும் பழகுகிறார்கள். ஆனால், அந்தப் பயம் இயல்பானதாய் இருப்பதில்லை. வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டது போல் இருக்கும்.

அக் குழந்தைகளின் ஏக்கம், இழப்பு எல்லாம் எந் நேரமும் அந்தக் கண்களில் பளிச்சிடும். ஆதரவாய் நாம் அணைத்துக் கொண்டு பேசும்போது கூட மிரண்டு போய் பார்ப்பார்கள்.

குழந்தைகள் இயல்பானவர்கள் என்றாலும்கூட, இக் குழந்தைகள் தங்களுக்குள்ளேயே ஒடுங்கிப்போய் விடுகிறார்கள். மற்றக் குழந்தைகளோடு தங்களை இணைத்துக் கொள்வதில்லை. பொருளாதாரம் பற்றி அறிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கிற பருவம் இல்லாவிட்டாலும்கூட மேல்மட்டத்துக் குழந்தைகளின் போக்கு இக் குழந்தைகளை விலகியிருக்கச் செய்கிறது என்றுதான் எடுத்துக் கொள்ள முடியும்.

ஆங்கிலப் பள்ளிகளுக்கே உரித்தான சில உருட்டல், மிரட்டல்கள் – குழந்தைகளை எவ்விதம் பாதிக்கின்றன என்பதை அனைவரும் அறிவோம். குழந்தைகள் எதையும் எளிதில் கற்றுக் கொள்வார்கள் என்றாலும்கூட ஆரம்ப வகுப்புகளில் (LKG, UKG, I Std) மொழி புரியாமல் தப்பும், தவறுமாகப் பேசுவதும் ஆங்கிலம் பேசாவிட்டால் அடி விழுமோ என்ற பயத்தில் பேசாமலே இருப்பதும் குழந்தைகளை – அவர்கள் இயல்பான போக்கினை, சிந்தனைகளைத் தடை செய்வதாகவே இருக்கிறது. ஆனால் இதையும்கூட, இக் குழந்தைகள் பெற்றோர் விருப்பத்திலும் ஆசிரியர் கண்டிப்பிலும் ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு வகையில், குழந்தைகள் தங்களுக்கென்று ஒரு உலகினைக் கொண்டிருக்கிறார்கள். விளையாட்டும் சிரிப்புமாய் உற்சாகம் நிறைந்தது அவர்கள் உலகம். அவர்களின் கனவு வேறு, ஆசை வேறு, வேட்கை வேறு – ஆனால் கல்வி என்ற பெயரிலும், இன்றைய சமுதாயத்தில் தேவை என்ற பயத்திலும் நாம் அவர்களின் உலகைப் பறித்துக் கொண்டோம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்களுக்கான உலகினை அவர்களிடமே திருப்பித் தரவேண்டிய சூழலில் நாம் இருந்தாலும் நாம் அதைச் செய்யாது மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மரங்களோடும் செடிகளோடும் பட்டாம் பூச்சிகளோடும் ஓடி, ஆடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை இழுத்துவந்து இருட்டறையில் அடைத்து வைத்துவிட்டோம்.

அவர்களின் உலகத்திலேயே அவர்களை வாழவிடும்போதுதான், அக் குழந்தைகளின் இயல்பான ஆற்றல், அறிவு வெளிப்படும் என்று நம்புகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***நூல் மதிப்புரை :***

# அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன் விமரிசனம்

- மாலதி

மண்ணாங்கட்டி இசங்களைப் பற்றி நானறியேன்.

எதற்குத்தான் எழுத்துச் சனியன்களை முன் வைக்கிறார்கள்?

படித்துத் தொலைக்கத் தானே?

அப்படியானால் அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன் வந்து தமிழ் கூறும் நல்லுலகைப் படிப்பிக்கத்தான் போகிறான்.

கீழே வைக்கப்பட முடியாமல் ஒரு புத்தகம் வாசகனைப் படிப்பித்து விடக் கூடாது என்று நினைக்கிற இலக்கிய விமர்சகர்களோடு எனக்கு உடன்பாடில்லை.

மின்சார ரயிலில் ஒரு நல்ல நாவலைப் படித்துவிட முடியாது என்கிறார்கள். மோசமான நாவல்கள் அரையின் ஹாலிலோ மொட்டை மாடியிலோ மின்சார ரயிலிலோ எங்குமே படிக்க முடியாதுதானே?

நாவலில் பல் சக்கரங்களாய் நிகழ் ஒட்டின, பழமைப் பசை தடவின கட்டுரைகளின் முன் பின்னான ஒட்டமிருக்க காதல், திருமணம், குடும்பம், வேலை, நெருக்கடி, அரசு அலுவலகம், பன்னாட்டு வாணிகம், அயல் நாட்டு வாசம், அரசியல், சினிமா என்று எல்லா தளங்களிலும் தொடங்கி தவறு புரிந்தவனும் ஏமாந்தவனும் சமநிலை தவறியவனும் இழந்து, வல்லவன் கெலிப்பது தவிர .... சம்பவங்களுக்குள் பெண்ணியம் என்ன! தலித்தியம் என்ன? இந்து முஸ்லிம் கிறித்துவ மதத்துவம் என்ன? இந்திய அமெரிக்க அட்லாண்டிஸ் குடித்துவம்தான் என்ன? எது பொருட்டாகிவிடும்?

மினோவான் சொன்னதில் நாகசேனரும் மெனாண்டரும் உண்மைக்கும் பொய்க்கும் அப்பால் போன பெருவெளிச்சமாகத் தெரிந்தார்கள்.

நாவலின் முன் பகுதியில் ஈர்த்த பக்கங்களை முன் மடிப்புச் செய்தவள் பின் பகுதியை விடுபடுத்தியிருந்தது எனக்கே ஒரு செய்தியாயிற்று மீண்டும் பார்க்கையில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பாக முன் பகுதியின் உருவகக் கட்டுரை; நாவலின் அடர்த்தியைக் கூட்டி, நிறத்தைக் கொடுத்திருந்தது அந்தப் பெண்ணியம் சார்ந்த புனைவு. பெண்ணியம் தனக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்வதற்காக வலிந்து நுழைக்கப்பட்ட உருவகமாக அது இருக்க முடியாது. அதற்கு நிறைய, நிறைய நெஞ்சில் ஈரம் கசிந்திருக்க வேண்டும். பெண்ணுக்குப் பெண்ணியம் உயிரிலிருந்து உயிரின் வலியிலிருந்து வரும். ஆணுக்குப் பெண்ணியம் இதயத்திலிருந்து வரும். மூளையிலிருந்து வர வழி கிடையாது. இதயத்தில் நிறைய புரிதல்களால் அலகு குத்திப், பெரிய நேரிச்சையாக மலையுச்சி ஏறிப் போய்த் திரும்பின பின் வரும்.

நாவலைப் படிக்கும்போது நிறைய முறை புன்னகைக்க வேண்டி வந்தது.

ஒற்றை நாளில் 160 கிலோ மீட்டர் பயணமும் புற, அக, அலுவல் பளுவும் தாண்டி வந்து நாவலைப் படித்து முடித்து விமர்சனமும் எழுதிவிட எனக்கு முடிந்திருந்தால் அது படைப்பாளியின் வெற்றி.

341 –ஆம் பக்கத்துப் பதினேழாவது வரி மற்றும் 160 –ஆம் பக்கத்து முப்பத்து மூணாவது வரி அச்சுப் பிழைகளைச் சரி பார்த்து என் வாசக நேர்மையைக் கணக்கிடவும்.

எந்தப் பெயராலும் கூர்த்த படைப்பாளியை மட்டம் தட்டுவது நல்லதல்ல. மேலும் என் இருப்பு எப்போதும் காக்கப்படும். எம்.ஜி. சுரேஷின் படைப்பைத் தூக்கி (அ) தாக்கி அதைத் தக்க வைக்கும் கட்டாயம் எனக்கில்லை.

'கே' சொன்னதைத் திருப்பிப் போடுகிறேன். வாழ்க்கை அசப்பில் சுரேஷ் சொன்ன கதைகள் போலவே இருந்ததால் அவற்றின் எல்லா சாத்தியப்பாடுகளும் என்னைக் கவர்ந்தன. முக்கியமாக ராஜதிரவியத்தோடு கமலேசனின் சம்பாஷணை மற்றும் விமலா – நவோமி ஒரு ஒப்பீடு, அத்தியாய இறுதியில் ஆசிரியரின் குறிப்பு. (அடி செருப்பாலே).

மன்னிக்க ... எய்ட்ஸ், கிட்னி செருகல்களை.

செவிகளைச் சுவற்றில் பதித்தீர்கள். கண்களை இருட்டில் விட்டீர்கள். வாய்க்கு மௌனத்தையோ பித்துக்குளிப் புலம்பலையோ மொழியாக்கிக் கொடுத்தீர்கள். வீட்டுக்குள் எங்களுக்கு மட்டும் படுக்கையறை, சமையலறை என்ற பெயரில் சதுப்புச் செவ்வகங்கள். புதைந்து அழுந்தியவரை அவ்வப்போது கொக்கி போட்டு இழுத்தும் அனுபவித்தீர்கள். முளைகட்டி ஒரு விட்டத்தில் சுற்றி வரச் சொன்னீர்கள். விட்டச் சுற்றில் எங்களைப் பாம்பு கடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காக்கைகளும்கூட கொத்த பயப்பட்டதில்லை எங்களை. உனக்கென்ன வெறுப்பா சாப்பிடவும் படுக்கவும் என்றீர்கள், நாங்கள் சமையலறை படுக்கையறைகளை முறைத்தபோது. பூனைக்குப் பால் பிடிக்காமலிருக்குமா? எங்களுக்கும் பாதம் அல்வா பிடிக்கும். படுக்கையும் மெத்தையும் ரொம்ப ரொம்ப பிடிக்கும். எங்களுக்கு 'வேண்டும்' என்று விட்டால் தாங்க மாட்டீர்கள் நீங்கள்.

திருமணம் என்கிற ஏற்பாடு ஆணின் சதி என்று திருமணக் கூட்டுக்குள் குரூரமாகப் பழிவாங்கப்பட்ட பேடைக் குயிலின் சார்பாகச் சொல்லிவிட்டிருக்கலாம் எங்களில் யாரோ ! பாவப்பட்ட பெண்கள் சிதிலமடைந்த இல்லற இடிபாடுகளிடையில் உள்ளிருக்கக் காற்றின்றி வெளிநடப்பு செய்யவும் வகையின்றி தவிக்கிறபோது அவர்கள் சார்பாக, அவர்கள் சோகங்களில் எங்கள் அடையாளங்களையும் கண்டுகொண்டு வீடு கட்டிய காண்டிராக்டர்களை நோகிறோம். எங்கள் நோவு உங்களை என்ன செய்தது? எதற்காக எங்கள் குண வேர்களைக் குலக் கிழங்குகளைத் தோண்டி எடுத்து எங்கள் சாயல்களை அலசுகிறீர்கள்? இப்போதும் சொல்கிறோம். கூரையும் கதவும் தரையுமின்றி வீடு வேண்டாம் எங்களுக்கு. கத்தியும் வேலும் பிஸ்டலும் ஏந்தி கான்க்ரீட் பிளாட்பாரங்களில் இருந்து கொள்கிறோம். காண்ட்ராக்டர்களிடம் வீடு கட்டும் தொழிலை விட்டு விடச் சொல்லுங்கள்.

அட ! அட ! எங்கள் நிராசைகளில், வெறுப்பில், கூட இருக்கும் துணை 'பார்' விளையாட்டு ஆடி இல்லத்துக்குள் கால் பதியாமல் சுகித்திருக்க மேலும் மேலும் சிதிலங்கள் விழ எங்கள் வயிற்றுப் பிறப்புகளே எங்களை நோக நாங்கள் சொல்கிறோம். வீடு வேண்டாம் என்று.

மீண்டும் வரங்களும் வீரமும் துணை வர மாட்டாவா என்ன?

SEELAN BOOKS NORWAY SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நூல் மதிப்புரை :*

# உண்மை ஒளிர்கவென்று பாடவோ?

**- சுதாகர்**

தென்கோடித் தமிழகத்தின் கிறித்தவ மக்களைப் பற்றிய வரலாற்று நூலைப் பா. விசாலம் படைத்துள்ளார். கிறித்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்வோர் அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்துகாட்டத் தவறிவிட்டதை ஆசிரியர் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

போலி மார்க்சியமும் போலிக் கிறித்தவமும் ஒன்றையொன்று பகைப்பது போன்று பாசாங்கு காட்டுகின்றன. ஆனால், உண்மை மார்க்சியமும் உண்மைக் கிறித்தவமும் நெருங்கிவர முடியும் என்பதை ஆசிரியர் இந் நாவலில் காண்பித்துள்ளார். பொதுவுடைமையும் மானுட விடுதலையும் இவ் விரண்டின் கருக்கள். இவற்றைக் கருவிலேயே அழித்து விடக்கூடிய அதிகார கோபுரங்கள், ஆலய அரசாங்கங்கள், சடங்கு அலுவலகங்கள், சாதிய வழிபாடுகள், ஆதிக்கக் கடவுளர்கள் யாவற்றின் பொய்முகங்களையும் போலித்தனங்களையும் தனது அய்ம்பதாண்டு காலப் பொதுமைத் தீக் கனலால் பொசுக்குகிறார்.

போத்தி குறிப்புகளாகவும், மீனா – நேசன் உரையாடல்களாகவும் வெளிப்படுபவை திருந்த மறுக்கிற திருச்சபைக்கு விடப்பட்டுள்ள திறந்த மடல்கள். நம்மைக் கடந்து சென்ற வரலாற்றின் உயிர்த் துடிப்புகளையும் மானுட நேயத் தவிப்புகளையும் ஆசிரியர் அடையாளம் காட்டுகிறார். வரலாறு என்பது ஆண்டைகளின் இறந்த காலத்தை எழுதி வாசிப்பதல்ல; அன்றாடம் காய்ச்சிகளின் ஒவ்வொரு நிகழ்வும் வரலாறுதான் என்பதை நாவலாக்கியுள்ளார்.

கிறித்தவ மதத்திற்கு மாறிய வெள்ளாளர்கள், மேல்சாதியார்கள் அடிப்படையில் இந்து மேலாதிக்க மனோபாவத்தையே கொண்டிருக்கின்றனர். இவர்களின் சாதிய இரும்புக் கோட்டையிலிருந்து, நாடார்கள், பறையர்கள் முண்டியடித்துத்தான் முன்னுக்கு வரவேண்டியிருக்கிறது. கோவில்களில், கல்லறைகளில் குறுக்குச் சுவர்கள் தகர்க்கப்பட்டிருக்கலாம். கலப்பு மண மறுப்பு போன்ற முள்வேலிகள் ஒவ்வொரு சாதிக்கும் பாதுகாப்பு வளையம் அமைக்கிறது. சாதிய வேலிகளைத் தரைமட்டமாக்காமல், மீனாக்களை வாழவைத்துவிட முடியாது.

திருச்சபை குறித்த இவரின் கூரிய விமர்சனங்களைத் தொகுத்தால், அதுவேகூட மாபெரும் கட்டுரை இலக்கியமாய் அமைந்துவிடும்.

வெள்ளாளன், நாடான், உடையான், வன்னியன் என்று வேற்றுமைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ப்பதற்குக் கிறித்தவ மதம் தேவையா? முன்பிருந்தது போன்றே இருப்பதற்குப் பெயர்தான் மதம் மாறுவதா? சாதியம், வறுமை, ஏழ்மை, முதலாளியம் போன்றவற்றை ஒழிக்காமல், எல்லோரும் ஆண்டவன் பிள்ளைகள் என்பது ஏமாற்றும் எத்தர்களின் வஞ்சகச் சொற்கள் அல்லவா? ரோம சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராடிய அடிமை மக்களின் கலகக் குரலொலி அல்லவா இயேசுவின் குரல்? அந்த வீர இளைஞனுக்கு, மனிதகுலப் போராளிக்குப் பொய்த் தாடி, மீசையை ஒட்ட வைத்த சதிகாரர்கள் யார்? திருச்சபையிடம் குவியும் சொத்துக்களுக்கு அளவு உண்டா? அதன் பயனை அறுவடை செய்வோர் யார்? ஆதிக்க ஆன்மீகவாதிகள் ஏற்படுத்தியுள்ள கலாச்சாரச் சீரழிவுகளுக்கு அளவுண்டா? இயேசுவைக் கொலை செய்தவர்கள் கோயில் பூசாரிகள்தானே? விசாலம் அவர்கள் எழுப்பியுள்ள இது போன்ற நூற்றுக்கணக்கான கேள்விகள் ஆளும் திருச்சபை அதிகாரிகளின் அடிவயிற்றில் வைக்கப்பட்ட நெருப்புப் பொறிகள். புதிய கண்ணகியின் சீற்றங்களாய் வெளிப்படும் இந்த எரிமலைச் சிந்தனைகளுக்குத் திருச்சபை ஏற்றதொரு வடிவம் கொடுக்கத் தவறுமேயானால், அதன் அழிவு பேரழிவாக அமைந்துவிடும்.

இருபத்தியொன்றாம் நூற்றாண்டில்கூட சாதிச் சனியனை விட்டொழிக்க மறுக்கிறவர்கள் மனித குலத்தின் பகைவர்கள்.

தோமையார், சவேரியார், தேவசகாயம், அருளானந்தர் போன்றோர் செந்நீரால் எழுதிய கிறித்தவ ஓவியத்தைச் சாதியச் சாக்கடைகள் அழித்து வருவது கண்டு விசாலம் பதைபதைக்கிறார்.

கொடிய ரோமானிய சாம்ராச்சியத்தை எதிர்த்துப் போராடியோரின் வீர வரலாற்றை இயேசுவிலிருந்து தொடங்குவதை விடுத்து, மாவீரன் ஸ்பார்ட்டகஸிலிருந்து தொடங்குகிறார்.

அடிமையாக வாழ்வதின் அத்தனை அவலங்களையும் ஒருசேர அனுபவித்து, அல்லற்பட்டு, காய்ந்து, கசப்பேறி, வெடித்துச் சிதறிய ஸ்பார்ட்டகஸ் போட்டுக் கொடுத்த விடுதலைப் பாதையில்தான் இயேசுவும் வருகிறார் என்று வரலாற்றைத் துல்லியமாகவும் துணிவாகவும் பதிவு செய்கிறார். 'நான் மறுபடியும் வருவேன்' என்று ஸ்பார்டகஸ் கூறியதும் 'நான் உயிர்த்தெழுவேன்' என்று இயேசு கூறியதும் அவர்களைப் பற்றிய கனவுகள் அல்ல; புரட்சியைப் பற்றிய கனவுகளே. அவற்றிற்குத் தெய்விக முலாம் பூசியது அழுக்குற்ற ஆன்மீகவாதிகளின் கலப்பட வேலை.

அறிவியல் உண்மைகளோடுகூட திருச்சபை மல்லுக்கட்டி நிற்பது வேடிக்கையாக உள்ளது. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று கலிலியோ கூறியதை அய்நூறு ஆண்டுகள் கழித்துத்தான் திருச்சபை ஏற்றுக் கொண்டது. கலிலியோக்களைத் தீர்த்துக் கட்டுகிற திருச்சபைக்கு, உண்மையைத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்த்துக் கட்டுகிறோம் என்கிற உறுத்தல் எப்போதாகிலும் உண்டாகுமா என்பது தெரியவில்லை.

கலிலியோவை ஒன்பது ஆண்டுகள் சிறைவைக்கவும் படிமலர்ச்சி தத்துவத்தைப் பகன்றதற்காய் டார்வினை குரங்காகச் சித்தரித்துப் பகடி செய்வதற்கும் அய்ரோப்பாவின் மூலிகை மருத்துவச்சிகளைத் தீயிலிட்டுப் பொசுக்குவதற்கும் சார்லஸ் அரசன் வீசியெறிந்த ரோமானிய நிலப் பிச்சையைக் கையிலேந்திக் கொண்டு, அறிவியல் நூல்களை எரித்துச் சாம்பலாக்குவதற்கும் இயேசுவின் வழித்தோன்றல்கள் என்று வெட்கமில்லாமல் கூறிக்கொண்டே நிலப் பிரபுவாகவும் முடிசூடா மன்னனாகவும் சகல அதிகாரங்கள் படைத்த ஆளாகத் தன்னைக் காண்பித்துக் கொள்வதற்கும் திருச்சபை பதில் சொல்லியாக வேண்டும். மக்களைக் காப்பதற்கு இயேசு பலியானார். இன்று, மக்களைப் பலியாக்கித் திருச்சபை தன்னைக் காத்துக் கொள்கிறது. இறுகி, கெட்டி தட்டிப் போயிருக்கிற நிறுவனத் திருச்சபையில் இயேசு ஒரு அலங்காரப் பொம்மையாகிவிட்டார்.

காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வருகிற பெண்ணினத்தின் குறியீடாக அன்னம்மாள் விளங்குகிறார். ஆணாதிக்கத் தளைகள் அழுத்தியிருக்கும் சுமைகளை அன்னம்மாள் அள்ளிக் கொள்வது ஒரு சமூக முரண். போகப் பொருளாகப் பெண்ணை மாற்றுகிற குரூரங்களிலிருந்து விடுபடுவதற்குப் பெண் போராடத்தான் வேண்டும். தென்முனையில் வெடித்த தோள் சீலைப் போராட்டங்கள் மதவாதிகள் முன்னின்று நடத்தியவை. மதம் பெண்ணின் மானம் காக்க, பெண் விடுதலைக்குக் குரல் கொடுக்க முன்வர முடியும். ஆதாம் பாவம் செய்ய ஏவாள் தூண்டினாள், ஏவாள் படைக்கப்பட்டதே ஆதாமின் விலா எலும்பிலிருந்துதான் என்ற ரீதியில் எழுதப்பட்டுள்ள விவிலியத்தின் முதல் கோணல் முற்றும் கோணலாகத்தானிருக்கிறது. கடவுளைக்கூட ஆணின் வடிவமாய்ப் பார்க்கிற ஆதிக்க மதத்திலிருந்து பெண்ணுக்குச் சார்பான குரல்கள் இக் காலத்தில் ஒலிக்கத் தொடங்கியிருந்தாலும், பெண் பிஷப் வரமுடியுமா என்கிற விசாலத்தின் கேள்வி மதத்திற்குள் பெண் விடுதலை வேண்டுவோரின் மனச் சான்றாக வெளிப்படுகிறது. மனித குலத்தின் சரி பாதியினமாகிய பெண்களை ஒடுக்குவதில் இந்த நூற்றாண்டில் மதத் தலைவர்களுக்கு வெற்றி கிட்டாது.

கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபை இதுபோன்ற நூல்களைத் தடை செய்யக்கூடும். மார்க்சியத்தின் மீதான தனது வெறுப்பின் காரணமாக, இந் நூலை இருட்டடிப்புச் செய்யவும் முயலலாம். திருச்சபைக்குள் சாதி ஒழிப்பை முன்னிலைப்படுத்துவோர் அனைவரும் கூடி விவாதிப்பதற்கு இந் நூல் ஒரு அடித்தளமாய் அமைகிறது. இத்தகைய நூல்கள் நூலகங்களின் மேலடுக்குகளை அலங்கரிப்பதற்காக அல்ல. கிழடு தட்டிப்போய், தூசி படிந்து கிடக்கிற திருச்சபையின் முகத்தைப் புதுப்பிப்பதற்காக. அடித்தள மக்களின் விழிப்பிற்காக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நூல் மதிப்புரை :**

# "அலெக்சாண்டரும் ஒரு கோப்பைத் தேநீரும்"

- சுதாகர்

எம்.ஜி. சுரேஷ் எழுதியுள்ள இந் நாவல் தமிழகச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

குடும்பப் பாங்கான கதைகள் என்ற பெயரில் பொருள் வெறி, நுகர்வு வெறி, காம வெறி, மேட்டுக்குடி சார்ந்த வாழ்க்கை மதிப்பீடுகள், துப்பறியும் அதீத மனித சாகசங்கள் போன்றவற்றைப் படிப்போரின் மூளையில் திணிக்கும் போக்குகள் அதிகரித்து வருகின்ற ஒரு தேக்கச் சூழலை உடைத்தெறியும் வகையில் இந் நாவல் படைக்கப்பட்டுள்ளது.

நம்ப முடியாத, செயற்கையான, மயிர்க் கூச்செறியும் கதைகள் உருவாக்கியுள்ள வெற்றிடங்களையும் வறண்ட போக்குகளையும் இந் நாவல் எதிர்கொள்கிறது.

குறுக்கும் நெடுக்குமாகவும் மேலும் கீழுமாகவும் புனையப்பட்டுள்ள வாழ்க்கையை ஒரு நேர்கோட்டு வகையிலான வாசிப்பினால் புரிந்து கொள்ள முடியாது.

நிகழ்காலச் சமூகங்கள் உருவாக்கித் தந்துள்ள அறிவாயுதங்களோடு வரலாற்றின் மூலை முடுக்குகளிலெல்லாம் எம்.ஜி.சுரேஷ் பயணம் நடத்துகிறார். நிகழ்காலத்திற்கென்று ஒரு பார்வை, கடந்த காலத்திற்கென்று ஒரு பார்வை, எதிர்காலத்திற்கென்று மற்றொரு பார்வை என்று நவீன மனிதன் தன்னையே பல பின்னங்களாய்ச் சிதைத்துக்கொண்டு, தனக்குள்ளும் வெளியிலும் முரண்பட்டுக் கொண்டு வாழும் வாழ்க்கை நெருக்கடிகளை இவரது எழுத்துப் பயணம் கவனத்தில் கொள்கிறது.

ஒரு நாவல் பல்வேறு தளங்களிலும் வைத்துப் பொருள் கொள்ளத்தக்கதாகவும். பல பரிமாணங்களிலும் விரிந்து கொண்டே செல்லக் கூடியதாகவும் ஒற்றையடிப் பாதையில் பயணித்தாலும் பல்வேறு பாதைகளும் குறுக்கிடத்தான் செய்யும் என்கிற வாழ்வியல் நடைமுறைப் போக்குகளையும் தனக்கேயுரிய எழுத்துப் பாணியில் எம்.ஜி. சுரேஷ் வெளிப்படுத்தியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மன்னன் அலெக்சாண்டர் தன்னை அறிந்து கொள்கிற கட்டங்கள் போற்றத்தக்கவை. மிகவும் அருவருப்பான வகைகளில் அவன் செய்யும் படுகொலைகள் நம்மை வேதனையில் ஆழ்த்துகின்றன. அம் மன்னனை உருவாக்கிய சமூகம் மாறுகிறது. மறுபடியும் பல அலெக்சாண்டர்கள் உருவாகின்றனர். இன்றைய அலெக்சாண்டர்களுக்கும் அன்றைய அலெக்சாண்டருக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. சமூகம் ஊடு பாவாகப் பின்னும் நூலிழைகளில் வெளிப்படும் வெவ்வேறு மனிதர்களினூடே வரலாறு நகர்கிறது.

அலெக்சாண்டர், பிலிப், ருக்சானா, செல்யூகஸ், க்ளியோபாட்ரா போன்ற மனிதர்களின் வரலாற்று நிகழ்வுகளை உயிர்த் துடிப்போடு விளங்கிக் கொள்கிறோம். கார்லோஸ், ஒசாமா, கிளிண்டன், ரனில், ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் போன்ற நிகழ்கால மனிதர்களையும் நாம் சந்திக்கிறோம்.

சமகால நிகழ்வுகளில் வன்முறை தவிர்க்க இயலாத இடம் பெற்றுவிட்டது. உளவுத் துறைகளின் பணிகள் விரிவடைந்துவிட்டன. வாழ்க்கை இயந்திரத்தனமாகி விட்டது. புதிய தடங்களில் நகர மறுக்கிறது. அறிவியல் வளர்ச்சி கோணல், மாணலாகிவிட்டது. போன்சாய்கள் நம்மை மிரள வைக்கின்றன. எதிர்காலம் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பாலைவனமாயும் கானல்நீராயும் காணப்படுகிறது.

இன்பம் என்று மனிதன் தெரிவு செய்தவை அனைத்தும் அவனை இக்கட்டிலும் இடர்பாட்டிலும் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது. வாழ்க்கை நடைப்பிணமாகி விட்டது.

கைக்குக் கிடைத்த துரும்புகளைப் பற்றிக் கொண்டு எம்.ஜி. சுரேஷ் காலப் படகை முன் செலுத்துகிறார். பேரழிவையே நாம் சந்திக்க உள்ளோம் என்பதைத் திடமாக நம்புகிறார். எனினும், அவர் நம்பிக்கை விதைகளையும் ஊன்றுகிறார். பூமி சிதறும் வேளையிலும் சில உயிர்களேனும் மிஞ்சும் என்கிறார்.

ருக்சானாவையும் சுசாந்திகாவையும் அவர்கள் வெளிப்படுத்தும் அன்பிற்காக நாம் நினைவில் வைத்துக் கொள்கிறோம். தன்முனைப்பான மனிதர்களால் பலரது வாழ்க்கையின் இனிமைகள் கசப்பேறிவிட்டதைக் கண்டு மனம் பதைக்கிறோம். குரங்குகளை மனிதர்களாக்கி விட்டு மனிதர்கள் மண்ணுக்குள் புதைந்து விடுவார்களோ என்று அய்யுறுகிறோம்.

அலெக்சாண்டர்களிடமிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறோம். ஒரு கோப்பைத் தேநீரை சுவைத்துக் குடிப்பதற்குக்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரமின்றி, அலைபாயும் மனித வாழ்க்கை எதைச் சாதிக்கப் போகிறது என்று வினவுகிறோம்.

மனிதர்களுக்கு விடியலின் கீற்றுகள் கிடைக்குமா என்று அய்யுறுகிறோம்.

போர்கள் ஏற்படுத்துகிற குழப்பங்களிலிருந்து மனிதன் மீண்டு வருவானா என்ற கேள்வி நம்மைக் குடைகிறது. எதிர்காலத்திற்கென்று எதையுமே சேமித்து வைக்காத மனிதன், கடந்த கால மனித உழைப்பையும் சேமிப்பையும் கரைப்பதற்கு எவ்விதத் தார்மீகத் தகுதியும் கிடையாது.

எம்.ஜி.சுரேஷ் தனது சமூக உணர்வை இந் நாவலின்வழியே புலப்படுத்துகிறார். இது போன்று ஒரு பத்து நாவல்கள் அடுத்தடுத்து வெளிவந்தால், தமிழிலக்கியக் கடலில் தரை தட்டி நிற்கும் நாவல் படகுகள் இலக்குகள் நோக்கிக் கம்பீரமாய்க் கிளம்ப முடியும்.

கையே இல்லாதவனுக்கு எழுத்து உளவியல் எப்படிப் பயன்படும்? ஹாக்கிங் சோதனைக் கூடத்தில் மனிதர்கள் தங்களின் வாழ்வை மாற்றிக் கொள்ள முடிகிறது என்றாலும், அதீத மனிதர்களாய்த் தங்களை உருவாக்கிக் கொண்டாலும் உண்மையான மாற்றம் என்று இவற்றைச் சொல்ல முடியுமா? நவீன மனிதனின் சாதனைதான் என்ன? மனிதர்களைச் சுவடே இல்லாமல் அழித்தொழிக்கும் லேசர் துப்பாக்கிகளும் மின் ஆயுதங்களும் அணுக்கதிர் இயந்திரங்களும் தற்கொலைகளும் இந் நூற்றாண்டின் மிச்சங்களா? ஒரு குடையின்கீழ் கொண்டுவரும் ஆதிக்க வெறி அமெரிக்காவிற்கும் அலெக்சாண்டருக்கும் ஒரே மாதிரிதானோ? கேள்விக் கணைகள் நாவல் வடிவம் பெற்றுள்ளன. சமகாலத் தேவையை நாவலாசிரியர் இவ்வாறு நிறைவு செய்கிறார்.

அலெக்சாண்டரும் ஒய்வாக ஒரு கோப்பைத் தேநீர் பருகலும் ஒருக்காலும் ஒத்துப் போக முடியாது என்பதை நாவலின் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. அமைதியும் பாதுகாப்பும் மிக்க வாழ்க்கை மனித குலத்திற்குக் கடைசிவரையில் கிட்டாமலே போய்விடுமோ என்கிற அய்யமே அதிகம் நம்மை அச்சுறுத்துகிறது. ஒளியின் வேகத்தை விஞ்சுகிற நாளில், மனித குலத்தின் எஞ்சிய பிஞ்சுகள் ஒருவேளை தப்பிக்கலாம். அந் நாளை நோக்கி நாவல் நம்மை நகர்த்துகிறது.

SEERAAN BOOKS NORWAY SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நூல் மதிப்புரை :*

# நாவல் வளர்ச்சி கிறிஸ்துவ இலக்கியம்

- சுதாகர்

இலக்கியச் செல்வர் டேவிட் சித்தையா அவர்களின் இனிய முயற்சியால் இவ் அரிய கிறித்தவ இலக்கியத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

கிறித்தவ வாழ்வை மையப்படுத்தி, பல்வேறு காலக் கட்டங்களிலும் பலராலும் எழுதப்பெற்ற நாவல்கள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன.

திறனாய்வு இலக்கிய உலகில் இந் நூல் ஒரு புதிய திசையை நமக்குக் காண்பிக்கிறது. தமிழ்க் கிறித்தவ மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் இந்நூல், பல்வேறு எழுத்தாளர்களின் பார்வைகள் வெளிப்படுத்தும் கிறித்துவத்தின் தனித் தன்மைகளை நமக்குப் படைக்கிறது.

தமிழ்த் தேசிய உணர்வில் தன்னை முற்றாகக் கரைத்துக் கொண்டுள்ள மார்க்சியச் சிந்தனையாளர் அய்யா கோவை ஞானி அவர்களின் சிறப்புமிக்க அணிந்துரை நூலுக்கு அழகு சேர்க்கிறது. திறனாய்வு என்பதேகூட மாபெரும் இலக்கியமாக முடியும் என்பதை எண்பித்துள்ள ஞானி அவர்கள், கிறித்தவ மதத்தின் தாக்கங்களை இந்து மதம் உள்வாங்கிக் கொள்ளாமலிருப்பதையும் இந்து மதத்தின் சாதியும் தீண்டாமையும் கிறித்தவ மதத்தில் அப்பிக் கிடப்பதையும் சுட்டிக் காட்டுகிறார். மதத் தளத்திலிருந்தும் வெடித்துக் கிளம்பும் போர்க் குரல்களையும் அடையாளம் காண்கிறார்.

நாவல்களும் அவற்றின் திறனாய்வுகளும் சமூகத்தையும் திருச்சபையையும் அலசி ஆராய்கின்றன. மீனவப் புரட்சியைக் கட்டுப்படுத்த திருச்சபை அதிகாரிகள் தயாரித்துள்ள "அந்தோணியார் மொட்டைகளை" எடுத்துரைக்கின்றன. அதே நேரத்தில், ஏழை, எளிய பனையேறி மக்களின் முன்னேற்றத்திற்கும் கிறித்தவம் காரணமாகியதையும் சுட்டுகின்றன.

மதத்தின் அழுக்குகள் மனதின் அழுக்குகளாய் மாறிச் சமுதாயத்தையும் தனிமனிதர்களையும் சீரழிப்பதை நூலின் பக்கங்கள் நுட்பமாய் எடுத்துரைக்கின்றன.

கள்ளப் பிரசங்கிகளின் போலி முகங்களும் பொய்மைச் செயல்களும் கிழித்தெறியப்படுகின்றன. தடம் மாறிய கிறித்தவ மதத்தின் பதவிச் சண்டைகளும் சாதிவெறிப் போக்குகளும் அப்பட்டமாய் வெளிப்படுவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடிட்டுக் காட்டப்படுகிறது. பொருளும் அதிகாரமும் மனித நேயத்தைச் செல்லாக் காசாக்கி வருவதையும் நாம் உய்த்துணர முடிகிறது.

திறக்கப்பட வேண்டியவை சாதி, மத அடைப்புகள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மனித வாழ்வோடும் வளமோடும் ஒப்பிடும்போது மதமும் சாதியும் அற்பமானவை. வறுமையில் உழலும் பெயர்க் கிறித்தவர்களை வஞ்சித்து, ஏமாற்றுபவை. உண்மைக் கிறித்தவர்கள் இந்த அழுக்குகளை அழுந்தத் துடைத்தெறிந்துவிட்டு மானுடம் பேணும் புதிய மனிதர்களாய் மாறிவிட வேண்டும் என்பதே இந் நூலின் அடி நாதமாய் விளங்குகிறது.

❋❋❋

## *வரப்பெற்றோம் நன்றி*

- சின்னப்ப பாரதியின் நாவல்கள்
  முனைவர் சாந்தா பழனிச்சாமி, காவ்யா, ரூ. 70.00
- நட்சத்திரப் பூ (கவிதைகள்)
  சாந்தாதத், கனவு, திருப்பூர் – 2 ரூ. 13.00
- புதுவசந்தம் – வெள்ளி விழாச் சிறப்பிதழ்
  தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்பு – 11 ரூ. 200.00
- கலாச்சாரம் – எதிர் கலாச்சாரம் – புதிய கலாச்சாரம்
  ந. இரவீந்திரன் – சவுத் விஷன், சென்னை – 2. ரூ. 50.00
- மரண தண்டனை தேவையா?
  தொகுப்பு கண. குறிஞ்சி; பியூசிஎல், ரூ. 15.00
- REVERBERATIONS OF SPRING THUNDER – மலையாளம் குரு நாவல்
  சிவசக்தி பதிப்பகம், நாகை. ரூ. 75.00
- தியான பூமி – சுவாமி ஜீவன் பிரமோத்,
  சிவசக்தி பதிப்பகம். ரூ. 60.00
- காலமற்ற காலம் – நாவல்
  பேராசிரியர் ச. ராஜநாயகம், தராசு, சென்னை – 8 ரூ. 48.00
- சில முடிவுகளும் சில தொடக்கங்களும் (நாவல்)
  பேராசிரியர் ச. இராஜநாயகம், காவ்யா ரூ. 50.00
- சாமிக்கண்ணு (நாவல்)
  பேரா. இராஜநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***நூல் மதிப்புரை :***

# இப்படிக்கு நான் ...

**- அறிவன்**

ஷீபா நேரடியாகக் கதை சொல்கிறார். கதைகள் பெண்களின் பிரச்சனைகளில் தனிக் கவனம் கொள்கின்றன. பெண்கள் ஆண்களின் பொறுப்பற்ற செயல்களால் சந்திக்க நேரும் குடும்பச் சுமைகள், குழந்தைப் பராமரிப்பு எனத் தங்களின் சக்திக்கு மீறிய உழைப்பால் அவர்களின் மனங்களும் உடல்நிலையும் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பேசுகின்றன. இயல்பாக அவர்களுக்குள் ஊற்றெடுக்கும் அன்பு பிற பெண்களின்பாலும் தன்னை வஞ்சித்துப் பிற பெண்களை ஓயாது அவர்களின் பின்னால் ஓடிப் பின் நலிந்த காலத்தில் நோய் வாய்ப்பட்டுத் திரும்பிவரும் கணவனிடத்திலும் இரக்கம் கொள்கிறது. இவர்களின் அன்பு இயற்கையின்பாலும் இரப்பவர்கள் ஏழைகளின் பாலும் புரிந்து செல்கின்றது. தங்களால் இயலாத போதும் அடுத்தவர்களுக்குச் செய்யும் சேவையில் பெண்கள் மன நிறைவைக் காண்கிறார்கள்.

பெண்களின் வாழ்க்கை அனுபவங்களே கதைகளாக வடிக்கப்பட்டிருப்பினும் வாழ்க்கை நதி, வேலியோரத்து ரோஜாக்கள் இரண்டும் மாறுபட்டு, முறையே துன்பப்படும் ஒரு குடும்பத்திற்கு இரங்கும் ஓர் ஆணின் மனத்தையும் அனாதைச் சிறுவர்கள் இருவரின் நட்புப் பற்றியும் பேசுகின்றன. பொதுவாகவே குடும்ப எல்லைக்குள் பெண்கள் சிறைப்பட்டிருக்கும் உணர்வுகளையே வெளிப்படுத்துகிறார்கள். திருமணத்திற்கு முன் அனுபவித்த விடுபட்ட மனநிலையை நினைத்து அவர்களின் மனங்கள் ஏக்கம் கொள்கின்றன. ஆண்களின் அன்பற்ற, இரக்கமற்ற மனங்களே சமூகத்தில் பெண்களைத் தங்களுக்குத் தக வடிவமைக்கின்றன. எத்தனை பெரிய சலிப்பிற்குப் பின்னும் பெண்கள் தங்கள் கடமையை உணர்ந்து செயல்படவே படைக்கப்பட்டவர்கள் போல் கதைகளில் குடும்ப எல்லைக்குள் செயல்படுகிறார்கள். கதைகளில் காதல் போற்றப்படுகின்றன. பேச்சு, செயல் இரண்டிற்கும் முரண்பட்ட ஆண்களுக்கிடையில் சமூக யதார்த்தத்திற்கு மனம் துணியும் தந்தையையும் காண முடிகிறது. சாதி, மதம், அரசியல் என எந்தப் பிரச்சனைகளிலும் பாதிக்கப்படுவர்கள் பெரிதும் பெண்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் கதைகள் பேசுகின்றன. படைப்பின் எந்த வடிவத்திலும் பெண்கள் பேசப்பட வேண்டியவர்கள். பேசப்படுவதன்மூலமே அவர்களின் வாழ்க்கையை அறிய முடியும். இந்தப் பெண் பாத்திரங்களும் அறியப்பட வேண்டியவர்களே.

பெண்களின் வாழ்க்கையில் ஒளி பொருந்திய பகுதிகளும் இருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இருள் நிறைந்த பகுதிகளே இந்தக் கதைகளில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பெண்களின் அவலத்தை முதன்மைப்படுத்தும் ஆசிரியர் பெண்களுக்குள் இருந்து கிளம்பும் எதிர்க் குரலைச் சொல்வதில்லை. ஆண்கள் எதிர் நிலையிலேயே வைத்துப் பேசப்படுகிறார்கள். இன்று பெண்ணியக் குரல் என்பது இப்படித்தான் ஒலிக்கிறது. பெண்களின் அவலத்திற்கும் அடியில் சமூகக் காரணங்கள் இருக்கின்றன. ஆண்களும் இக் காரணங்களால் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். பெண்ணியம் என்பது சமூகத்தை முழு அளவில் காண்பதாகவும் இருக்க முடியும். ஷீபாவின் முதல் தொகுதி இது என்ற முறையில் நாம் பெரிதும் பாராட்டலாம்.

❋❋❋

## *வரப்பெற்றோம் நன்றி*

- தமிழ் இறையியல் களங்கள் – ச. இராஜநாயகம்
  வைகறை, திண்டுக்கல். ரூ. 25.00
- பூந்தடம் (கவிதைகள்) – கிருங்கை சேதுபதி
  சென்பா பதிப்பகம், சென்னை – 48 ரூ. 25.00
- இப்படிக்கு நான் (சிறுகதைகள்) – ஷீபா
  தமிழ் கனல், திண்டுக்கல். ரூ. 25.00
- டாக்டர் குமரப்பாவின் கருத்துக்கள்
  பதிப்பாசிரியர் மா.பா. குருசாமி
  குமரப்பா, வெளியீடு திண்டுக்கல் – 3. ரூ. 50.00
- ஒளிக்கீற்று (கவிதைகள்)
  வேந்தர் வேந்தன் – கனிமொழி பதிப்பகம், நாமக்கல். ரூ. 50.00
- தொல்காப்பியத் தமிழ்
  கா.கோ. வேங்கடராமன்,
  கனிமொழி, நாமக்கல். ரூ. 100.00
- மௌன நதி – வே. எழிலரசு,
  நந்தினி பதிப்பகம், சென்னை – 11 ரூ. 60.00
- உதிரி சயனத்தை நீரில் அலசும் வரை – அமிர்தம் சூர்யா
  எழில், சென்னை – 11 ரூ. 30.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நூல் திறனாய்வு :*

## “மார்க்சிய நோக்கு : தமிழிலக்கிய ஆய்வு“

- முனைவர் க. பஞ்சாங்கம்

சமூகம் என்றும் பண்பாடு என்றும் தாங்களே உருவாக்கிக் கொண்ட ஒரு அமைப்பில் தாங்களே தொலைந்துபோன அவலத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அந்த அவலத்தின் தீர்வாக தங்களைத் தாங்களே கண்டடைவதைத் தவிர வேறில்லை, என்ற ஞானத்தின் காரணமாக தங்களைத் தேடி அலையும் உயிர்க்கூட்டம்தான் இந்த மனிதர்கள். தேடியலையும் தங்கள் பயணத்தில் களைப்பாருவதற்காக அவர்கள் கட்டிக் கொள்ளும் இடைநிலைப்பட்ட சத்திரங்கள்தான் குடும்பம், மதம், கல்வி, அரசு, கலைக்கூடம் என்று வேறு வேறு பெயர்களில் வழங்குகின்றன. இத்தகையக் கலைக்கூடங்களில் ஒன்றுதான் இலக்கியமும் இலக்கியம் சார்ந்த திறனாய்வுகளும், ஆராய்ச்சிகளும்.

மனிதர்களின் வாழ்நிலையோடு நேரடியாக உள்பாய்ந்து உரமாக, வலுவாக உட்கார்ந்து ஆட்டிப்படைப்பது மொழியும், மொழி சார்ந்த இலக்கியம் ஆகும். மனிதர்களின் இதயத்திற்கு மிக நெருக்கமாக இருப்பவர்கள் உடலால் கண்ணுக்கருகிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் உயிருள்ள மனிதர்களைவிட, அருபமுறையில் உருவாகி இருக்கும் கதைமாந்தர்களும் கருத்தாக்கங்களும்தான். எனவே இலக்கியம் வாசிக்கப்படுகிற அளவிற்குப் பேசப்படுகிற ஒன்றாகவும் தொடர்ந்து நீள்கிறது. ஒவ்வொரு சமூகமும் தன் சமகால தேவைக்கு ஏற்பச் சமகால இலக்கியங்களை படைத்துக் கொள்வதோடு மட்டுமுல்லாமல், தன் சமூகத்தில் தோன்றிய பல பழைய இலக்கியங்களை சமகாலத் தேவைக்கு ஏற்ப மறுபடைப்பு செய்து கொள்ள முயல்கிறது. இந்த மறுபடைப்பு இலக்கியமாகவும் வெளிப்படுகின்றது; திறனாய்வு, ஆராய்ச்சி என்ற வடிவங்களின் வழியாகவும் வெளிப்படுகின்றது.

"மார்க்சிய நோக்கு : தமிழிலக்கிய ஆய்வுகளில்" என்ற இந்தப் புத்தகத்தின் மூலம் முனைவர் சு.துரை அவர்கள், தமிழில் பழம்பெரும் இலக்கியங்களை (சங்க இலக்கியம் தொடங்கிக் காப்பிய இலக்கியம் வரை) இந்த நூற்றாண்டில் உலகச் சிந்தனை வரலாற்றில் மாபெரும் சாதனை செய்து காட்டிய மார்க்சியம் என்ற கொள்கை அடிப்படைகளை ஆய்வு செய்து வெளிக்கொணரப்பட்ட கருத்துக்களை எல்லாம் தொகுத்து, அவற்றின் மேல் ஒரு மீவியல் திறனாய்வை (Meta Critism) நிகழ்த்திக் காட்ட முயல்கிறார்.

"மார்க்சியமும் இலக்கிய திறனாய்வும்" என்கிற தன்னுடைய முதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரையில் மார்க்சியத்தை இயங்கியல் பொருள் முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான சோசலிசம், ஆகிய தலைப்புகளில் மிகச் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறார். அதுபோலவே மார்க்சிய இலக்கிய கோட்பாடுகளாக அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம், பிரதிபலித்தல் கோட்பாடு, சோசலிச நடப்பியல் ஆகியவற்றையும் அறிமுகப்படுத்துகிறார். எதார்த்தவாதம் இறந்துவிட்டது என்று தமிழ்ச்சூழலில் கிளப்பி விடப்பட்டபோது ஏற்பட்ட அலைகளையும் ஆய்வாளர் பதிவு செய்துள்ளார். சோசலிச நடப்பியல் என்னும் மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டின் அடிச்சரடாக ஓடுவது அரசியல் நிலைப்பாடுகளே என ஆய்வாளர் கருதுகிறார். ஆனால் அத்தகைய முடிவு எடுப்பதற்கான ஆதாரங்களைத் தக்க சான்றுகளுடன் ஆசிரியர் விவாதிக்கவில்லை. மேலும் அப்படியொரு இலக்கியக் கொள்கை அரசியல் நிலைப்பாடுகளால் ஆக்கிரமிக்கப்படுவதற்கான தமிழ்ச் சூழலைத் துல்லியமாக ஆய்வாளர் எடுத்துரைக்கவும் இல்லை. மேலும் மார்க்சிய இலக்கியக் கோட்பாடுகளாக மேற்கூறிய மூன்றை மட்டுமே ஆய்வாளர் சொல்லிச் செல்கிறார். ஆனால் இலக்கியத்தின் தோற்றம், இலக்கிய படைப்பாளியின் சிறப்பான உளவியல், இலக்கியத்திற்கும் மொழிக்குமுள்ள உறவு, இலக்கியத்தின் வடிவம், வகைகளில் ஏற்படும் மாற்றங்கள், பாடுபொருளுக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு நிலை, இலக்கியக் கதைமாந்தர்கள் வகை மாதிரிகளாக அமையும்தன்மை, சமூக இயக்கங்களுக்கும் இலக்கியத்திற்குமான உறவு, அதிகார நிறுவனங்களுக்கும் எதிர்க்கலாச்சாரப் போராட்டத்திற்கும் இலக்கியத்துக்குமான உறவு, தொன்மங்களுக்கும் இலக்கியத்திற்குமான உறவு, முதலிய இலக்கியம் சார்ந்த அனைத்துக் கூறுகளைப் பற்றியும் பிற்காலத்தில் வந்த மார்க்சியத் திறனாய்வாளர்களான பெஞ்சமின், டெரி ஈகிள்டன், தாம்சன் முதலிய திறனாய்வாளர்களால் மார்க்சிய நோக்கில் இலக்கியக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மார்க்சியக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி இருந்தால் தமிழ்ச் சூழலில் மார்க்சிய அறிவு மேலும் செழுமைப் பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

"தமிழில் மார்க்சிய இலக்கியத் திறனாய்வுப் போக்குகள்" என்ற தலைப்பில் தமிழில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு அளவில் நடந்த மார்க்சியத் திறனாய்வை "மரபு மார்க்சிய நோக்கு", "அந்நியமாதல் மார்க்சிய நோக்கு", "அமைப்பியல் மார்க்சிய நோக்கு" என்ற மூன்று பிரிவின் கீழ் வகைப்படுத்துகிறார். அதேநேரத்தில் மூன்று பிரிவினர்களுக்கு இடையிலும், ஒவ்வொரு பிரிவினர்களுக்குள்ளும் இருந்த நுட்பமான வேறுபாடுகளையும் ஆசிரியர் சுட்டத் தவறவில்லை. ஆனால் மார்க்சியம் இவ்வாறு குறைந்தது மூன்று கோணத்தில் இயங்கியதற்கானத் தமிழ்ச்சமூகச் சூழலின் தேவை என்னவாக இருந்தது; அதற்கான காரணங்கள் என்ன என்பதையும் ஆய்வாளர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்கி இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அப்படி விளக்குவதுதான் உண்மையான மார்க்சிய ஆய்வுமுறையாகவும் இருக்கும்.

"சங்க இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள்" என்ற தலைப்பில் சங்க இலக்கியம் பற்றித் திராவிட இயக்கத்தினர் முன் வைத்த இன மேம்பாட்டுக் கருத்தாக்கங்களைப் பொதுவுடைமை இயக்கத்தினர் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இச்சூழலில்தான் மார்க்சியர் சங்க இலக்கிய ஆராய்ச்சியில் கவனம் செலுத்தத் தொடங்கினர் என்று எழுதுகிறார் (ப. 36) இனமேம்பாட்டுக்கான கருத்தாக்கம், தமிழ்ச்சூழலில் மார்க்சியர்களுக்கு எந்த வகையில், எந்தச் சூழலில் எதிர்நிலைப்பட்ட ஒன்றாக ஆனது; அதற்கான பிரத்தியேகமான தமிழ்ச்சூழல் என்ன என்பதையும் ஆய்வாளர் விளக்கியிருக்க வேண்டும் எனப்படுகிறது.

"மார்க்சியத் திறனாய்வாளர்கள் சங்ககால இலக்கியங்களை முன்வைத்து வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையை ஆராய்ந்து சங்ககால சமூக அமைப்பு, இனக்குழு அமைப்பும் நிலவுடைமை சமூக அமைப்பும் இணைந்த ஒன்று எனக் கண்ள்ளனர் என்பதை ஆய்வாளர் பல்வேறு மார்க்சிய அறிஞர்களின் சிந்தனையைத்தொகுத்துத் தருவதன்மூலம் விளக்கியுள்ளார். அதுபோலவே சங்க இலக்கியங்களில் பொருள்முதல்வாதக் கருத்தாக்கங்கள் விரவிக் கிடப்பதையும் மார்க்சிய அறிஞர்கள் வெளிக்கொணர்ந்த தன்மையைப் புலப்படுத்தியுள்ளார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலுக்கு மார்க்சிய அறிஞர்கள் ஞானி, கைலாசபதி, கேசவன் முதலியோர் கொடுத்த விளக்கங்களை ஆய்வாளர் விரிவாக எடுத்துக் காட்டுகின்றார். அதுபோலவே புலவர்களின் வர்க்கச் சார்பு பற்றி மார்க்சியர்கள் கொண்டிருந்த இருவேறுபட்ட கருத்தையும் வீரயுகப் பாடல் எனச் சங்க இலக்கியத்தை விளக்கியத் தன்மையையும், அகத்திணை இலக்கியத்தினை மார்க்சியர்கள் பெரும்பாலும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தாத தன்மையினையும், சங்ககாலச் சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் நிலவியதாகக் கருதுகின்ற மார்க்சிய சிந்தனைப் போக்கினையும், பொற்காலம் சங்க இலக்கியக் காலத்தைக் கொண்டாடிய திராவிட இயக்கக் கருத்தாக்கங்களை மீட்புவாதப் போக்கு என மரபு மார்க்சியர்கள் புறம் தள்ளியதை ஞானி போன்ற ஆய்வாளர்கள் அதை உடன்பாட்டு நோக்கில் ஆதரித்து எழுதியதையும், சமீபகாலமாக மரபு மார்க்சியர்களே தமிழ்த் தேசியம் சார்ந்து கருத்துரைக்கின்ற தன்மையினையும் ஆய்வாளர் மிகச் சிறப்பாகத் தொகுத்துத் தருகின்றார். ஆனாலும் தகவல்களைத் தொகுத்துத் தருவதில் வெளிப்படும் முயற்சியும் உழைப்பும், அந்தத் தகவல்களின் மேல் தன்னுடைய ஆராய்ச்சிப் புலமையினால் பணியாற்ற முயற்சியில் ஆய்வாளர் பெரிதும் கவனம் செலுத்தவில்லை எனத் தெரிகிறது. சான்றாகத் தமிழ்த்தேசியக் கருத்தாடலுக்குக் கட்சி மார்க்சியர்கள் சமீப காலமாக முதன்மையளிப்பதற்கு

www.tamilarangam.net

என்ன காரணம் என்பதைத் தமிழக அரசியல் வரலாற்றை முன்னிறுத்தி ஆராய ஆய்வாளர் முயலவில்லை. 1985–ல் கொர்பச்சேவ் நடவடிக்கையினால் ரஷ்யாவில் பல தேசிய இனங்கள் தனியரசு அமைத்துக் கொண்டன; இந்தியாவிலும் உலகநாடுகளிலும் பல தேசிய இனங்கள் தன்னுரிமைப் போக்கை முன்னிறுத்தி வருகின்றன. உலக அளவில் ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சூழலின் காரணமாகத்தான் தமிழக மார்க்சியர்களும் தங்கள் நிலைப்பாடுகளில் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மட்டும் விளக்குகிறார் ஆய்வாளர். ஆனால் இலங்கையில் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக எழுந்த தமிழ்த்தேசியப் போராட்டத்தின் செல்வாக்குப் பற்றியோ, தமிழ்த்தேசியம் பேசிய திராவிட இயக்கங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அதை அறவே கைவிட்டுவிட்ட நிலையில் தமிழ்த்தேசிய உணர்வுள்ள சக்திகளைச் சாதகமாக்கிக் கொள்ளக் கட்சி அரசியல் கையாண்ட ஒரு தந்திரம் என்றோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே மாநிலம் சார்ந்து பார்க்கின்ற பார்வை பெருகி விட்ட சூழலைப் பற்றியோ, தமிழ் மார்க்சிய அரசியல் கட்சியில் தேசிய உணர்வுள்ள சக்திகள் ஓரளவு செல்வாக்குடன் வளர்ந்துவிட்ட தன்மையினைப் பற்றியோ ஆய்வாளர் கணக்கில் எடுத்துக்கொண்டு விளக்காதது, ஆய்வாளர் பெரிதும் புத்தகங்களைச் சார்ந்தே தன் ஆய்வை நிகழ்த்தியுள்ளார் எனக் கருத இடமளிக்கிறது. நடைமுறையில் உள்ள ஒரு இயக்கம் தொடர்பான ஆய்வினை நிகழ்த்தும்போது, புத்தகத்தை மட்டும் சார்ந்திருக்காமல் கள ஆய்வினையும் ஆய்வாளர் மேற்கொண்டிருக்க வேண்டும். இதுபோலவே அக இலக்கியங்களை மார்க்சிய ஆய்வாளர்கள் பெரிதும் மேற்கொள்ளவில்லை என்ற தகவலை மட்டும் சொல்லிவிட்டு ஆராய்வாளர் நகர்ந்து விடுகிறார். ஆனால் இந்தத் தகவலை முன்வைத்து தமிழ் மார்க்சிய ஆய்வாளர்களின் இயந்திரத்தனத்தையும் இயலாமையையும் ஆய்வாளர் விமர்சனத்திற்கு ஆழமாக உட்படுத்தி இருக்கவேண்டும் என நமக்குத் தோன்றுகிறது. அவ்வாறு உட்படுத்தி இருந்தார்; என்றால், மார்க்சிய ஆய்வாளர்கள் வெறுமனே வர்க்க வேறுபாட்டையும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை மட்டுமே பயன்படுத்தி மேலோட்டமான ஒரு ஆய்வைத்தான் நிகழ்த்தி இருக்கிறார்கள் என்பதையும் மார்க்சியத் தத்துவத்தின் அடிநாதமாக விளங்கும் மார்க்சிய இயங்கியல் தத்துவக் கூறுகளான 1. எதிர்க் கூறுகளின் ஐக்கியமும் போராட்டமும், 2. அளவு மாற்றங்கள் பண்பு மாற்றங்களாக மாறுதல், 3. நிலைமறுப்பின் நிலை மறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயும் தமிழ் இலக்கியங்களையும் சமூகத்தையும் மிக நுட்பமான ஒரு தளத்தில் ஆய்வு செய்து வெளிக் கொணரவில்லை என்பதையும் கண்டு கூறியிருக்கலாம். இன்றைக்கும் தமிழ் இலக்கிய ஆய்வில் இது ஒரு குறையாகவே தமிழ் இலக்கிய ஆய்வில் இது ஒரு குறையாகவே நிலவி வருகிறது.

"அற இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள்" என்ற தலைப்பிலும் ஆய்வாளர்

www.tamilarangam.net

திருக்குறள் பற்றிய மார்க்சிய ஆய்வாளர்களின் கருத்துக்களைப் பல உட்தலைப்புகளாகப் பிரித்துத் தொகுத்துத் தருகிறார். வள்ளுவரின் பெண்வழிச் சேறல் என்ற அதிகாரத்திற்கு மார்க்சியரிடையே இரு வேறுபட்ட கருத்து நிலவுவதைத் தொகுத்துத் தருகிறார். வள்ளுவரை முற்போக்கு அணியில் சேர்க்கிற மார்க்சியர் சிலரும் பிற்போக்கு அணியில் சேர்க்கிற மார்க்சியர் சிலரும் உள்ளதை எடுத்துக் காட்டுகின்றார். ஆனால் இவ்வாறு மார்க்சியரிடையே இரு வேறு கருத்தாக்கம் உருவாவதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வாளர் விளக்காமல் விடுகிறார். அதேநேரத்தில் திராவிட இயக்க அரசியலுக்கு எதிரான பொதுவுடைமை இயக்கத்தின் ஒரு நுண்அரசியல் நடவடிக்கைதான் திருக்குறள் பற்றிய மார்க்சிய ஆய்வு என்கிறார் ஆய்வாளர். இது முன்னுக்குப் பின் முரணாகவும் ஒற்றை வாதம் பேசுவதாகவும் அமைந்துள்ளது.

பக்தி இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள் என்ற தலைப்பில் பக்தி இலக்கியக் காலகட்டத்தை வைதீக சமயத்திற்கும் புறச்சமயங்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டமாக மட்டும் பார்க்காமல், நிலவுடைமை வர்க்கத்திற்கும் வணிக வர்க்கத்திற்கும் இடையே நிகழ்ந்த போராட்டமாக ஆய்வாளர் எடுத்துக் காட்டுகின்றார். மேலும் மதம் பற்றிய மரபு மார்க்சியர்களின் பார்வை திராவிடக் கழகத்தினரின் பார்வையோடு ஒத்துப் போவதை எடுத்துக்காட்டுகிறார்; நாயன்மார்கள் பாடல்களையும் ஆழ்வார்கள் பாடல்களையும் வெறுமனே பக்திப் பாடலாகப் பார்க்காமல் அவற்றுக்குள்ளும் புகுந்து கிடக்கின்ற பொருள் முதல்வாதக் கருத்துக்களையும் காணமுடியும் என்றும் மதத்தின் முற்போக்கான பங்களிப்பையும் அடையாளம் காண முடியும் என்றும் ஞானியின் கருத்துக்களை ஆய்வாளர் முன்மொழிகிறார். இந்த இயலில் பெரும்பாலும் ஞானியின் பார்வையே ஆய்வாளரின் பார்வையாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர் பக்தி இலக்கியத்தின் மேல் நடந்துள்ள பல்வேறு பார்வையுள்ள மார்க்சியர்களின் கருத்துக்களின் மேல் வினைபுரிந்து, அவற்றிலிருந்து ஒரு கருத்தை உருவாக்க முயலவில்லை. மேலும் தகவல்களைத் திரட்டித் தருவதாகவே அமைந்துள்ளது.

காப்பிய இலக்கியம் : மார்க்சிய ஆய்வுகள் என்ற இயலில் சிலப்பதிகாரம் மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகிய காப்பியங்களைப் பற்றி மார்க்சியத் திறனாய்வு உருவாக்கிய கருத்தாக்கங்களையும் அவைகள் திராவிட இயக்கக் கருத்தாக்கங்களுக்கு எதிர்நிலையில் உருவாக்கப்பட்டவை என்பதையும் ஆய்வாளர் விளக்கிச் செல்கிறார். இருவருமே காப்பியங்களில் உள்ளிருந்து கிடக்கும் பாவிகப் பண்டை, காப்பிய அழகியலைக் கண்டுரைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்றும் சரியாக தெளிவுறுத்துகிறார். ஆனால் இவ்வாறு நிகழ்ந்ததற்கான காரணங்களை ஆராய முயலும் போதுதான் திறனாய்வைப் பற்றிய திறனாய்வாக ஆராய்ச்சி விளங்கும். மேலும் ஆய்வாளர் ஆய்வேடு முழுவதும் ஞானியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுத்துக்களை எடுத்துக்காட்டும் போதெல்லாம் அந்நியமாதல் மார்க்சியர் அவ்வாறு கருதுவர் என எழுதிச் செல்கிறார். அவ்வாறு ஒன்றைப் பற்றிக் கருதுவதற்கும் அந்நியமாதல் தத்துவத்திற்கும் என்ன உறவு என்பதை ஆய்வாளர் விளக்கவில்லை. இதுபோலவே மரபு மார்க்சியர், அமைப்பியல் மார்க்சியர் என்று சிலரைப் பிரித்துக் கொண்டு அவர்களின் எழுத்துக்களை எல்லாம் அந்தந்த வரையறைக்குள்ளேயே இருப்பதாக ஒரு முடிந்த முடியை மேற்கொண்டு ஆய்வை நிகழ்த்திச் செல்கிறார். சான்றாக 'இயேசுவும் ஒரு தீர்க்கதரிசியாகப் புரிந்து கொள்ளப்படுகிறார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் இம்முறையில் மதிக்கத்தக்கவர்கள் என்று அந்நியமாதல் மார்க்சியர் மதிப்பிடுவர் என்கிறார். (ப. 122) இங்கே அந்நியமாதல் தத்துவத்திற்கும் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் இயேசுவையும் தீர்க்கத்தரிசியாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கும் என்ன உறவு என்பதையும், அவ்வாறு புரிந்து கொள்வதற்கான தமிழ்ச் சமூகத்தின் தேவை என்ன என்பதை அந்நியமாதல் மார்க்சியர்கள் விளக்கி இருக்கிறார்களா இல்லையா? அவ்வாறு விளக்கி இருந்தால் அந்த விளக்கத்தில் வெளிப்படும் நிறை குறை என்ன என்பனவற்றையெல்லாம் ஆய்வாளர் நுணுகிக் கண்டிருந்தால் மார்க்சிய திறனாய்வு எதிர்காலத்தில் செழுமைப்பட வழிகாட்டுதலாக இந்நூல் அமைந்திருக்கும்.

இவ்வாறு சில நுணுக்கமான விடுபடல்கள் இந்த நூலில் நிகழ்ந்திருந்தாலும், தமிழின் பழம்பெரும் இலக்கியங்கள் இந்த நூற்றாண்டில் எப்படியெல்லாம் புது விளக்கம் பெற்றன என்பதை அறிந்து கொள்ள ஒரு தகவல் களஞ்சியமாக இந்நூல் விளங்குகின்றது. பட்டத்திற்காகப் பக்கங்களை நிரப்பி வைக்கும் ஆய்வேடுகள் ஆராய்ச்சி என்ற பெயரில் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு மோசமான தமிழ்க் கல்விச் சூழலில் இந்த அளவிற்குக் கடுமையாக உழைத்த ஆய்வினைச் செம்மையாக நடத்தியிருக்கும் துரை அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் பொதுவாகச் சொல்வார்கள் ஒரு ஆய்வேடு எழுதி முடித்த பிறகுதான் உண்மையான ஆய்வே தொடங்குகிறது என்று, நண்பர் துரை அவர்கள் இந்தத் தலைப்பின் கீழ் இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் செல்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டவே ஒரு ஆய்வின் ஒரு ஆய்வாக என்னுடைய இந்தக் கட்டுரை தயாரிக்கப்பட்டது. நண்பர் துரை புரிந்து கொள்வார் என நம்புகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நூல் திறனாய்வு :*

# கவிதை உருவாக்கம் - இரண்டு தொகுதிகள் தொல்காப்பியர் கவிதை கொள்கை

## - ஆசிரியர் : பேரா. அகத்தியலிங்கம்

- பேராசிரியர் க. பூரணசந்திரன்

1. முதலில் இந்தப் புத்தகங்கள் மூன்றுமே சாதாரண எம்ஃபில் அல்லது பிஎச்.டி. ஆய்வேட்டுக்கு எழுதுவது போன்ற வடிவத்தைக் கொண்டிருக்கின்றன. அதாவது ஆங்காங்கே சம்பந்த சம்பந்தமில்லாமல் மேற்கோள்கள். நம் தமிழ் மாணவர்களாக இருந்தால் மு.வ., இரா.தண்டாயுதம் என்று மேற்கோள் காட்டுவார்கள். அகத்தியலிங்கம் ஆங்கிலம் அறிந்திருப்பதால் டிரைடன், பிலிப் சிட்னி, ஷெல்லி, டிஎஸ்.எலியட் என்று கணக்கற்ற ஆங்கில மேற்கோள்களைக் காட்டிக்கொண்டே செல்கிறார். ஆனால் அவற்றைத் தமது ஆய்வுக்குப் பயன்படுத்துவதில்லை. மாறாக ஆய்வு என்று வரும்போது பெயர்த் தொடர், வினைத்தொடர், அடைகள் என்று போய்விடுகிறார். இரண்டிற்கும் சுத்தமாகப் பொருந்தவில்லை. ஆகவே இது பயனற்ற நூலாகிவிடுகிறது. மொழியியல் ஆய்வுதான் முக்கியம் என்றால் விடோசன் மாதிரி, ரோஜர் ஃபௌலர் மாதிரி முற்று முழுதாகச் செய்யவேண்டும். மாறாக சிறந்த சொற்களைப் பயன்படுத்தவேண்டும், செம்மையான மொழியமைப்பு வேண்டும், அழகு வேண்டும் என்று மேற்கோள்களைக் காட்டிக்கொண்டு வாக்கிய அமைப்பை ஆராய்வதால் என்ன பயன்? மொழியியலின்படி உயர்ந்த சொற்கள், தாழ்ந்த சொற்கள் என்று மதிப்பிட எந்தக் கருவியும் கிடையாது. இப்படி அவர் சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாகவே மூன்று நூல்களும் அமைந்திருககின்றன. காலம்போன வேளையில் திடீரென்று இலக்கியத்தின்மேல் ஆசைவந்துவிட்டால் அவரது ஆய்வு என்று (அவர் கருதிக்கொள்வதையெல்லாம்) நாம் பாராட்டவேண்டுமா?

2. மொழியியல் ரீதியான ஆய்வும் முடிவானதாக இல்லை; தாம் கொண்ட அருவச்சொற்களுக்கும் (அழகு, மேன்மை, உயர்வு இத்தியாதி) அவரால் விளக்கமளிக்க முடயவில்லை என்பது இந்நூலின் இரண்டாம் கெட்டதனம். ஆனால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் இந்த நூல் பெரிதும் மகிழ்ச்சியளிக்கும்; அவர்களால் பாராட்டவும் படும். காரணம், அவர்களுக்கு எக்கச்சக்கமான மேற்கோள்கள் இந்த மூன்று நூல்கள் வாயிலாகக் கிடைப்பதுதான். தங்கள் ஆய்வேடுகளில் அல்லது புத்தகங்களில் அவர்கள் எங்கே வேண்டுமானாலும் இவற்றைத் தூவி மணம் சேர்த்துக் கொள்ளலாம் அல்லவா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. மூன்றாவதாக, எங்கு பார்த்தாலும் இந்த நூலில் உயர்வு, மேன்மை, செம்மை என்று பழங்காலக் கோட்பாடுகளே பயன்படுத்தப்படுகின்றன. ஏதோ ஆபர்கிராம்பி பிராட்லி காலத்தில் வரவேண்டிய புத்தகம் தவறிப்போய் இந்தக் காலத்தில் வந்துவிட்டது. இந்த மாதிரிப் புனிதங்களைக் கவிதையியல் தாண்டி ஐம்பதாண்டுகளாவது ஆயிற்று. புதுத்திறனாய்வாளர்களே இம்மாதிரி அகவயமான சொற்களை வெறுத்தவர்கள். தலித்தியம், பெண்ணியமெல்லாம் வந்தபின் உயர்வு மேன்மை போன்ற கோட்பாடுகள் மிகவும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டன. மார்க்சியமே ஆரம்பகாலத்தில் இவற்றையெல்லாம் ஓரளவேனும் தன்னுடைய விமரிசனங்களில் தகர்த்திருக்கிறது. எது மேன்மை? எது சொற்களின் அழகு? எது செம்மையான தொடர்? இவையெல்லாம் வர்க்கம், சாதி போன்ற எத்தனையோ அமைப்புகளால் உருவாவன அல்லவா? இவற்றையெல்லாம்ஏதோ எல்லாருக்கும் பொதுவானதுபோலப் பேசுகின்ற இந்த நூல், எவ்விதக் கோட்பாடும் அற்ற, கிளிப்பிள்ளை வாய்பாடு போல யாரையோ மேற்கோள் காட்டி ( அதனால்தான் பல்கலைக்கழக ஆய்வேடுகளுடன் ஒப்பிட்டேன்) என்னத்தையோ எழுதுவதாக முடிந்திருக்கிறது. அப்படியானால் இந்த நூலினால் பயனே இல்லையா? விமரிசன நோக்கிற்கு முன்பாகக் கவிதை பற்றிப் பல்வேறு கருத்துகளை அறிந்துகொள்ள அ.ச.ஞா, மு.வ. போன்றோர் நூல்கள் பயன்படுகின்றன அல்லவா, அதுபோல இதுவும் பயன்படும். பாராட்டப்படும். ஆழமான இலக்கிய உலகிற்கோ விமரிசன உலகிற்கோ இந்நூலால் பயன் எதுவும் இல்லை.

4. ஆனால் இவரது ஒரு கருத்து எனக்கு உடன்பாடு. (பெரும்பாலான தமிழாசிரியர்கள் உடன்படமாட்டார்கள்). தொல்காப்பியம் கவிதையியல் கூறுகின்ற நூலே தவிர அக்கால வாழ்க்கையைக் கூறவந்த நூல்அல்ல என்பதுதான் அக்கருத்து. தொல்காப்பியமோ சங்க இலக்கியமோ அவை எழுந்த காலத்தை அப்படியே பிரதிபலிப்பன அல்லது வாழ்க்கையைக் கூறவந்தவை அல்ல. சங்க இலக்கியங்கள் எவ்வளவு கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு தன் பாத்திரங்களையும் கூற்றுகளையும் உருவாக்குகின்றன என்பதைப் பார்த்தாலே இது விளங்கும். அவை ஒரு குறிப்பிட்ட மரபின்படி எழுந்தவை. அவற்றைச் செவ்வியல் நூல்கள் அல்லது கவிதைகள் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். அகத்தியலிங்கத்தின் இந்நூல்கள் விளைவாகத் தமிழாசிரியர்கள் மத்தியில் இந்தக் கருத்து நிலைபெற்றால் அது நல்லதாக இருக்கும்.

5. அகத்தியலிங்கத்தின் முறைகள் கவிதை உருவாக்கத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் பயன்படாது, நல்ல கவிதை எது என்று அறிவதற்கும்கூடப் பயன்படாது (ஒப்பீட்டு அளவில்) விளித்தொடர்களும், அடுக்குமொழிகளும் சங்கக் கவிதைகளை ஆக்கியிருக்கின்றன போன்ற 'கண்டுபிடிப்புகள்' எதற்கும் பயன் அற்றவை. இதை இக்காலத்திய ஆபாசத் திரைப்படப் பாடல்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயன்படுத்தி 'அவையும் மிகச் செம்மையாக ஆக்கப்பட்டிருக்கின்றன' என்று எவரும் எளிதாக வாதிடலாம். அதாவது இந்த நூல்கள் மூன்றும் இலக்கியத்தின் அடிப்படையான தன்மை என்ன என்பதைத் தவற விட்டுவிடுகின்றன.

6. ஆங்கிலச் சொற்களுக்கான மொழியாக்கங்களும் சரியில்லை. ஆர்கானிக் வடிவம் என்றால் 'கரிம வடிவம்' என்றால் நாம் படிப்பது வேதியியலா, இலக்கியமா என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. இதேபோலத்தான் 'இமிடேஷன்' என்பதைப் போலவாக்கம் என்பது. இம்மாதிரி மொழியாக்கம் செய்பவர்களைப் பாலவாக்கத்திற்கு அனுப்பிவிடலாம்.

இன்னும் எத்தனையோ எழுதாத காரணங்கள் இருக்கின்றன - கடிதத்தின் சுருக்கம் கருவி விட்டுவிடுகிறேன்.

* * *

## வரப்பெற்றோம் நன்றி

- கலைப்பித்தன் கவிதைகள்
  புனிதா பதிப்பகம்,
  33, பழனியப்பத் தேவர் சந்து, சூலூர் அஞ்சல், கோவை - 641 402
  ரூ. 40.00

- இனிய அடிகள் 2000
  மு.பெ. இராமலிங்கம்
  உலகக் கலைத்தமிழ் மன்றம், "பாவலர் குடில்",
  97-C, சித்தாத் தோட்டம், கணபதி, கோவை - 6.
  ரூ. 40.00

- மொழி மானம்
  ம. இலெ. தங்கப்பா, வானகப் பதிப்பகம், புதுவை - 8. ரூ. 50.00

- வள்ளுவம்
  புரட்டாசி - ஐப்பசி
  கார்த்திகை - மார்கழி
  கவிதா நிலையம், விருத்தாசலம் - 1 ரூ. 25.00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்நேயம் : "அகமும் புறமும்"

- ஞானி

○ மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் இந்தியவியல் துறையில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றும் திரு. அலெக்சாண்டர் துபியான்ஸ்கி தன் மாணவரோடு கோவைக்கு வந்திருந்தார். விஜயா பதிப்பகத்தார் அவரோடு ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தமிழகத்திற்கு அவர் முன்னரும் பலமுறை வந்துள்ளார். தமிழ்நாட்டை, மக்களை, பேச்சுமொழியை அறிந்து கொள்வதற்காகவும் தன் ஆய்வுக்காகவும் வந்திருந்தார். நல்ல தமிழறிஞர் அவர். சங்க இலக்கியத்தில் முல்லைத் திணை பற்றி முனைவர் பட்டத்திற்கு அவர் ஆய்வு செய்தார். காஞ்சித் திணை குறித்து இப்பொழுது ஆராய்கிறார். ஒரு மணி நேரத்திற்கு மேல் நல்ல தமிழில், ஆங்கில மொழிக் கலப்பில்லாமல் அவர் பேசுவது நமக்கு வியப்பாக இருக்கிறது. வள்ளுவரைப் போற்றுகிறார். தமிழ் செய்யுளின் இசை நயம் கண்டு அவர் வியக்கிறார்.

சமூக அக்கறை மிகுந்த அவர் இரஷ்யா செச்சன்யா மீது நடத்துகிற போரை கடிந்துரைக்கிறார். சோவியத் யூனியன் தகர்ப்பிற்கு இராணுவப் பெருக்கமும் அதிகார வர்க்கக் கெடுபிடிகளும் காரணம் என்கிறார். கோர்பசேவை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இன்றைய இரஷ்ய எழுத்தாளர்களுக்கு சமூக அக்கறை இல்லை என்கிறார். அவர்களுக்கு சமூகம் பற்றிய ஆய்வுகள் இல்லை என்கிறார். இன்றைய உலகின் இயற்கை நாசம் முதலிய பேரழிவுகள் காரணமாக காஞ்சித் திணை பற்றி ஆய்வு செய்வதாகக் கூறுகிறார். அமெரிக்கா குறித்து ஜெயகாந்தன் பாராட்டுவதை அவர் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்.

ஒன்றரை ஆண்டு மட்டுமே தமிழ் கற்ற அவரது மாணவர் நிக்கோலஸ், தடுமாற்றத்தோடு என்றாலும், தமிழில் அழகாகப் பேசுகிறார். சமதர்மத்தின் மீது அவரது தாகம் இன்னும் நிறையவே இருக்கிறது. முன்பு எப்படியோ, இப்பொழுது அவரால் தனது அரசைக் கண்டிக்கும் அளவுக்கு வெளிப்படையாகப் பேசுகிறார். ஒரு நல்ல தமிழ் அறிஞரைச் சந்தித்த நிறைவு நமக்கு ஏற்படுகிறது. நம் பேராசிரியர்களையும் நினைத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

○ பிப்ரவரி 2-வது வாரம் சென்னைக்குச் சென்று திரும்பினேன். பலரைச் சந்தித்தேன். பேராசிரியர் இராஜநாயகம் அவர்களின் மூன்று நாவல்களை படித்த மனநிறைவோடு இராஜநாயகம் அவர்களைச் சந்தித்தேன். மார்க்சியமும் தலித்தியமும் பின்-நவீனத்துவமும் அவரிடம் ஒரு மையத்தில் இணைந்திருப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கு வியப்பாக இருக்கிறது. தமிழ்ச் சூழலில் இப்படி ஒரு விளைச்சலை நாம் இருகரம் நீட்டி வரவேற்க முடியும். அவரது "சாமிக் கண்ணு" நாவலை நாம் பெரிதும் கொண்டாட முடியும். தமிழ்த் துறையியல் களங்கள் என்று ஒரு ஆய்வு நூலை வெளியிட்டிருக்கிறார். இயேசு சபையைச் சார்ந்த துறவி அவர். அடித்தள மக்களின் சமயம் குறித்த அவரது பார்வை நமக்கு எவ்வளவோ உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது. மேட்டுக்குடி மக்களின் சமயம் குறித்து, விரிவான விமர்சனங்களைத் தருகிறார். அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்வதற்கு நிறைய இருக்கிறது.

தமிழறிஞர் பெ.சு.மணி அவர்களோடு புதுவை ஞானமும் நானும் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தோம். சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் பெயரில் நந்தன் இதழில் வெளியான ஒரு கடிதம் பற்றி மன வருத்தத்தோடு பேசினார். அந்தக் கடிதத்திற்கு நந்தன் இதழில் விரிவான விமர்சனமும் தந்திருக்கிறார்கள். ம.பொ.சி. அவர்களோடு நெருக்கமாக இருந்தவர் பெ.சு. மணியவர்கள். தமிழ்ச் தேசியம் குறித்த குழப்பங்களும் திரிபுகளும் மிகுந்துவரும் இன்றைய சூழலில் ம.பொ.சி. அவர்களை இன்று நாம் மரியாதையோடு நினைத்துப் பார்க்க முடியும். ம.பொ.சி. யை கேலி செய்கிறது நந்தன் இதழ்.

அதிர்ச்சி தரும் ஒரு உண்மை என்னவென்றால் பெ.சு. மணி அவர்கள் இந்த மடலை எழுதவில்லை. தமிழண்ணல் அவர்களிடமிருந்து பெ.சு. மணியால் எழுதப்பட்டது என இப்படி ஒரு கடிதம் நந்தன் இதழுக்கு வர, அதை அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். பெரியவர் அருணாசலம் அவர்களோடு பெ.சு. மணி பேசி இருக்கிறார். தமிழண்ணல் அவர்களிடமிருந்து பதில் இல்லை. இளவேனிலும் ஏதேதோ சொல்லுகிறார். பெ.சு.மணி அவர்களின் மறுப்புக் கடிதத்தை நந்தன் பிறகு வெளியிட்டு இருக்கிறது. கடிதம் எழுதியது யார் என்பது புதிராக இருக்கிறது. தினமணியில் அடிக்கடி வெளிவரும் பெ.சு. மணி அவர்களின் மடல்கள் காரணமாக இப்படி ஒரு "சதி" நடைபெற்று இருக்கலாம். இதற்குத் தமிழண்ணல் அவர்களும் பதில் சொல்லத்தான் வேண்டும்.

புதுவை ஞானம் அவர்களோடு 1970களின் தொடக்கத்தில் எனக்கு அறிமுகம் ஆயிற்று. ஆயுள் காப்பீட்டு கழகத்தில் அவர் பணிபுரிந்தார். மார்க்சிய இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தார். திறந்த மனத்தோடு எதையும் பார்ப்பவர் அவர். நான்கைந்து குழந்தைகள். ஸ்டவ் வெடித்து மனைவி காலமானார். அந்தமானுக்குப் பயணம் போனார். பணியாற்றி இருந்த கடன்களை அடைத்தார் என்று கருதுகிறேன். மீண்டும் சென்னைக்கு வந்தார். ஒரு மாதிரி குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி விட்டார். ஓய்வுபெற்று நிறையப் படிக்கிறார். பல நூலகங்களுக்கும் சென்று நான் கேள்விப்பட்டிராத எத்தனையோ நூல்களை தேடி அவர் படித்திருக்கிறார். பேசுவதும் எழுதுவதும் மிகக் குறைவு.

www.tamilarangam.net

இந்தச் செய்திகளை நண்பர்களோடு பகிர்ந்து கொள்வதற்காக என்றளவில் நான் எழுத வேண்டியதில்லை. இவற்றின் பின்னணியில் புதுவை ஞானம் அவர்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மார்க்சியத்தோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தாலும், மனைவி இறப்பதற்கு முன்பே தொடங்கிய சில ஐயங்களை அவர் ஊன்றி ஆராய்ந்தார். சமூகத்தின் நோய் நொடிகள், துயரங்கள் முதலியவற்றுக்கான காரணங்களை மார்க்சியம் சரியாகவே விவரிக்கிறது. ஆனால் தனிமனிதர் என்ற முறையில் எவர் ஒருவர் வாழ்விலும் நிகழும் துயரங்கள் முதலியவை மார்க்சியத்தின் ஆய்வில் இல்லை. ஒருவர் ஏன் ஊனத்தோடு பிறக்க வேண்டும். ஏன் அவர் தற்கொலை செய்து கொள்ளவேண்டும். ஒருவர் கலைஞராக இருக்கிறார். இன்னொருவர் என்ன முயன்றாலும் கலைஞர் ஆக முடியவில்லை. இப்படி எவ்வளவோ கேள்விகள். மரணம், திருமணம், செல்வம், வறுமை, விபத்து, மன நோய் இப்படி ஒருவருக்கு ஏன் நேர வேண்டும். சோதிடத்தில் இவற்றுக்கெல்லாம் விடை கிடைக்கிறது என்கிறார் புதுவை ஞானம். பிறப்பின்போது சில நிர்ணயம் ஆகிவிடுகின்றன. நம்மால் மாற்ற முடியாது. ஞானம் அவர்களது ஆய்வு சோதிடத்தோடு நின்று விடுவதில்லை. தமிழர்களின் கணிதம் பற்றி விரிவான நுட்பங்களோடு பேசுகிறார். இவற்றை எல்லாம் அவர் எழுத வேண்டும்.

குஜராத் நில அதிர்வு எல்லோருக்குள்ளும் பெருத்த மன அதிர்வுகளை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை. ஜனவரி 26 குடியரசு நாளில் ஏற்பட்ட இந்த அதிர்வு ஓவியர் புகழேந்தியை கடுமையாகப் பாதித்திருக்கிறது. தன் துயரத்தை ஓவியங்களாக வெளிப்படுத்தி இருக்கிறார். 150 அடி நீளத்தில் ஓவியங்கள். தி. நகரில் ஒரு பள்ளியில் நடைபெற்ற இந்தக் கண்காட்சிக்கு நண்பர்களோடு சென்றிருந்தேன். ஈழத் தமிழகம் குறித்து தமிழர் அல்லாத எத்தனையோ மக்களுக்கு அக்கறை இல்லை. இருந்தாலும் எங்களுக்கு மனித நேயம் இருக்கிறது. ஆகவே குஜராத் மக்களுக்காக கவலைப்படுகிறோம் என்று மேடையில் பலர் முழங்கினர். என்ன மனித நேயம் இது என்று எனக்குள்ளும் சில கேள்விகள். புகழேந்தி அவர்கள் யதார்த்த பாணியில்தான் ஓவியங்கள் வரைகிறார். துயரங்கள் மிகுந்து மனம் வெடித்துச் சிதறும் நிலையில் யதார்த்த பாணியில் நிற்க முடியாது. இந்த மன வெடிப்பை நவீன பாணி ஓவியங்கள்தான் சிறப்பாக சித்தரிக்க முடியும். யதார்த்தபாணிதான் புரியும் என்றெல்லாம் பேசுவதில் பொருள் இல்லை. புகழேந்தி அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

குஜராத் நில அதிர்வு என் மன நிலையையும் கடுமையாக பாதிக்கத்தான் செய்தது. எனினும் எல்லோரையும் போல என்னால் புலம்ப முடியவில்லை. என் சிந்தனைகளைத் திரட்டிக் கொள்ள நாட்கள் ஆயின. ஒவ்வொரு நாளும் பத்திரிகைகள் படிக்கிறோம். எவ்வளவு தற்கொலைகள், கொலைகள், விபத்துக்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வறுமையினால், நோய் நொடிகளால் சாகின்றவர் தொகை எவ்வளவு இருக்கும். சாவு மட்டுமல்லாமல் மன நோய்கள், கொடுமைகள், குற்றச் செயல்கள் எவ்வளவு நடைபெறுகின்றன. காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை ஆண்டு முழுவதும் நடைபெறுகின்ற வகை, வகையான அவலங்களை, கொடுமைகளை கணக்கிட முடியுமானால் எத்தனை குஜராத் அதிர்வுகளுக்கு ஈடாகும். இவற்றை எல்லாம் சிந்தனைக்குள் செல்லவிடாமல் ஒதுங்கி இருப்பவர்களுக்கு பெருத்த வெடிப்புத்தான் கண்ணில் படுகிறது. நமது மனித நேயம் எத்தனை நோஞ்சானாக இருக்கிறது. குஜராத் கொடுமைகளுக்காக நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும் / செய்ய முடியும். அதிர்வுகள் ஒரு வகையில் மட்டுமா? ஓராயிரம் வகையில் அதிர்வுகள் நம்மைத் தாக்குகின்றன. தலைவர்கள், கட்சிகள், ஊழல்கள், தேர்தல், வணிகம் என்றெல்லாம் நம் சிந்தைகள் விரிகின்றன. அதிர்வுகளுக்குள்தான் நமக்கான வாழ்க்கையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். ஓவியங்களும் படைப்புக்களும் இவற்றை எல்லாம் வெளிப்படுத்தட்டும். முப்புரங்களை எரித்த சிவன், மகிசாசுரவர்த்தினி, கையில் சிலம்போடு கண்ணகி என்றெல்லாம் நமக்குள் காட்சிகள் எழுகின்றன. இட்லரும் நமக்குள் வந்து போகிறார். "எரிதழல் கொண்டு வா" என்ற பாரதியின் குரலும் நமக்குள் கேட்கிறது.

சென்னையில் இப்படி பலரையும் சந்திக்கும் முறையில் எனக்குப் பேருதவியாக இருந்த நாவல் ஆசிரியர் எம்.ஜி.சுரேஷ் அவர்கள் என் மரியாதைக்கும் நன்றிக்கும் உரியவர். அட்லாண்டிஸ் மனிதனை வெளியிட்ட சூட்டோடு மகா அலெக்ஸாண்டரை இன்னொரு புதிய வகை நாவல் ஆக்கியுள்ளார் இவர். வியப்படைகிறோம் நாம்.

சென்னையில் நான் சந்தித்தவர்களில் இன்னும் இருவரை இங்கு குறிப்பிட வேண்டும். ஒருவர் வத்சலா, இன்னொருவர் கிருஷாங்கினி. வத்சலா அவர்கள் அறிவியல் இயக்கத்தில் பணி புரிகிறார். அவரது சுயம் தொகுப்பிலிருந்து சுமார் முப்பது கவிதைகளை என் முன் அமர்ந்து படித்தார். கணவனிடமிருந்து பிரிந்து வந்ததற்கான காரணங்களை, அவல உணர்வின் அடையாளம் எதுவும் இல்லாமல் விடுதலைக்கான பெருவிருப்பத்தோடு கம்பீரமான குரலில் கவிதைகளைப் படித்தார். என் வியப்புக்கு அளவில்லை. கிருஷாங்கினி அவர்கள் தானே தனியனாய் மேற்கொண்டிருக்கும் ஓர் அறிய முயற்சி பற்றிச் சொன்னார். தமிழில் சிறப்பான கவிஞர்கள் என்று சொல்லும் முறையில் பெண் கவிஞர்கள் இல்லை என்று விக்கிரமாதித்தன் சொன்னதை பொய்யாக்கும் முயற்சியில் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். 60 பெண் கவிஞர்கள். ஒவ்வொருவர் கவிதைகளிலிருந்தும் சிறப்பான கவிதை ஒன்றைத் தெரிவு செய்து கணிணியில் பெரிய எழுத்துக்களில் பதிவு செய்ய வேண்டும். அதே அளவில் நம் கால ஓவியர்களைக் கொண்டு அந்தக் கவிதைக்குரிய ஓர் ஓவியம். இவற்றையெல்லாம் கண்காட்சியில் வைக்கவேண்டும். காண வருபவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிஞர்களோடும், ஓவியர்களோடும் உறவாடவும் முடியும். மார்ச் 4 முதல் 8 முடிய இப்படி ஒரு கண்காட்சியைத்தானே செலவு செய்து ஏற்பாடு செய்கிறார் கிருஷாங்கினி அவர்கள். கிருஷாங்கினி அவர்களுக்காக நாம் பெருமிதம் கொள்ள முடியும். ஆண்டாளைப் போல நம் பெண்களும் அற்புதமாகக் கவிதை செய்ய முடியும். நமக்கு ஐயம் தேவை இல்லை. நம் பெண்களைக் கிளப்பி விடுகிற கவிஞர் விக்கிரமாதித்தனையும் பாராட்ட முடியும்.

○ பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் தான் முன்வைத்த நிதி நிலை அறிக்கையை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட அறிக்கை என்று கூறுகிறார். முதலாளிகள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சுங்க வரியை அமைச்சர் நிறையக் குறைத்து இருக்கிறார். இந்தியத் தொழில்களின் வளர்ச்சி கருதி இறக்குமதி வரியை தாராளமாக உயர்த்தி இருக்கிறார். வங்கி வட்டி விகிதத்தைக் குறைத்து இருக்கிறார். பொதுத் துறை நிறுவனங்களை தனியாரிடம் விற்க உறுதி கொண்டிருக்கிறார். சென்ற ஆண்டு தொழில் வளர்ச்சி விகிதம் குறைந்துவிட்டது. பற்றாக்குறை அதிகரிக்கிறது. இதற்கு உகந்தது இந்த நிதிநிலை அறிக்கை என்கிறார் நிதி அமைச்சர். பிரதமரும் பாராட்டுகிறார்.

மைய அரசு வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி உள்நாட்டு / வெளிநாட்டுக் கடன்களுக்கு வட்டியாய் போய்ச் சேருகிறது. இன்னொரு பகுதி அரசின் செலவுகளுக்காக. இராணுவத்திற்கு 62,000 கோடி. திட்டச் செலவுகளுக்கு இன்னொரு 60,000 கோடி. நிதி அமைச்சர் கூறுகிறபடி கடன் பொறிக்குள் இந்தியா மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அலுமினியம் நிறுவனத்தை 551 கோடிக்கு தனியாரிடம் ஒப்படைக்கிறார்கள். இன்னும் 27 பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படும். அரசு நிறுவனங்களிடமிருந்து ஆண்டுக்கு 2 சதம் வீதம் ஊழியர்கள் வெளியேறலாம். கை நிறையக் காசு கிடைக்கும். தொழில் தொடங்கலாம் அல்லது தொலைத்து விடலாம்.

ஆயிரம் தொழிலாளர் வேலை பார்க்கும் நிறுவனங்களை மூடவோ, தொழிலாளர்களை வெளியேற்றவோ முதலாளிகளுக்கு உரிமை வழங்கப்படும். ஆண்டுக்கு 45 நாள் ஊதியம் என்பதை முதலாளி வழங்கலாம், தள்ளிப் போடலாம், அப்புறம் இல்லை என்று சொல்லி விடலாம். தொடர்ந்து மண்ணெண்ணை முதலியவற்றுக்கு மானியம் குறைக்கப்பட்டு 4/5 ஆண்டுகளில் மானியங்கள் இல்லாமல் செய்து விடலாம். அஞ்சல் கட்டணத்தையும் உயர்த்தியாயிற்று. குஜராத் நில அதிர்வு என்று சொல்லி பிரதமர் மிரட்டியது உண்மை இல்லை.

உறுதியாகச் சொல்லலாம் முதலாளிகளுக்கு மகிழ்ச்சி ஊட்டுகிற நிதி நிலை அறிக்கைதான். அரசு / அரசுத் துறை ஊழியர்கள் விரைவில் தெருவுக்கு

www.tamilarangam.net

வந்து விடுவார்கள். தொழிலாளர்கள் விரைவில் அனாதை ஆவார்கள். மானியங்கள் இல்லை. மக்களின் விதியை அவரவரே பார்த்துக் கொள்ள வேண்டும். கலைஞர் கண்டிக்கவில்லை. மம்தா பரவாயில்லை. தொழிற்சங்கங்கள் ஓய்ந்து விடவேண்டும். அந்நியர்கள் நமக்கு இனி அதிகாரிகள் ஆவார்கள். இப்பொழுதே கடன் பொறிக்குள்தான் இருக்கிறோம். தப்புவதற்கு என்ன வழி. பால்கோ நிறுவனச் சிக்கல் கடுமையாகிறது என்பது மட்டுமல்ல அரசையும் அந்நிய நிறுவனங்களையும் ஒருசேர எதிர்ப்பதற்கான ஒரு மாபெரும் பரிசோதனை இங்கு தொடங்கி இருக்கிறது நாம் வரவேற்கிறோம்.

○ அண்மையில் கோவையில் சுதேசித் தொழில் கண்காட்சி நடைபெற்றது. தொழில் அதிபர்கள் முதலியவர்கள் குடும்பத்தோடு சென்றார்கள். பெருங்கூட்டம். நிறைய இயந்திரங்கள், கருவிகள். வீட்டுப் பயன்பாட்டுக்கு பயன்படும் பலவகைப் பொருட்கள். இடையில் ஆர்.எஸ்.எஸ். புத்தகக் கடை. தேங்காய் பழத்தோடு வரவேற்பு. இறுதி நாளில் ஜோஷிக தேசியம் என்பதற்கு புது விளக்கம் தருகிறார். இந்தியாவின் மரபு வகைத் தொழில்களை புதுப்பிப்பது அல்ல சுதேசியம். அன்னிய தேசத்தார் நவீனத் தொழில் நுட்பங்களை நமக்கு வழங்கமாட்டார்கள். காலாவதியான 2–ஆம் தரத் தொழில் நுட்பங்களைத்தான் நமக்குத் தருவார்கள். நம் மக்களும் நிபுணர்களும் தம் அறிவுத் திறன்களால் அந்நியத் தொழில்களுக்கு நிகரானத் தொழில் நுட்பங்களை கண்டறிந்து பெருக்க வேண்டும். இதுதான் சுதேசியம். பேராசிரியர் ஜோஷி தந்த விளக்கத்தை எத்தனை பேர் கவனித்தார்கள் என்று தெரியவில்லை. காந்தியும் நேருவும் இப்படி ஒரு சுதேசியத்தைக் கற்பனை செய்திருக்க முடியாது. அந்நியர்களுக்கு இந்தியச் சந்தையைத் திறந்தாக வேண்டும். சிறு தொழில்களையும் பெரிய தொழில் நிறுவனங்கள் மெல்ல மெல்ல வசப்படுத்திக் கொள்ளும். அந்நிய நிறுவனங்களும் இந்தியத் தொழில்களை அபகரித்துக் கொள்ளலாம். உழவர்களையும் கைவினைஞர்களையும் காலத்திற்கு ஒவ்வாதவர்கள் என்று ஒழித்துவிடலாம். வங்கிகளை முதலாளிகள் கொள்ளையடிக்கலாம். அரசியல்வாதிகளும் பங்கு போட்டுக் கொள்ளலாம். சுதேசியம் என்ற பெயரால் தேசத்தையும் விற்றுவிடலாம்.

○ ஈழத் தமிழ் மக்கள் எந்த நிலையிலும் தம் உரிமைக்கான போராட்டத்திலிருந்து விலகுவதாக இல்லை. இராணுவம் செய்த கெடுபிடிகளை மீறி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர், பேராசிரியர்கள் உட்பட மாணவர்கள் பொங்கு தமிழ் எழுச்சியை மிகச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். மக்களும் கலந்து கொண்டனர். மட்டக் களப்பில் கெடுபிடிகள் இன்னும் அதிகம். அங்கும் மாணவர்கள் பொங்கு தமிழ் எழுச்சியைக் கொண்டாடினர். தமிழ் இனத்திற்கு சுய நிர்ணய உரிமை வேண்டும். தாயக உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையில் மாணவர்களும் மக்களும் கோரிக்கை எழுப்புகின்றனர். மூன்றாவது முறையாக போர் நிறுத்தம் அறிவிக்கின்றனர்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள். இரண்டொரு கட்சிகள் தவிர பத்துக்கு மேற்பட்ட தமிழ்க்கட்சிகள், "தமிழ் மக்களின் சார்பில் பேசுவதற்கான இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் தான்" என்று அறிவிக்கின்றனர். அயல்நாட்டுத் தூதுவர்கள் பலரைச் சந்தித்து விடுதலைப் புலிகளோடு சிங்கள அரசு உடன்பாடு காண வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு இந்தியத் தூதர் முதலியவர்கள் சென்று திரும்புகின்றனர். வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளோடு பேசிய கிறித்துவப் பேராயர்கள் இலங்கை அதிபரைச் சந்திக்கின்றனர். பிரிட்டானியாவில் பயங்கரவாத இயக்கம் என்ற முறையில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய அரசு தான் விடுத்தது என்ற உண்மை இப்பொழுது தெரியவந்தது. விடுதலைப் புலிகளோடு சிங்கள அரசு சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தத்தைச் செய்வதற்காகத்தான் பிரிட்டானிய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை செய்திருக்கிறது என்று இங்கிலாந்து அமைச்சர் தெரிவிக்கிறார். பல குரல்களில் சிங்கள அரசு பேசுகிறது. இனப் படுகொலையில் இராணுவம் ஈடுபட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்து அரசுக்கு அக்கறை இல்லை.

சர்வதேச அளவில் சிங்கள அரசின் மீது நிர்பந்தம் அதிகரிக்கிறது. இன்னும் எவ்வளவு காலத்திற்கு தமிழ் மக்கள் அடிமைத் தளையில் அவதிப்பட வேண்டும் என்பது புலப்படவில்லை. தமிழ்மக்கள் விட்டுக் கொடுப்பதாகவும் இல்லை. தமிழ் மாணவர்களின் பேரெழுச்சி இங்கில்லையே என்ற வருத்தம் நமக்கு ஏற்படுகிறது. நெஞ்சில் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் இங்கு எந்த இயக்கமும் இல்லாத நிலையில் நாம் நோகிறோம். "விதியே விதியே தமிழச் சாதியை" என்று நாமும்தான் அழவேண்டியிருக்கிறது.

○ நெடுங்கால வரலாறும் இலக்கியம், பண்பாடு முதலியவற்றின் மேன்மையும் உடையவர்கள் நாம் என்ற முறையில் தமிழ் இனம் எழுச்சி கொள்வதற்கான முயற்சிகள் இன்றும் போதிய அளவில் ஆக்கம் பெறவில்லை. தமிழ்த் தேசியம் என்ற அரசியலைத் தவிர நமக்கு வேறு அரசியல் தேவை இல்லை என்பதில் நமக்கு உறுதி இருந்த போதிலும், இந்த அரசியலின் பல்வகைக் கூறுகளையும் கண்டறிந்து வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளில் ஓரடி முன்சென்றால் இரண்டடிகள் பின் வாங்கவும் நேர்ந்திருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியலை திராவிடம் பேசும் கட்சிகள்கூட முன் எடுத்துச் செல்லவில்லை. ம.பொ.சி. அவர்களை இப்பொழுது நாம் நினைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது. தமிழ் அறிஞர்கள் தமிழ் மெய்யியலை வளர்த்தெடுப்பதில் தேவையான கவனம் செலுத்தவில்லை. இந்தியாவிலும் உலக அளவிலும் நடைபெறும் விடுதலை இயக்கங்களோடு நமக்கு உறவு இல்லை. தமிழ் ஈழத்தை நாம் ஆதரித்து

www.tamilarangam.net

பேசத்தான் செய்கிறோம். மரண தண்டனைக்கெதிரான முழக்கங்களை வைக்கிறோம். கர்நாடகச் சிறையில் தடாக் கைதிகளாகத் தமிழர்கள் படும் வேதனையை மாற்ற விரும்புகிறோம். இத்தகைய இயக்கங்களின்மூலம் தமிழ் உணர்வாளர்களைத் திரட்டுவதில் முனைந்திருக்கிறோம். ஆர்வத்தோடு பங்குபெறும் மக்களையும் இளைஞர்களையும் இயக்கமாக்கும் முயற்சிகள் பெரும்பாலும் இல்லை. கூட்டத்தில் கூடி நின்று குரல் எழுப்புவதோடு மக்கள் கலைந்து போகின்றனர்.

கா...க்கான இயக்கம் இல்லை. முல்லைப் பெரியாறு பற்றிப் பேசத் தொடங்கி இருக்கிறோம். சுயநிர்ணய உரிமை என்பதற்கு சரியானத் தமிழ்ச் சொல்லைத் தேடுகிறோம். விடுதலை தான் இலக்கு என்றாலும், எந்தக் கட்டத்தில் நாம் இருக்கிறோம்? இப்படியெல்லாம் விவாதிப்பதில் முனைந்திருக்கிறோம். இந்த விவாதங்கள் எத்தனை இளைஞர்களுக்குப் புரியும் என்பது பற்றி நமக்குக் கவலை இல்லை. இங்கும் அவரவர் தலைவர்களை ஆதரிக்கும் போக்கைத்தான் காண்கிறோம். மூன்று இயக்கங்கள் மட்டும் ஒரு கூட்டணியாக இணைவது போதுமா? இங்கும் இணைப்புக் காண வழியில் தடுமாற்றங்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்த மறு ஆய்வில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக் கொள்ளும் வகையில் ஏற்படும் கூட்டாட்சிக்கு வாய்ப்பு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனினும் கூட்டாட்சி என்பதை முன்வைத்து தமிழகத்திற்கும் வெளியில் சென்று மக்கள் மத்தியில் எழுச்சியை உருவாக்க முடியும். முதலில் சாதி ஒழிப்பு, பிறகுதான் சமத்துவம் / சமதர்மம் என்பது என்றும் சாத்தியமில்லை. சாதியும் வர்க்கமும் ஒன்றுக்குள் மற்றது என்ற முறையில் ஊடுருவிக் கிடக்கின்றன. அந்நியர்கள் என்ற முறையில் மார்வாடிகளோடு சேர்த்து பன்னாட்டு நிறுவனங்களையும் நாம் கடுமையாக எதிர்க்கத்தான் வேண்டும். சுற்றுச்சூழல் காப்பு இயக்கத்தில் நமக்கான பங்கு மிக அதிகம். இயற்கை வேளாண்மை, தமிழ்க் கல்வி, தமிழ் மருத்துவம், பெண்ணுரிமை, தலித் விடுதலை, மனித உரிமை முதலிய பல முனைகளை நம் இயக்கங்கள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

மதச் சார்பின்மை என்று எந்தக் கட்சி பேசினாலும் அதை நம்புவதற்கில்லை. ஊழலில் ஊறாத கட்சிகளும் இல்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எல்லாரும்தான் அலைகின்றனர். தாமிரப் பரணி படுகொலை இங்கு புறக்கணிக்கப்படுகிறது. கொள்கை அளவில் கூட்டாட்சிக் கோரிக்கையை முன் எடுத்துச் செல்ல முடியும். இன்னும் பல தமிழ் இயக்கங்களை நமக்குள் இணைத்துக் கொள்ளத்தான் வேண்டும். சு.ப.வீ. அவர்கள் விலகிச் செல்வதை நாம் ஏற்க முடியாது. கலைஞர் அரசை எதிர்க்காமல் நாம் இயக்கம் கட்டவும் முடியாது. தமிழ்த் தேசியம் என்று சொல்லிக் கொண்டு, உழவர்

www.tamilarangam.net

இயக்கங்களோடு ஒன்றுபடாமலும் இருக்க முடியாது. நுகர்வு வெறி நம்மையும் தான் தின்னுகிறது. இப்படி எவ்வளவோ சிக்கல்கள். இன்னும் பலர் கூடிப் பேச வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல.

மேடை அரசியலுக்கு இனியும் அர்த்தமில்லை. ஜெயலலிதாவை பூதமாகக் காட்டி புலியின் நிழலில் நாம் பதுங்க முடியாது. சாதியைப் பொருளியல் செரித்துக் கொள்கிறது. பொருளியலைச் சாதியால் வெல்லமுடியாது. மார்க்சியத்தின் வெளிச்சத்தில் பெரியாரியத்தை வலுப்படுத்த முடியும். தமிழகத்தில் உள்ள தெலுங்கு / கன்னடம் பேசுகிற மக்களை தமிழ் மக்களுக்குப் பகைவர்கள் ஆக்கும் முயற்சிக்கு நாமும் காரணமாகிவிடக் கூடாது. இப்படி நூற்றுக்கணக்கான சிக்கல்கள் நம்மை எதிர்கொண்டுள்ளன. தன் முனைப்பின் அடையாளம் எதுவும் இல்லாமல் நம்மால் கூடிப் பேச முடியும். விடுதலைக்கான வழியை அடைக்கும் சக்திகளோடு குழப்புபவர்களையும் நம்மால் இனம் காண முடியும். குழப்பங்கள் இப்பொழுது அதிகம். குழப்புபவர்களும் அதிகம். நாம் கவனமாக இருக்கவேண்டும்.

○ பேராசிரியர் மார்க்கண்டன் அவர்களை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். காந்தியத்தில் ஊறியவர். வினோபா அவர்களோடு நடந்தவர். கல்லூரிகளில் பணியாற்றியவர். கடைசியாக காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்தவர். உள்ளாட்சியில் தொடர்ந்து மக்களை ஊக்குவிக்கிறார். தமிழ்நாடு அளவில் மக்கள் சர்வோதய இயக்கத்தைக் கட்டி வருகிறார். ஓய்வென்பது அறியாமல் ஊக்கத்தோடு அலைகிறார். பொருளியல் முதலிய துறைகளில் பன்னாட்டு நிறுவனங்களின் ஊடுருவலைக் கடுமையாகச் சாடுகிறார். மக்கள் மத்தியில் இருந்து நிறுவனங்களைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். சுதேசியம் பற்றி தனக்கு யாரும் கற்றுத் தர வேண்டியது இல்லை என்று ஆர்.எஸ்.எஸ். காரர்களிடம் கூறுகிறார். விவேகானந்தருக்குள்ளிருந்து இந்துத்துவத்தைக் கட்டமைக்கும் முயற்சியைக் கேலி செய்கிறார்.

தமிழ்நாட்டு கடற்கரைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் முதலாளியச் சக்திகள் ஏற்படுத்திய இறால் பண்ணைகளுக்கு எதிராகத் தொடர்ந்து இயக்கம் நடத்திவரும் கடைசி காந்தியவாதி மரியதைக்குரிய செகநாதன் அவர்களை நாம் அனைவரும் அறிவோம். அவருக்கு வயது 91. அண்மையில் அவரை மார்க்கண்டன் அவர்கள் சந்தித்த பொழுது பெரியவர் செகநாதன் அவர்கள் முதலமைச்சருக்கும் பிரதமருக்கும் விடுத்த கோரிக்கை அடங்கிய கடிதத்தின் நகலைத் தந்திருக்கிறார். கடிதத்தில் அடங்கிய செய்திகளும் வேண்டுகோளும் நம்மை வெகுவாக பாதிக்கின்றன.

ஜனவரி 22–ஆம் நாள் முதல்வருக்கு எழுதிய கடிதம் இது. நாகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாவட்டம் கூத்தூரில் ஜனவரி 23 முதல் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு என்ற நோன்பை அவர் தொடங்குகிறார். இறால் பண்ணைகள் வளமான நிலத்தைப் பாழ் செய்கின்றன. மரங்களை அழிக்கின்றன. 1993–94 –ஆம் ஆண்டுகளில் தங்களின் சர்வோதய இயக்கம் அமைதியான முறையில் இறரால் பண்ணைகளுக்கு எதிரான போராட்டங்களை நடத்தியது. நூற்றுக்கணக்கான கிராமியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, பல்வேறு குற்றப் பிரிவுகளில் குற்றம் சுமத்திச் சிறையில் அடைக்கப்பட்டனர், இறால் நிறுவனங்களுக்கு எதிராக அமைதியான முறையில் உண்ணா நோன்பு ஏற்றவர்கள். 20–க்கு மேற்பட்ட குற்றவியல் சட்டப் பிரிவுகளில் இவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். செகநாதன் அவர்களும் இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டார். சிறையிலிருந்து நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்ட இவர்கள், தமது இருப்பிடங்களில் உள்ள ஊர்களில் தங்க வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் தூண்டுதலின் பேரில்தான் காவல் துறையினர் இப்படிக் கடுமையாக நடந்து கொண்டனர். வழக்குகள் இன்னும் நீதிமன்றத்தில் உள்ளன. பல முறை முதல் அமைச்சரை கேட்டபின்னர்கூட வழக்குகள் திரும்பப் பெறவில்லை.

முதல்வர் சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி, விசாரித்து இவர்கள் செய்தது குற்றங்கள் என்றால் தண்டிப்பது உடனடியாக நல்லது. குற்றங்கள் இல்லையென்றால் காவல்துறையின் மீது முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு கிராமிய சுயராஜ்ஜியக் கடிதம் 1995–இல் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள இறால் பண்ணைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பது இவர்களது கோரிக்கை. உச்சநீதி மன்றமும் பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு வழங்கிய தீர்ப்பு அற்புதமானது. இறால் பண்ணைகளை உடனடியாக மூட வேண்டும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைக் காலங்கடந்தேனும் தமிழ்நாடு செயல்படுத்த வேண்டும்.

சீர்காழி வட்டாரத்தில் இறால் பண்ணைகளுக்கென வாங்கி இப்பொழுது தரிசாகக் கிடக்கும் 10,000 ஏக்கர் நிலத்தை, தமிழக அரசு கையகப்படுத்தி சாகுபடிக்கு என நிலமற்ற உழவர்களுக்குத் தர வேண்டும். இதே போல மற்ற மாவட்டங்களிலும் அரசு செயல்பட வேண்டும். கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு இறால் பண்ணையால் நேர்ந்த துயரங்களை அரசு துடைக்க வேண்டும். கிழக்குக் கடற்கரை நெடுகிலும் உள்ள சதுப்பு நிலங்களில், அந்த நிலங்களுக்கேயுரிய மரங்களை வளர்ப்பதன்மூலம், புயல் முதலியவற்றின் அழிவிலிருந்து கடற்கரையையும் மக்களையும் காப்பாற்ற முடியும். இவ்வாறு முதலமைச்சரை வேண்டுகிறார் பெரியவர் செகநாதன்.

www.tamilarangam.net

ஏப்ரல் 18க்குள் தன் கோரிக்கை நிறைவேற்றவில்லை என்றால் உண்ணா நோன்பைக் கடுமையாக்குவேன் என்கிறார் செகநாதன். இந்த நாள் வரை எதுவும் நடைபெறவில்லை. முதலமைச்சருக்குத் தெரியாமலா காவல்துறை இப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கும் என்பது நமக்குள் ஒரு கேள்வி. பன்னாட்டு நிறுவனங்கள் யாரைத்தான் வசப்படுத்தவில்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இவர்களின் விடுதலைக்குச் சாதகமாக இருக்க முடியாதா? நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.

○ இன்னும் சிலவற்றை நான் சொல்ல வேண்டும். இதுநாள் வரை நான் வெளிப்படையாகவே பேசி வந்தேன். இது போதவில்லை. இனி உடைத்துப் பேச வேண்டுமென்று கருதுகிறேன். நம்மை நாமே இன்னும் கடுமையாக மறு ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். போலிப் பெருமைகள் இனியும் நமக்கு உதவ முடியாது. நமக்குள் அழுகிக் கொண்டிருக்கிறோம். இன்னும் நமக்குள் சில சக்திகள் உள்ளன. அவற்றைத் திரட்டிக் கொள்ளத்தான் வேண்டும். நண்பர்களும் பெரியவர்களும் என்னைப் புரிந்துகொள்ள வேண்டும். உடல்நலம் ஓரளவுக்குத் தேர்ந்த நிலையில் சென்னைக்குச் சென்று நிறைய நண்பர்களைச் சந்தித்தேன். நான் நிறைய கற்றுக் கொள்கிறேன். இன்னும் பலரைச் சந்திக்க வேண்டும். திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய நகரங்களுக்கும் நான் சென்று அங்கங்கே உள்ள தமிழ் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், இயக்கவாதிகள் முதலியவர்களைச் சந்தித்து, அவர்களின் செரிவான கருத்துக்களைப் பதிவுசெய்து தமிழ்நேயத்தில் வெளியிட வேண்டும். அவரவர்களை பெருமைப்படுத்துவது என் நோக்கம் இல்லை. ஆற்றல் மிகுந்த சிந்தனைகள் மற்றும் இயக்கங்களைப் பதிவு செய்ய வேண்டும். புதியவர்களை அறிமுகப்படுத்த வேண்டும். நண்பர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். ஓர் இதழ் வெளியிடுவதற்குப் படைப்புக்களைத் தருவதோடு வெளியீட்டிலும் பங்கு பெற வேண்டும். கணையாழி, இந்து பத்திரிகை மாதிரி நமக்கு இல்லை என்று சொல்வது கோழைத்தனம். நமக்கிடையில் வளம் இருக்கிறது – செல்வ வளம்.

கல்லூரிப் பேராசிரியர்கள் 15,000 / 20,000 என்று ஊதியம் பெறுகிறார்கள். இதைப் போல இன்னும் பலர். இந்தச் செல்வத்தில் பெரும்பகுதி மக்களை வறியவர்களாக்கி வந்து சேரும் பணம். அவர்களுக்கே திரும்பத் தருவதுதான் அறிவுடமை. தாய்த்தமிழ் பள்ளி எனத் தொடங்கி நாம் மக்களுக்கு ஆக்கம் செய்ய முடியும். தமிழ் அறிஞர்கள் வள்ளுவரையும் இளங்கோவையும் வாய்கிழியப் பேசிக்கொண்டு இன்னும் எவ்வளவு காலத்திற்கு மூடர்களாக இருக்க முடியும்.

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றும் பேராசிரியர் பாரதிபுத்தரன் அவர்களைத் தமிழ்ச் சிந்தனையாளர்கள் அறிவார்கள். நாய்க்க மன்னர் காலத்து சிற்பம் முதலிய கலைகளை ஆராய்ந்து அவர்

www.tamilarangam.net

முனைவர் பட்டம் பெற்றுள்ளார். கல்லூரியில் வனம் என்ற கவிதை இயக்கத்தை நடத்துகிறார். தமிழ் இயக்கத்தின் ஆற்றல்மிக்க சிந்தனையாளர் என்று அவரை இனம் காண முடியும். அவரிடம் படித்த மாணவர்கள் அவரைக் கொண்டாடுகிறார்கள். எளிய மனிதராய் எல்லோரிடமும் தோழமையோடு பழகுகிறார். என்னால் அவரோடு மனம் திறந்து உரையாட முடிந்தது. கோவைக்கு அவரை அழைத்த ஐந்திணை நண்பர்கள் நம் நன்றிக்குரியவர்கள் அவரிடம் நிறைய கேள்விகள் கேட்டேன்.

தமிழ் வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு மிக மிக முக்கியமான காலகட்டம். எல்லாவகைகளிலும் தமிழ் இந்த நூற்றாண்டில்தான் மறுமலர்ச்சி பெற்றது. வரலாறு, இயக்கம், தமிழியல் ஆய்வுகள் என்று பல துறைகளில் தமிழன் தன்னை திரட்டிக் கொள்வதற்கான அரிய முயற்சிகள் நடைபெற்றன.

தமிழன் தன்னை முழு அளவில் இனம் கண்டு கொண்டது இந்த நூற்றாண்டில்தான். இவை குறித்து, பிறிதொரு சமயம் நாம் நிறையப் பேச முடியும். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தொடங்கி கடைசியாக தெ.பொ.மீ., மு.வ., தமிழண்ணல், பாவாணர் என்று பலரும் இந்தத் தமிழ்ப் பேரியக்கத்தை வளர்த்தவர்கள். இத்தகைய வளர்ச்சிக்காக நாம் பொதுமைப்படுகிறோம். இந்த நூற்றாண்டின் இறுதியில் தமிழும் தமிழ் வரலாறும் அழிந்து வருவதையும் பார்க்கிறோம்.

21–ஆம் நூற்றாண்டு தமிழர் என்ற முறையில் நமக்குப் பெரும் சோதனைகளைத் தருவது உறுதி. 20–ஆம் நூற்றாண்டில் நமக்குள் திரட்டிக் கொண்ட ஆக்கங்கள் பலவற்றை, இந்த புதிய நூற்றாண்டின் வாயிலில் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். முன்னைய ஆக்கங்களில் எவை / இனியும் நிற்கும். தமிழியக்கங்கள் இந்த மறு ஆய்வினை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். கலைஞரையோ இன்னொருவரையோ இனியும் நம்பிப் பயன் இல்லை. இப்படித்தான் நாம் தொடங்க முடியும். மக்களை நாம் இன்னும் நெருங்கிச் செல்வதற்கும் தமிழ் வரலாற்றை முன் நகர்த்துவதற்கும் நம்மை அணியப்படுத்துவதற்கு நமக்குள்ள தகுதிகள் என்ன? என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். தமிழ் தவிர வேறெதற்கும் நாம் வசப்பட வேண்டியதில்லை.

இத்தகைய கேள்விகளோடு பாரதிபுத்தரன் அவர்களோடு நானும் நண்பர்களும் உரையாடினோம். பெரும்பாலான அறிஞர்கள், சிந்தனையாளர்கள் இயக்கங்கள் பற்றிப் பேசினோம். பாரதிபுத்தரனின் கருத்துக்கள் தொகுப்பு அடுத்த தமிழ் நேயத்தில் வெளிவரும். இப்படி இன்னும் சில தமிழர் அறிஞர்கள், மற்றும் இயக்க நண்பர்கள் / பெரியவர்களோடு நான் உரையாட வேண்டும். இந்தத் தமிழ் நேயத்தைப் படிக்கும் நண்பர்களும் பெரியவர்களும் அருள்கூர்ந்து என்னோடு தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். சிந்தனையில் ஒத்தவர்கள் மட்டுமல்லாமல், கடுமையாக முரண்படுபவர்களும் என்னோடு தொடர்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளலாம். நாடு, தமிழ், மக்கள் இவைதான் நமக்கான இலக்குகள். தமிழ் முதலியவற்றை வைத்துச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் துணிந்து செய்பவர்கள் நமக்குப் பகைவர்கள்.

○ சாகித்ய அகாதமியின் பரிசு பெற்றதற்காக பெரியவர் தி.க.சி அவர்களை கருணையின்றி நண்பர்கள் சாடுகின்றனர். திறனாய்வில் தி.க.சி. அவர்களின் தகுதி குறித்து கேள்வி எழுப்புகின்றனர். அகாதமியின் தேர்வுகள் பெரும்பாலும் விமர்சனத்துக்கு உள்ளாவது வழக்கமாகி இருக்கிறது. நூற்றுக்கு நூறு நடுநிலையோடு தெரிவு செய்வது சாத்தியமில்லை. கேள்விக்கு உள்ளாகாத தெரிவு என்று எதுவும் இருக்கமுடியாது. தி.க.சி. அவர்களைத் தெரிவு செய்யப் பரிந்துரை செய்தவர்கள் என்ற முறையில் பெரியவர் வல்லிக்கண்ணன், சின்னபாரதி ஆகியவர்களின் தகுதி, நேர்மை பற்றி முதன்மையாகப் பேசுவதுதான் நியாயமாக இருக்கும். சு.ரா. அவர்களின் "குழந்தைகள், பெண்கள், ஆண்கள்", நாவலைத் தள்ளி வைத்து விட்டு தி.க.சி. அவர்களைத் தெரிவு செய்வது ஒரு கொடுமை. சு.ரா. அவர்களைப் பரிந்துரை செய்தவர்கள் அறிஞர் குழந்தைசாமி என்று கூறுகிறார்கள். பரிசு பெற்ற தி.க.சி. அவர்களின் மார்க்சியம், முற்போக்கு முதலியவற்றையும் கேள்விக்கு உள்ளாக்குவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்க வேண்டியதும் இல்லை. திறனாய்வில் நேர்மையைப் போலவே கருணைக்கும் இடம் இல்லாமல் போய்விடக் கூடாது. தி.க.சி. அவர்களிடம் எனக்கும் கருத்து வேற்றுமை நிறைய இருந்தபோதிலும் அவரது நேசம் என்னைக் கவருகிறது. மரியாதைக்குரியவர் தி.க.சி.

○ சங்கப் பலகை, (குறள்பீடம்) ஆகிய சொற்கள் நமக்கு அருவருப்பைத் தருகின்றன. ஒரு மூன்றாம் தர நாவல் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதன் மூலம் தமிழுக்கு மரியாதை கிட்டாது. கலைஞரை சிறந்த நாவல் ஆசிரியர், கவிஞர் என்று இச்சகம் பேசுபவர் குறள்பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். குறள்பீடத்தின் தலைவராக முதல்வர் இருப்பதற்கு நியாயம் இல்லை. தமிழில் சிறந்த நாவலாசிரியர், திறனாய்வாளர் என்று வேண்டியவர்களைத் தெரிவு செய்கிறார்கள். முதல்வர் முன்னிலையில் கருத்து வேறுபாடுகளைத் தெரிவிப்பதற்கான மனஉறுதி எவருக்கும் இல்லை. நவீனத் தமிழ் இலக்கியம் மற்றும் திறனாய்வின் சாதனையைக் கண்டு கொள்ளாத குறள்பீடம் குறித்து நாம் சொல்வதற்கு எதுவும் இல்லை. குறைந்த அளவுக்கு நம் மரியாதைக்குரிய டாக்டர் லூர்து, மனைவி முஸ்தபா ஆகியவர்கள் கண்டுகொள்ளப்பட்டிருக்கிறார்கள். முதல் தகுதி பரிசுக்கும், மூன்றாம் தகுதி பரிசுக்கும் இடையில் இருப்பது பெரும் பள்ளம். எந்தத் தெரிவுக்குழுவும் தெரிவு செய்வதற்கான நியாயங்களை மக்கள் முன் வைப்பதில்லை. தகுதிவாய்ந்த இன்னொரு அமைப்பை திறனாய்வாளர்கள் உருவாக்கத்தான் வேண்டும். 1999-ஆம் ஆண்டுக்குரிய விளக்கின் சார்பிலான புதுமைப்பித்தன் பரிசு பெரியவர் நகுலன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் தகுதி மிக்க ஒருவருக்கு வழங்கப்படும். இந்த விருதுக்காக, நாம் மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

www.tamilarangam.net

விலை ரூ. 20.00

## *செத்தவர்களை ஏமாற்றியவர்களைப் பற்றிய செய்திகள்*

செத்தவர்களைத் தொடர்ந்து
சாகப்பண்ணும் பொருட்டு முன்பு ஞாபகங்களில்
உயிரோடிருந்த அவர்களை துரத்துகிறோம்

நாம் களிகூர்ந்து
வாழ்ந்து வந்து கொண்டிருந்தும்
நம்மையே நாம் காட்டிக் கொடுத்துவிட்டோம்

நம்முடைய் பிணத்துக்கு
நாம் பயப்படுகிறோம்

நம்மால் சிநேகிக்கப்பட்டவர்கள்
சாகும்போது நமது குரல்வளையை
அமுக்கிக் கொல்லும்படி அவர்களிடம்
கெஞ்சித்திருந்திருக்கலாம்.

நாம் தற்கொலை செய்து கொண்டவர்களை
வீரர்களென்று ஒத்துக்கொள்ள தயங்குகிறோம்

இப்போது
இரத்தவோட்டம் நிறைந்த நம் பிணத்துக்கு
முத்தம் வைக்கிறார்கள்
அப்பாவிகள்

- பாலை நிலவன்

பதிப்பாசிரியர் :
ஞானி (கி. பழனிச்சாமி)

அச்சாக்கம் :
ஸ்ரீ விஷ்ணு அச்சகம், காந்திபுரம், கோயமுத்தூர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்